பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 15 திங்கட்கிழமை (29.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 123

# கடத்தப்பட்ட மாணவனின் படுகொலை; ஈ.பி.டி.பி. உறுப்பினருக்குப் பிடியாணை

## நாட்டைவிட்டு வெளியேறத் தடை உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

குடாநாட்டில் பெரும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் கபிலநாத்தின் படுகொலை தொடர்பாக -

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.யின்) நுணாவில் முகாமில் செயற்பட்டுவந்தவர் எனத் தெரிவிக்கப்படும் ஜீவன் என்ற இளைஞனைத் தேடிக் கண்டுபிடித்துக் கைதுசெய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

அவர் நாட்டை வீட்டு வெளியே தப்பிச்செல்ல இயலாதவகையில் விமானநிலையம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், சுங்கத்திணைக்களம் ஆகியவற்றுக்கும் பிடிவிறாந்தை அனுப்புமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வியாழன் யாழ். வருகி[illegible]

யாழ்ப்[illegible]ம

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச[illegible] வடிக்கையில் ஈடுபடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வியாழக்கிழமை வருகின்றார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சுகயீனம் காரணமாக இறுதி நே[illegible]தில் தனது விஜயத்தை ஒத்திவைத்தார்.

வியாழனன்று யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுவதுடன் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றவிருக்கின்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பங்குபற்றவிருக்கும் நிகழ்ச்சி தொடர்பான விவரம் நாளை வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## மாணவன் கபிலநாத் படுகொலை; சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் சம்பந்தம்

### ஈ.பி.டி.பி. குற்றஞ்சாட்டுகிறது இப்படி

யாழ்ப்பாணம், மார்ச் 29

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இந்தக் கொலை வெறியாட்டத்தை நடத்தியோர், வெளிநாடு ஒன்றிலிருந்து வந்தவர் தலைமையில் யாழ். தேர்தல் களத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு ஒன்றின் வேட்பாளர்களே என்று விசாரணைகளின் போது வெளிச்சத்துக்கு வந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

நாளை

கணக்கீடு பகுதி II, தமிழ்

அரசியல் விஞ்ஞான மூலதத்துவம்

## கொழும்பு வந்தார் வரதர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு - கிழக்கு மகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சின் தலைவருமான அ.வரதராஜப்பெருமாள் நேற்றுப் பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

இந்தியாவில் பல வருடங்களாகத் தங்கியிருந்த அவர், தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக நாடுதிரும்பியுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்துக்கு ஓரிரு தினங்களில் வரவுள்ள அவர், தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மகாண சபையின் முதலாவது முதலமைச்சர் பதவியை ஏற்றிருந்த அவர், தனிநாடு பிரகடனம் செய்ததை அடுத்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவர் ஆரம்பத்தில் ஒரிசாவில் தங்கியிருந்தார். பின்னர் இந்திய அரசின் அனுசரணை யுடன் புதுடில்லியில் நீண்ட காலம் தங்கியிருந்தார். (ஒ-1)

## தென்மராட்சி மாணவர்களை நாளை கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலைகளுக்குச் செல்லுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துத் துக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமை தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் உடல்நிலை மோசம் எனப் புகார் மூச்சு விடவும் பேசவும் கஷ்ரப்படுகின்றாராம்

கொழும்பு, மார்ச் 29

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல் நிலைமை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது என்றும், அவர் சுவாசிப்பதற்கும் பேசுவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார் என்றும் அவரது பாரியார் அனோமா பொன்சேகா நேற்றுக் கூறினார்.

பொன்சேகா மிக விரைவில் குணமடைய வேண்டி இன்று நாடளாவிய ரீதியில் சமய வழிபாடுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 28.03.2010 அன்று இடம்பெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணிப் பட்டம் பெற்ற

செல்வி சுகிந்தா சிவபாதம் செல்வி தேனுகா வரதராஜன்




ஆகியோர் மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

''வரதமாளிகை''
59, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (96083)

கவிஞர் வே. ஐயாத்துரை
குடும்பம்.



## சேவை நலன் பாராட்டு



செல்வி திலகவதி காசிநாதன்

(சங்கீத டிப்ளோமா, வீணை - யாழ்.பல்கலைக்கழகம், கல்வி டிப்ளோமா, தேசிய கல்வி நிறுவகம், மகரகம, ஆங்கில டிப்ளோமா துகியக்கொட, கொழும்பு, ஆசிரியர் தராதரப்பத்திரம், வீணை - வட இலங்கை சங்கீத சபை)

எமது பாடசாலையில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் 16.01.2007 முதல் நற்சேவையாற்றி தனது 26வருட ஆசிரிய சேவையை நேற்று நிறைவு செய்த எமது ஆசிரியரை தனது ஓய்வுக் காலத்திலும் நிறைவான ஆரோக்கியத்துடன் கல்விப்பணியைத் தொடர மனம்நிறைந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
(96026)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவராஜா நிமலன் B.A (Hons)



26.03.2010 இல் நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் கலைப்பீடத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்ற எமது நண்பனை பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

வாழ்த்துவோர் நண்பர்கள் :
செந்துரன், விமலன், சுரேந்திரா, ராஜவேல், சயந்தலிங்கம்.

அல்வாய். (c/566235)



## Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்

ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஜேர்மன் எம்பசி பரீட்சைக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மேலும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
T.P : 077 4842464, 021 3216928, 0779927117


## மரண அறிவித்தல்

பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் குகனேசசர்மா

காரைநகர், களபூமி, திக்கரை முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோயில், திக்கரை மூருக மூர்த்தி கோயில் ஆகிய கோயில் களில் ஆதீன குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் குகனேசசர்மா நேற்று முன்தினம் (27.03.2010) சனிக்கிழமை இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பூமகாலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சிவாஜிக்குருக்கள், சரோஜினிதேவி, சற்குணராஜசர்மா, சண்முகராஜக்குருக்கள், சரவணபவானந்த சர்மா, சசிகலாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் வசந்தராணி, சுப்பிரமணியக் குருக்கள், கிருபாகரி, நவரஞ்சினி, சிவானந்தி, மனோரஞ்சன், பாலகிருஸ்ணக்குருக்கள் ஆகியோரின் அருமை மாமனாரும் சிவரஞ்சினி சோதிபாலசர்மா, ஹேமசுதா, பால்ராஜ் சர்மா, ஜெகஜ்ஜனனி, ஷண்மதுரன், யதுர்ஷன், ஜீவகன், பாலசங்கர சர்மா, யதுகுலசர்மா, துவாரகா, பிரதாபசர்மா, பிரசன்னசர்மா, பிரசாந்தன் சர்மா, ரம்யா, சித்ரூபி, குகப்பிரியசர்மா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களபூமி, காரைநகர்.
தொ.பே: 0771710748

தகவல் :
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(96089)

## வரணி மாவில் வயலில் கட்டாக் காலிகளால் நெற்பயிர் அழிப்பு

தென்மராட்சி கிழக்கு, மார்ச் 29

வரணி இடைக்குறிச்சி மாவில் வயல் வெளியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் முற்றகாக் கட்டாக்காலி கால்நடைகளினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

பயிர் செய்த நெற்செய்கையாளர்கள் பலர் விதை நெல்லைக்கூட பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் பலர் கவலை தெரிவிக்கின்றனர்.

அழிந்த நெல் அறுவடை ஒருபுறமும் கட்டாக்காலி கால்நடைகள் மறுபுறமும் பயிர்களைப் பதம்பார்த்த சம்பவமே இம்முறை இடம்பெற்றுள்ளது.

கட்டாக்காலி கால்நடைகள் வருடா வருடம் பயிர்களுக்கு சேதம் விளைவித்து வருகின்றமையால் பலர் இப்பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கையைக் கைவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-122)

## புலமைப்பரிசில் நிதியம் மூலம் மாணவருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த அமரர் சண்முகம் இரத்தினம் நினைவாக புலமைப் பரிசில் நிதியம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினூடாக வருடா வருடம் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைப்பரப்பில் கல்வியில் ஆர்வமுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவருக்கு வருடா வருடம் மேற்படி நிதியின்மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிதி வங்கியிலிடப்பட்டு வருடா வருடம் கிடைக்கும் வட்டிப்பணத்தின் மூலம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதியாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-207)

## தேர்தல் விளம்பரங்களுக்கும் மாணவர் ஒன்றியத்துக்கும் தொடர்பு ஏதுமில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

பத்திரிகைகளில் தேர்தல் சம்பந்தமான விளம்பரங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எனக் குறிப்பிடப்பட்டு வெளிவரின் அந்த விளம்பரங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது. (ஓ)

## சமய நூல்களைக் கொண்ட விற்பனை நிலையம்.

சுழிபுரம், மார்ச் 29

சமய நூல்கள் மட்டும் கொண்ட விற்பனை நிலையம் ஒன்றை வழக்கம்பரையில் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலில் சமய நூல்கள் மட்டும் கொண்டவையாக ஆரம்பித்து பின்னர் சகல நூல்களும் கொண்டதாக விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புராண படன நூல்கள், திருமுறைகள் கொண்ட வெளியீடுகளை வெளியிட்டவர்கள் விற்பனை நிலையச் செயலாளர் வழக்கம்பரை சுழிபுரம் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-28)

## இந்திய திராட்சை 600 ரூபாவுக்கு யாழ். நகரில் விற்பனை

வண்ணை, மார்ச் 29

இந்திய திராட்சைப்பழம் தென்பகுதி வியாபாரிகளால் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு கிலோ 600 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இளம் பச்சை, கரும் நாவல் போன்ற நிறங்களில் சிறிய பொதிகளில் கவர்ச்சிகரமாக விற்பனை நடைபெறுகிறது. ஆயினும் விலை அதிகரித்தே காணப்படுவதாகப் பாவனையாளர் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை உள்ளூர் திராட்சைப் பழங்கள் சிறிது சிறிதாகச் சந்தைக்கு வர ஆரம்பித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலக்கிரமத்தில் இப்பொழுது ஒரு கிலோ 300 ரூபாவுக்கு விற்பனையாகும் உள்ளூர் திராட்சைப் பழங்கள் மலியக்கூடுமெனவும் எதிர்வு கூறப் படுகிறது.

உள்ளூர் திராட்சைப் பழங்கள் விற்பனைக்கு வராததன் காரணமாகவே இந்திய திராட்சைப் பழங்களின் விலை இவ்விதம் அபரிதமாக உயர்ந்துள்ளதாக அறியப்படுகிறது. (1-160)


## பணியாளர்கள் தேவை

யாழ். மண்ணில் மிகப் பிரபல்யமான, உல்லாசப் பயணத்துறை அனுமதிபெற்ற விருந்தினர் விடுதிக்கும், உணவகத்திற்கும் பின்வரும் வேலையாள்கள் தேவை:

உணவுடன் தங்குமிட வசதியும் உண்டு

1) Room Boy
2) சுத்திகரிப்பாளர்
3) சமையல் உதவியாளர்
4) பூந்தோட்ட வேலை தெரிந்தவர்
5) உணவு பரிமாறுபவர்

நேர்முகப்பரீட்சைக்கு 30.03.2010 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சமுகமளிக்கவும்.

தொ.பே:
0212225876
0776016310
0214590052

மிலேனியம் றெஸ்ரோறன்ஸ் & கெஸ்ற் ஹவுஸ்
70/60 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மோசஸ் யோண் பொஸ்கோ

பிறப்பு
1940.01.31

இறப்பு
2007.03.29

அழகான எம் குடும்பத்தின்
அர்த்தமான பரம் பொருளே ஐயா!
அன்பு மொழி பகர்ந்தும்
ஆறுதல் கரம் அளித்தும்
நிழல் தந்த உங்களை
இழந்து நாம் நிற்கையில்
ஆண்டுகள் மூன்று ஆகியும்
ஆறவில்லை எம் மனம்
உம் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

சொந்த முகவரி:
தாழையடி.
தற்காலிக முகவரி:
பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம். (96073)

குடும்பத்தினர்.

## விக்னேஸ்வராவின் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் 35 வருட காலம் கல்வி சாரா ஊழியராகக் கடமையாற்றி கல்லூரிக்கு பெருமை சேர்த்த

அமரர் சின்னத்துரை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அமரத்துவம் அடைந்த அன்னாரின் சேவைகளை நினைவில் கூர்ந்து அவர் தம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

விக்னேஸ்வராக் கல்லூரிச் சமூகம்.
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.
(சி/566250)

## மரண அறிவித்தல்



செல்வி செல்லையா சாந்தகௌரி

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்லையா சாந்தகௌரி நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்பாள் தம்பதிகளின் ஏகபுத்திரியும் ஸ்ரீமுருகன், சுந்தரலிங்கம், சங்கரலிங்கம் ஆகியோரின் அன்புத் தங்கையும் செல்விமலர், இராசலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (96088)

தகவல் :
குடும்பத்தினர்.


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

மக்கள் பணியே தன் பணியாய்
மனிதநேய மகத்துவத்தில்...

அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இந்தமுறை தேர்தலுக்கு இல்லை

இலங்கைப் பொதுத் தேர்தலின் உச்சக்கட்டம் நெருங்கி விட்டது.

பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முற்றும் முழுதாக ஜனநாயகமற்ற சூழலில் இடம்பெறுகின்றன எனக் கவலை வெளியிட்டிருக்கின்றன சுயாதீனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள்.

தேர்தல் தொடர்பாக சட்டப் புத்தகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளும் - விடயங்களும் - மீறப்படுகின்றன என சுயாதீனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' வெளிப்படையாகவே விசனம் தெரிவித்திருக்கின்றது.

வன்முறைகள், அச்சுறுத்தல்கள், ஏனைய மிரட்டல்கள் போன்றன பல மடங்காக அதிகரித்துள்ளன எனத் தெரிவித்துள்ள அந்தஅமைப்பு,இந்தநிலைமையைக்கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறிதளவு கூட நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டியிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

தேர்தல் பிரசாரக் 'கட் -அவுட்'களைக் காட்சிப்படுத்துவது, சுவரொட்டிகளை ஒட்டுவது போன்றனவெல்லாம் தேர்தல் சட்டங்களின் கீழ் தவறுகள்; முறையற்ற நடவடிக்கைகள். ஆனால், பொலிஸ் நிலையங்களுக்கு முன்னாலேயே - அவற்றின் முன்றிலிலேயே - 'கட் - அவுட்'கள் வைக்கப்பட்டிருக்கும் கேவலமான நிலைமையை மற்றொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' வேதனையோடு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இதேசமயம், இந்தப் பொதுத் தேர்தலை ஒட்டிய தபால் மூல வாக்களிப்புக் கூட பெருங்குளறுபடிகள், திருக்கூத்துகள், திருவிளையாடல்களோடுதான் அரங்கேறியிருக்கின்றது ...ற தகவலும் அம்பலமாகிப் பரவியிருக்கின்றது.

இந்தத் தேர்தலில், விருப்பு வாக்குகளைப் பெறுவதற்காக உட்கட்சி மோதலே மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ள இச்சூழலில் -

பொதுத் தேர்தல் நெருங்கும் சமயம், நாடு பெரும் ரணகளத்தில் - வன்முறை ஆர்ப்பரிப்பில் - மூழ்குவதற்கான பேரபாய நிலைமை தோன்றியிருக்கின்றது என எச்சரிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலின் பெயரால் ஓர் அராஜக நாடகம் அரங்கேறக் கூடிய வாய்ப்புகள் அப்பட்டமாகவே தோற்றுகின்றன என்று கூறுவது மிகையல்ல.

அத்தகைய நிலைமை நேர்வதைத் தவிர்ப்பதற்கும் -

அப்படியல்லாமல் அத்தகைய குளறுபடிகள், 'சுத்துமாத்துகள்', பித்தலாட்டங்கள், 'பம்மாத்துகள்' இத்தேர்தலில் நடைபெற்றால் அவற்றை அம்பலப்படுத்தவும் -

குழப்பங்களோடு அரங்கேறிய பொதுத் தேர்தலை நீதி, நியாயமான தேர்தல் என்று பொய் கூறி, சமாளித்து, நாடகம் ஆடுவதைத் தடுப்பதற்கும் -

மிக முக்கியமான கட்டமைப்புகளாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இயங்குகின்றன. இந்த வகையில் வெளிநாடுகளைச் சேர்ந்த - சர்வதேச கட்டமைப்புகளைப் ...திநிதித்துவப்படுத்துகின்ற - கண்காணிப்புக் குழுக்களின் ...கு, பணி மிக முக்கியமானதாகும்.

அவற்றின் பக்கச்சார்பற்ற நடுநிலைத்தன்மை கருதியும், சுயாதீன செயற்பாடு தொடர்பாக அவற்றுக்குரிய நற்கீர்த்தியின் அடிப்படையிலும் இந்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களின் பங்கு, பணி, சேவை ஆகியன இந்த விடயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆனால் இம்முறை ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவினர் உட்பட சகல வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் சேவையும் விடுபட்டுப் போயிருப்பதான அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இம்முறை தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எவருமே அழைக்கப்படவில்லை என்பதைத் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகமே ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குக் குறைந்த பட்சம் ஆசிய கண்காணிப்புக்குழு ஒன்றாவது பணியில் ஈடுபட்டிருந்தது.

இந்தப் பொதுத் தேர்தலுக்கு அதுவும் இல்லை. ஆனால் இந்த நிலைமை நேர்ந்தமைக்கு இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளைத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறைகூறுகின்றமைதான் மிகவும் வேடிக்கையானது.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைத் தருவிப்பதில் அரசியல் கட்சிகள் ஈடுபாடு காட்டாதமையால்தான் அவர்களை அழைக்க முடியாமல் போய்விட்டது என்று இப்போது உப்புச்சப்பற்ற விளக்கம் - வியாக்கியானம் - அளிப்பதற்கு முற்படுகின்றார் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

ஓய்வு பெறுவதற்கான வயது எல்லை தாண்டி ஏழு, எட்டு ஆண்டுகளாகியும் - அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் கீழான அரசமைப்புக் கவுன்ஸில் இயங்காத காரணத்தால் அதன்கீழ் நியமிக்கப்படவேண்டிய புதிய தேர்தல் ஆணையாளர் நியமனம் பெறாததால் - தற்போதைய ஆணையாளர் பதவியில் தொடர்கிறார். வயதாகியும் பொறுப்பைக் கைவிட முடியாத இக்கட்டு அவருக்கு.

அவர் முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகின்றார், செயலாற்றுகின்றார் எனக் குறிப்பிட்டு, அதை ஆட்சேபித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஏற்கனவே நீதிமன்றுக்குச் சென்றிருக்கின்றது.

இந்தப் பின்னணியில், ஒரு தேர்தலுக்கு மிக முக்கியமான விடயமான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் தரப்பை அழைக்காமலேயே இத்தேர்தலை நடத்த முற்படுகின்றார் தேர்தல் ஆணையாளர்.

ஐ.தே.கட்சி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள வழக்குக்கு வலுச் சேர்க்கும் விதமாகவே அவரும் நடந்து கொள்கின்றார் போலும்.....!

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிச்சயம்; ஆளும் தரப்பினரின் அபார நம்பிக்கை இது

**நேற்று 28.03.2010 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி**

ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறப் போகும் நாடாளுமன்றத்தேர்தல் தொடர்பாக இடம்பெற்றுவரும் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ள ஒரே ஒரு அரசியல் அலை என்னவென்றால் சகல கட்சிகளிலிருந்தும் போட்டியிடுகின்ற அணிகளுக்கிடையில் வாக்காளர்களின் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள் வதற்காக நடைபெற்றுவரும் மோதல்களைத் சுட்டிக்காட்டித் தானாக வேண்டும்.

பொது மக்கள் தேர்தல் பிரசாரங்களில் அதிக அக்கறை காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கான காரணம் வெளிப்படையானது. ஜனவரி 26 ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏறத்தாழ 1.8மில்லியன் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றியீட்டியமை காரணமாகவே இந்த அக்கறையின்மை தோன்றியிருக்கின்றது எனலாம். வாக்களிப்பில் மோசடிகள் இடம்பெற்றதாக வெளியான உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுக்களைத் தவிர வேறொன்றுமில்லை. எம்பிலிப் பிட்டிய தொகுதியில் ஜெனரல் பொன்சேகாவுக்குச் சார்பாக அளிக்கப்பட்டிருந்த வாக்குச் சீட்டுக்கள் சில எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்

## வெறும் பகற்கனவு என எதிர்க்கட்சிகள் விமர்சனம்

பட்டிருந்தமை மட்டுமே எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப் பட்டிருந்த ஒரு ஆதாரமாகும்.இது பற்றி குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுத் தேர்தலின் முடிவு தொடர்பான பெரும் பாலான மக்களின் கணிப்பு முடிந்து போன ஒன்றாகவே தென்படுகிறது. அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெற்றி நிச்சயம் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி வெல்லக் கூடிய ஆசனங்கள் தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன. எனவே ஆளும் கட்சிக்கு வரும் நாடாளுமன்றத்தில் 2 /3 பங்கு பெருன்பான்மை கிடைத்துவிடலாம் என்று கருதப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது இப்போதைய தேர்தல் விஞ்ஞாபனம் 2005 ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனையின் மேம்படுத் தப்பட்ட ஒன்று என்று தெரிவித்துள்ளது. அந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்காக உருவாக்கப்பட்டது அந்த விஞ்ஞாபனம், இப்பொழுது அது மகிந்த சிந்தனையின் எதிர்கால தரிசனம் என பெயரிடப்பட்டுள்ளது.

**வெவ்வேறு விஞ்ஞாபனங்கள்**

ஐக்கிய தேசிய முன்னணியும் ஜனநாயக தேசிய முன்னணியும் தனித் தனியே வெவ்வேறு விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன.

எதுவானாலும் இந்த மூன்று விஞ்ஞாபனங்களில் எதுவுமே தேர்தல் பிரசாரங்களில் பிரதான இடத்தைப் பிடித்திருப்பதாகத் தெரியவில்லை. பிரசாரங்களை சில வேட்பாளர்கள் பணக் கட்டுகளுடன் எதிர்கொள்கின்றார்கள். மற்றவர்கள் கவலையில் மூழ்கிப் போயுள்ளார்கள்.

பெரிய கட்சிகளைத் தவிர்ந்த அதிஷ்டமற்ற பலர் அன்றாட செலவுகளைக் கவனிப்பதற்குக் கூட வட்டிக்கு பணம் வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆதரவாளர்களுக்கு உணவு அல்லது சுவரொட்டிகளுக்கு செலவு செய்வது, எரி பொருள் வாங்குவது ,இன்னும் ஏழ்மையிலுள்ள வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது இவைகளுக்கெல்லாம் அவர்களுக்கு பணம் தேவைப் படுகிறது.

இந்தவகையில்தான் அரசியல்வாதி ஒருவர் லஞ்சம் கொடுப்பதிலும், வாங்குவதிலும் பழக்கப்படுகின்றார். பதவியில் அமர்ந்ததும் லஞ்சம் வாங்குவதிலும் ஊழல் நடவடிக்கைகளிலும் தாராளமாக இறங்கிவிடுகின்றார்கள்.

தேர்தல் பிரசாரத்துக்காக சொத்தை அடைமானம் வைத்து அல்லது வட்டிக்குப் பணம் பெற்று நிதிசேகரித்து விட்டால் அவை திருப்பிகொடுக்கப் பட்டாக வேண்டும் அல்லவா? இது நிற்க.

**பொன்சேகாவின் சார்பில் ஆள்கொணர்வுவழக்குத் தாக்கல்**

ஜெனரல் பொன்சேகா தாம் கைது செய்யப்பட்டிருப்பது சட்ட விரோதமான செயல் எனக் காட்டுவதற்காக தமது சட்டத்தரணிகள் மூலமாக மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆள்கொணர்வு வழக்கொன்றை பதிவு செய்துள்ளார்.

பல விடயங்களுக்குள் பாதுகாப்பு அலுவலர்களின் பிரதம அதிகாரி என்ற முறையில் ராணுவத்தின் தளபதியின் கட்டளைகளுக்கு தாம் கீழ்ப்படிய வேண்டிய நிலையில் இருக்க வில்லையென்பது அவர் தெரிவித்திருக்கும் காரணங்களில் ஒன்றாகும். உண்மையில் குறித்த அதிகாரியானவர் ராணுவத் தளபதி , விமானப் படைத்தளபதி மற்றும் கடற்படைத் தளபதி ஆகியவர்களுக்கு உயர் நிலையில் உள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. அரசின் தரப்பில் சட்டமா அதிபர் மொஹான்பீரிஸ் ஆஜராகியிருந்தார். உயர் நீதிமன்றின் நடை முறையிலுள்ள ஒரு கட்டளையானது மேன் முறையீட்டு நீதிமன்றினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாகாது என்று அவர் வாதிட்டார்.

சட்ட விரோதக் கைது, சட்டவிரோத தடுப்புக் காவல், முறைதவறி நடத்தப்பட்டமை, பாரபட்சம் காட்டியமை, மனிதாபிமானமற்ற முறையில் தரக்குறைவாக நடத்தப்பட்டமை போன்றவற்றை உயர்நீதிமன்றம் ஆரம்ப நிலையிலேயே ஆலோச னைக்கு எடுத்துக் கொண்டது என்று கூறிய அவர் பெப்ரவரி 23 ஆம் திகதி இடைக் கால நிவாரணக் கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையை ஆட்கொணர்வுமனுவானது நசுக்கி விடுவதாக அமைகிறது என்று கூறினார்.

ஜெனரல் பொன்சேகாவுக்காக வாதம் செய்த ரொமேஷ்டி சில்வா தமது தரப்பினரான பொன்சேகா அவர் கைது செய்யப்பட்ட போது ராணுவ சட்டங்களுக்கு உட்பட்டவராக இருக்க

## தேர்தல் ஆணையாளர் நடத்தையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிருப்தி

வில்லை என்றார். பொது ராணுவ நீதிமன்றின் முதலாவது குற்றப் பத்திரிக்கையானது 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர்/நவம்பர் மாதங்களில் புரியப் பட்ட குற்றங்களுக்கானவை.ஆனால் 2009 ஆம் ஆண்டு ஜூலை பதினான்காம் திகதி அவர் ஓய்வுபெற்று விட்டார் என்று சட்டத்தரணி கூறினார்.

இரண்டாவது குற்றப்பத்திரிகையானது 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட்/ ஒக்ரோபர் மாதங்களில் இடம் பெற்ற குற்றங்கள் தொடர்பானது. 2010 பெப்ரவரியில் கைது நடைபெற்றுள்ளது. குறிக்கப்பட்ட 6 மாதங்களுக்கு பின்னராகும். எனவே இரண்டு குற்றப் பத்திரிகைகளும் சட்டத்தில் தவறானவை. ராணுவ சட்டப்படி கைது செய்யப்பட்டிருப்பதானது சட்டவிரோதமான செயல் என்று கூறிய சட்டத்தரணி இந்த நிலையில் தடுப்புக்காவலில் இருந்து அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேல் முறையீட்டு நீதிமன்றின் அடுத்த அமர்வு மார்ச் 30 ஆம் திகதி மீண்டும் நடைபெறும்.

பொன்சேகாவின் பத்திரிகை பிரசார விளம்பரங்கள் சில பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன. கொழும்பு ஆயர் வண.சிறியானந்தபெர்னாண்டோ ஆட்சேபனையொன்றை கிளப்பியுள்ளார். ஒரு கட்சி சின்னத்துடன் வெளியாகியிருந்த பத்திரிகை விளம்பரம் தொடர்பாக கத்தோலிக்க சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர் என அவர் கூறியிருக்கிறார். ஜெனரல் பொன்சேகாவுக்கு வாக்களிக்கும்படி கோரி விடுக்கப்பட்டுள்ள அந்த விளம்பரம் தொடர்பாக ஆயர் சிறியானந்த பெர்னாண்டோ விடுத்துள்ள அறிக் கையில் கிறிஸ்து வானவர் மனிதனாக பூமிக்கு வந்தார். முழுபிரபஞ்சத்தையும் படைத்தவரான இறைவனின் குமாரன் அவர். எனவே அவர் முழு உலகுக்குமான மனித குமாரன். தனிப்பட்ட எந்த ஒரு கட்சிக்கும் உரியவரல்லர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் தொலைக்காட்சியில் இடம் பெற்ற ஒரு விளம்பரமும் இஸ்லாமியர்களைப் புண்படுத்துவதாக இருந்துள்ளது. கடும் எதிர்ப்பையடுத்து அந்த விளம்பரம் வாபஸ் பெறப்பட்டது.

ஜே.வி.பி. இப்பொழுது தனது ஆர்ப்பாட்டங்களுக்கு பௌத்த குருமார்களையும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இது ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்விப்பதற்காக மட்டுமல்ல கொழும்பு மாவட்டத்தில் அவரை வெற்றிபெறச் செய்வதற் குமாகும்.

**தேர்தல் ஆணையாளர் மீது யு.என்.பி. குற்றச்சாட்டு**

தேர்தல் தொடர்பில் இப்பொழுது எழுந்துள்ள ஒரு கவலையளிக்கும் விடயம் என்னவென்றால் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தொடர்பாக கிளப்பியுள்ள ஒரு குற்றச்சாட்டாகும்.

ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எழுத்து மூலம் தாக்கல் செய்துள்ள ஒரு மனுவில் திஸாநாயக்கவின் நடத்தை குறித்து கேள்வி எழுப்பியுள்ளதுடன் அவர் முரண்பாடான அறிக்கைகளை விடுத்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சிங்கள ஊடகங்களில் திஸாநாயக்க கேலிச்சித்திர விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளார். இணையத்தளம் ஒன்றில் அவரது சட்டத்தரணியான எல்மோ பெரேராவை மேற்கோள் காட்டி வெளியான தகவலில் திஸாநாயக்க கடந்த 26ஆம் திகதி (ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற அன்று) பி.ப.3.30 மணியில் இருந்து 27ஆம் திகதி பி.ப.4.45 மணிவரை எங்கிருந்தார் என்பதை பகிரங்கமாக அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவொன்றை அனுமதிப்பது தொடர்பான அவரது செயற்பாடும் அவருக்குச் சிறப்பளிப்பதாகக் காணப்படவில்லை.

ஏப்ரல் 8ஆம் திகதி நாடாளு மன்றத் தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு அபரிமிதமான வெற்றியைக் கொண்டு வந்து தரும் என்று அந்தக் கட்சியினர் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். விகிதாசார வாக்களிப்பு முறையில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைச் சாதிப்பது கடினமில்லை என்ற வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் முகாமையாளர் பஸில் ராஜபக்ஷ நம்பிக்கைகொண்டிருக்கின்றார்.

அவர் கூறுகிறார் நாங்கள் மூன்றில் இரண்டு கேட்கவில்லை. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குமுன் அனேகர் நினைத் தார்கள் பலவிடயங்களைச் சாதிக்க முடியாது என்று. விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்று ஒருவரும் நினைக்க வில்லை. சர்வதேச அழுத்தங் களுக்கு அரசு மண்டியிடாமல் இருக்க முடியாது என்று நினைத்தார்கள். ஜனாதிபதி இவைகளைச் சாதித்தார் என்றார்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை மூன்றில் இரண்டு என்பது சாத்திய மற்ற ஒன்று. அது பகற்கனவு என்கிறார் மங்கள சமரவீர. முடிவு தெரியும் நாள் வெகு தூரத்தில் இல்லை. (ப)

## நாளை

பங்குனி 16 30.03.2010
செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| திதி | : பூரணை மு.ப.08.40 வரை |
| நட்சத்திரம் | : அத்தம் மு.இ.10.24 வரை |
| சுபநேரம் | : 10.43-12.13 வரை |
| ராகுகாலம் | : 03.13-04.43 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைக்குலை விற்பனை கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய பணிமனை

கோப்பாய், மார்ச் 29

நீர்வேலியில் அமைந்துள்ள வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்க நிர்வாக செயற்பாடுகளுக்கென புதிய பணிமனைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

விரைவில் இப்பணிகள் பூர்த்தியடையவுள்ளன. அதைத் தொடர்ந்து சங்கச் செயற்பாடும் சிறப்பாக முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-72)

## பௌர்ணமி நாள் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

போயாதின ஆன்மீக சாதனை நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பஜனை, தியானம், சிறப்புச் சொற்பொழிவு, நகரசங்கீர்த்தனம் என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-6)


## விற்பனைக்கு

54 - தொடர் இலக்கமுடைய ஹைஏஸ் வான் விற்பனைக்கு உண்டு.

HIGHROOS 4 கதவுகள், மாற்றி அமைக்கக் கூடிய இருக்கைகள்.

தொடர்பு: 0785679674,021 222 1268

ஞாயிறு, திங்கள் ஆகிய நாள்களில் பார்வையிடலாம்.



# CBA வழங்கும்

## உலகளாவிய நம்பிக்கை வாய்ந்த அலுவலக உபகரணங்களை

யாழ்.வர்த்தகக் கண்காட்சி 29ஆம் திகதி இன்று யாழ்.மத்திய கல்லூரியில்

('N' Block ல்) 'என்' கட்டடத்தில் 4 ஆம் இலக்க அறையில் பார்வையிடலாம்




cba சிலோன் பிஸ்னஸ் அப்ளையன்சஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

112, ரீட் மாவத்தை கொழும்பு 4.

தொலைபேசி: 2503031, 2589908, 2501251 பெக்ஸ்:2503121

40 Years 1970 - 2010

அவசர அழைப்பு: டெக்ஸ்டர்-0777 736280 ரொபின் - 0777 260794



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி சகாயநாயகம் டொறின்

B.A. (Hons) Eco. Spl, PG. Dip. in Ed.

(ஆசிரியை, சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் PG. Dip in Ed. பட்டத்தினை 28.03.2010 அன்று பெற்றுக்கொண்ட இவரை பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய இறையாசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள் மற்றும் அத்தான், அண்ணிமார்.

இல. 29, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.



## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சைவ உணவகம் இரண்டுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. குசினி வேலையாள்கள் (சகல பிரிவு வேலைக்கும்)
2. ரீமேக்கர்
3. சப்ளையர் (ஆண், பெண் இருபாலரும்)
4. காசாளர் (ஆண், பெண் இருபாலரும்)
5. பில் கிளாக்
6. மேற்பார்வையாளர் (ஆண், பெண் இருபாலரும்)
7. மரக்கறிவெட்டுபவர்

மேற்கூறப்பட்ட வேலை செய்ய ஆர்வமுடையோர் கீழ் காணும் தொலைபேசியில் உடன்தொடர்புகொள்ளவும். 0777917753 (021 222 2373)

குறிப்பு:-

1) வேலைகள் நிரந்தரமானவை, 2) கவர்ச்சிகரமான சம்பள சலுகை, 3) இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை (96084)



## முதலாம் ஆண்டு நினைவுகளில்

மண்ணீர்ப்பு 06 ★ 01 ★ 1940

விண்ணேற்பு 09 ★ 04 ★ 2009



### அமரர் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா

திதி: 29.03.2010

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்து
அயராத உழைப்பால் எம்மை சிறப்பாக வாழவைத்த
அணையா ஒளி விளக்கே!
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் பசுமையான
நினைவலைகள் எமைவிட்டு அகலாது ஐயா.
காலன் உமைக்கவர்ந்து சென்றாலும்
கனவிலும் நினைவிலும் தங்கள் பிரிவால் துயருறும்

91/1 A, தஞ்சிலேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (இ/566254)


## வெவ்வேறு விலைகளில் சீனி விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் சீனியின் விலை வெவ்வேறு விலைகளில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ சீனி 93 ரூபாவில் இருந்து 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-300)

## இராஜ வீதி திருத்தும்

கோப்பாய், மார்ச் 29

கோப்பாய் இராஜ வீதி தார்க்கலவை இடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதிப்பகுதியில் ஏற்பட்ட பெருமழையினால் இவ் வீதி மோசமாகச் சிதைவடைந்திருந்தது. சுமார் மூன்று மாதங்களின் பின்னர் தற்போதே இவ் வீதிக்கு 'விமோசனம்' கிடைத்துள்ளது. (ஒ-72)

## சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் கூட்டம் வியாழனன்று

வண்ணை, மார்ச் 29

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

காங்கேசன்துறை வீதி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அன்றைய தினம் காலை 8.30மணிக்கு சங்கத் தலைவர் அ.அல்பேட் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சிவராசா மோகன் கலந்துகொள்வார். நிலையங்களை மூடி தவறாமல் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (1-160)

## பெண் சாரணியரின் பொறுப்பாசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கை சாரணியர் மன்றம் யாழ். மாவட்ட பெண் சாரணியப் பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மலேசியா, கொழும்பு, வவுனியா பயணம் தொடர்பாகவும் தேசிய [illegible] 'உங்களுக்குத் தெரியுமா?' புதிர்ப்போட்டிகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ-6)


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா நல்லதம்பி



இணுவிலைச் சேர்ந்த சின்னையா நல்லதம்பி 27.03.2010 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (முன்னாள் படவரைஞர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை), சூரியகுமாரன், ஞானபண்டிதன், ஸ்ரீதிருமுருககதிர்காமநாதன், செல்வக்குமாரி, லலிதாபத்மினி, கலையரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உருத்திரேஸ்வரி, மனோகலா, சித்திரா, உஷாதேவி, ஜெயுபாலசிங்கம், அரவிந்தன், பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன், சிந்துஜா, மீரா, சரண்யா, கௌசியா, கதிர், சத்தியா, குகன், தர்ஷிகன், பிரதாபன், அட்சயன், அட்சை, அபிராமி, நிவேதன், பிரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், அஜிந்தின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, இணுவில்.

தகவல்: மகன் - ந.ஸ்ரீதிருமுருககதிர்காமநாதன்

### கந்தையா நடராசா

(சமாதான நீதிவான், இளைப்பாறிய அதிபர்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், சென்னை திருவாண்மியூரை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 26.03.2010 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் கந்தையா-செல்லம்மா தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்ற இருபாலையைச் சேர்ந்த சுப்பையா-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசையா, சிவபாக்கியம், செல்வரத்தினம், இரத்தினமலர் ஆகியோரின் மைத்துனரும், தியாகராசா (ஜேர்மனி), இரத்தினராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், இராசேஸ்வரி, தியாகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகா, யோகராசா, தர்சனன், வதனா, தனேசன், துஸ்யந்தி, நிஷாந்தி, நிமலன், சேந்தன், நிவேதா, ஜெயராஜ், சிந்துசா, மயூரன், டிலானி ஆகியோரின் அன்புப் பேரனும், மதுஷன், மிதுரா, சாகித்தியா, தனுஷகன், டிலுசன், வினுஷன், வினுசா, லத்திகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.03.2010 புதன் கிழமை மு.ப. 10 மணிமுதல் ந.ப. 12 மணிவரை மின் சாரச்சுடுகாடு, பெசன்நகர், சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(96081)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வணிகர் கழகத்தின் வர்த்தகக் கண்காட்சி

## அதிகளவான மக்கள் வர்த்தகக் கண்காட்சியை நேற்றும் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்', மார்ச் 29

யாழ்.வர்த்தகக் கண்காட்சி 2010இன் இரண்டாவது நாளான நேற்றும் அதிகளவான மக்கள் ஆர்வத்துடன் கண்காட்சியை கண்டுகளித்ததைக் காணமுடிந்தது. முற்பகல் வேளையில் சற்றுக்குறைவாக இருந்தபொதுமக்களின் வருகை பிற்பகல் வேளையில் அதிகரித்திருந்தது.

தென்பகுதி வர்த்தக நிறுவனங்கள், கம்பனிகளின் காட்சியைறைகளுள் தமது பொழுதுகளைச் செலவிட்ட மக்கள், எமது பகுதி உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியிருக்கும் கூடங்களிலும் அதிக நேரத்தை ஒதுக்கி மிகுந்த ஆர்வத்துடன் அவற்றை பார்வையிட்டும், பொருள்களை கொள்வனவு செய்வதனையும் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக பனை அபிவிருத்திச் சபையினருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த காட்சியறையில் பனம் உற்பத்திப் பொருள்கள் அதிகளவில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனைப் பார்வையிடவரும் மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் பல வகையிலான தயாரிப்புப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஊடக அனுசரணை: "உதயன்"

ஐந்துக்கும் மேற்பட்ட வங்கிகளின் காட்சியறைகளையும் காணமுடிந்தது. எனினும் எதிர்பார்த்தளவு மக்களின் வருகை சற்றுக் குறைவாகவே இருந்ததனை அவதானிக்க முடிந்தது. யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பட்டமளிப்பு விழா நிகழ்வில் மக்கள் அதிகளவில் கலந்துகொண்டுள்ளமை, ஆலயங்களில் இடம்பெற்றுவரும் திருவிழாக்களிலும் உள்ளிட்ட காரணங்களாலேயே யாழ். வர்த்தகக் கண்காட்சிக்கு மக்களின் பங்குபற்றுகை குறைவாக இருக்கிறது என வர்த்தக நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள்

## உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு அதிக முக்கியத்துவம் வேண்டும்

**எஸ்.கருணானந்தசர்மா**
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி)



தென்பகுதி நிறுவனங்களும் வட பகுதி நிறுவனங்களும் சங்கமிக்கும் வர்த்தகக் கண்காட்சி யாழ்.மாவட்டத்தில் இதற்கு முன்னரும் இடம்பெற்றிருக்கிறது.

யாழ்ப்பாண வணிகர் கழகம் மிகவும் சிரமப்பட்டு இந்தக் கண்காட்சியினை ஒழுங்கு செய்திருக்கும் என நினைக்கிறேன்.

உள்ளூர் உற்பத்திக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். உள்ளூர் உற்பத்திகள் மூலமே எமது மக்கள் பயனடைவார்.எமது பகுதி உற்பத்திகள் நிறைய இருக்கின்றன. அவற்றை அறிமுகப்படுத்தி சந்தைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கவேண்டியது பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு மனிதர்களதும் கடைமையாகும். எமது உற்பத்திகளுக்காக மட்டும் கண்காட்சி நடத்தினால் அது பெறுமதியுடையதாக இருக்குமென நம்புகின்றேன்.

இந்த வர்த்தகக் கண்காட்சியில் பொதுமக்கள் பார்வையிடுவது குறைவாக இருக்கிறது.இதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

அதாவது ஏ-9 வீதி திறக்கப்பட்டதனைத்தொடர்ந்து மக்கள் தமக்குத் தேவையானவற்றை கொழும்பு விலையில் பெறக்கூடியதாக இருக்கின்றது.

அதுமட்டுமன்றி இவ்வாறான வர்த்தகக்கண்காட்சி ஏற்கனவே இடம் பெற்றிருக்கிறது.மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. அங்கே ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்துள்ளனர். அது மட்டுமன்றி பட்டம் பெற்றவர்களும், அவர்களது குடும்பத்தினரும் உறவினரும் சந்தோஷமாக 'பாட்டி' வைத்து அதில் தமது ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். அத்தோடு யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள மிகக்கடுமையான வெப்பம் என்பன இதற்கான காரணங்களாகக் கூற முடியும்.

## கண்காட்சியைப் பார்வையிட வரும் மக்களின் எண்ணிக்கை குறைவு

**எஸ்.சிவஜீவன்** (விஸ்ரா விசன் கலர்லாப்)



மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றியிருக்கிறோம். எனினும் மக்களின் வருகை மிகக் குறைவாகவே இருக்கிறது. யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வரும் பட்டமளிப்பு நிகழ்வு மற்றும் கிராமங்கள் தோறும் இடம் பெற்றுவரும் ஆலயத் திருவிழாக்கள் உள்ளிட்ட காரணங்களின் நிமித்தமே மக்களின் பங்குபற்றுதல் மிகக் குறைவாக உள்ளது.

எமது சேவைகளை அறிமுகப்படுத்தவும் அதன் மூலம் சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்தக் கண்காட்சி நிகழ்வில் பங்கு பற்றினோம். இருந்தும் மக்களின் பங்குபற்றுகை குறைவாக இருப்பதானது எமக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதாகவே இருக்கிறது. முதல் நாளில் மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இரண்டாம் நாளில் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. எனினும் அதுவும் கை கூடவில்லை.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சியில் அதிகளவிலான தென்பகுதி கம்பனிகள் நிறுவனங்களின் காட்சியறைகள் உள்ளன. அவர்களும் மக்களின் வரவு குறைவாக இருப்பது குறித்து தமது அதிருப்தியை எம்மிடம் தெரிவித்தனர்.

## பனை அபிவிருத்திச் சபையின் பொருள்கள் அனைவரையும் கவர்ந்துள்ளன


**ஏ.பாலசிங்கம்** (பருத்தித்துறை)

வர்த்தகக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்த்தேன், கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களிலுள்ள தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் மற்றும் விற்பனைப் பொருள்களும் எமது பகுதி உற்பத்திகளும் இடம் பெற்றிருந்தன.வங்கிகளும் இடம்பிடித்திருந்தன. வலுவிழந்தோர் புனர்வாழ்வு கழகத்தினரின் உற்பத்திப் பொருள்களை பார்க்க முடிந்தது. தைத்த ஆடைகள் மற்றும் அலங்கார பொருள்களை ஆர்வத்துடன் பார்த்தேன்.

அதேபோல பனை அபிவிருத்தி சபையினால் வைக்கப்பட்டிருந்த பனம் பொருள்கள், கூடைகள், ஜாம் வகைகள், ஒடியல் போன்ற பொருள்கள் நிறைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான எமது மாவட்டத்தின் தயாரிப்புகள் இன்னும் அதிகம் இடம்பெற்றிருந்தால் இந்தக் கண்காட்சி முழுமை பெற்றிருக்கும் என நினைக்கிறேன். இது எனது அபிப்பிராயமாகும். சிலவேளை இதுவே அதிக மக்களின் அபிப்பிராயமாகவும் அமையக் கூடும்.

தொகுப்பு: உமா

## "யாழ்.வர்த்தகக் கண்காட்சி 2010" நிகழ்வில் நேற்று எடுக்கப்பட்ட படங்கள் இவை......



அழகிய பனம் பொருள்கள்



ரின்னில் அடைக்கப்பட்ட உணவுப்பொருள்கள்



சைக்கிள் மற்றும் மின் விசிறிகள்



விவசாய உபகரணங்களும் கிருமி நாசினிகளும்



உற்பத்திப் பொருள்கள் குறித்து விளக்கம் அளிக்கும் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்குப்பஞ்சர் சிகிச்சை நாளை ஆரம்பம்

கோப்பாய், மார்ச் 29

கைதடி சித்த போதனா மருத்துவமனையில் இலவச கொரியன் 'அக்குப்பஞ்சர் சிகிச்சை நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமைவரை தொடர்ந்து 3நாள்கள் காலை 9 மணி தொடக்கம் பி.ப 3 மணிவரை வழங்கப்படவுள்ளது. இங்கு வாதம், தோல்வியாதிகள், உடற்பருமன் மற்றும் பொதுவான நோய்களுக்கென மருத்துவ ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. நோயாளர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று 28.03.2010
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தில்
இடம்பெற்ற 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
விஞ்ஞானமாணி
பட்டம் பெற்ற

**பாலசுப்பிரமணியம்**
**மயூரன் B.Sc.**

அவர்களை மேலும் பல
பட்டங்கள் பெற்று பல்லாண்டு
வாழ்கவெனப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

கோக்குவில் கிழக்கு, கொக்குவில். (96061) வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

27.03.2010 அன்று பட்டம்பெற்ற எமது சகோதரர்

**குமாரசிங்கம் லவக்குமார்**

அவர்கள்



(B.B.A. (Hons) 2nd Class upper Division)

மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவிகளை அலங்கரிக்க வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துபவர்கள்:

அம்மா- இந்திராணி,
அண்ணா- இந்திரகுமார்,
அண்ணி- சிவபவானி,
பெறாமக்கள்- பௌசிகன்,
சுருதிகன்,
சின்னண்ணா- சுரேஸ்குமார்,
சின்னண்ணி- மனோதரூபி,
அத்தான்- சிவவரதன் (கனடா),
அக்கா- மைதிலி (கனடா),
மருமகள் - அபினா (கனடா).

(96029)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2108 திகதி 27 – 03 – 2010

ஆங்கில எழுத்திற்கும் J

வெற்றி எண்கள் 05 23 42 68 போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ. 13,419,375/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 177104 | 20/- | 3,542,080/- |
| 2 இல | 12547 | 100/- | 1,254,700/- |
| 3 இல | 258 | 1,000/- | 258,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7168 | 40/- | 286,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 618 | 1,000/- | 618,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 21 | 10,000/- | 210,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,419,375/- | - |
| 1 இல + போனஸ் இல | 8394 | 100/- | 839,400/- |
| 2 இல + போனஸ் இல | 407 | 500/- | 203,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 370 | 200/- | 74,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 11 | 1,500/- | 16,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,802,900/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 206914 | | 9,402,900/- |

ஆவிஷ்கா வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - S.B.M. சுஜாதா குமாரி-இபலோகம.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.N. சுமித் ரோஷன பண்டா-கண்டி.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 301765287-8-36 |
| கம்பஹா | 301769067-6-43 |
| கம்பஹா | 301761871-1-43 |
| புத்தளம் | 301774310-3-07 |
| கொழும்பு | 301771298-4-42 |
| காலி | 301776395-4-03 |
| களுத்துறை | 301770185-5-03 |
| அநுராதபுரம் | 301764109-4-03 |
| அம்பாந்தோட்டை | 301762405-6-35 |
| யாழ்ப்பாணம் | 301759665-0-44 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,903,025/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


## சமய சந்நிதி

யாழ்ப்பாணம், மார்ச் 29

வட்டுக்கோட்டை, வீயோடை, இலுப்பையடி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் இரதோற்சவ விழாவும், மகாகும்பாபிஷேக நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணி நண்பகல் 12.30 வரையான சுப வேளையில் அம்பாள் புதிய இரதத்தில் எழுந்தருளி வீதியுலா வருவார்.

பி.ப.4.30 மணிக்கு நூல் வெளியீட்டு விழா ஆரம்பமாகும். இந்த நிகழ்வுக்கு பிரான்ஸைச் சேர்ந்த உதவிக் கணக்காளர் ம.ந.கணேஸ்வரன் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் க.பாஸ்கரனும் கலந்து கொள்வர். (ஒ-க)

* * *

கொழும்புத்துறை, மார்ச்.29

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்தில் சிவன் வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை காலை 8.30 மணிக்குதீர்த்தோற்சவம் நடைபெற்று மதியம் அன்னதானம் வழங்கப்படும். (ஒ-135)

## சுன்னாகம் பகுதியில் சுமாரான மழை

கோப்பாய், மார்ச் 29

புன்னாலைகட்டுவன், சுன்னாகம், ஊரெழு ஆகிய பிரதேசங்களில் கடந்த 3 மாதங்களில் பின்னர் வெள்ளி, சனிக்கிழமைகளில் சுமாரான மழை பெய்துள்ளது.

இதனால் இப் பிரதேசங்களில் நிலவிய கடும் வெப்பம் ஓரளவு தணிந்துள்ளது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் எப்போது மழை பெய்யும் என்று வானத்தைப் பார்த்து ஏங்குகின்றனர். (ஒ-72)


## வாடகைக்கு

கோண்டாவில், இருபாலை வீதிக்கு அண்மையாக திருநெல்வேலியில் கேபிள் தொலைபேசி வசதியுடன் வீடு வாடகைக்கு. முற்பணம் எதிர்பாக்கப்படும். தொடர்பு: 0113135528


## மரண அறிவித்தல்

### நாகமுத்து விஜயசிங்கம்

(செந்திவேல்)



சோழங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நா. விஜயசிங்கம் 25.03.2010 அன்று காலமானார்.

அன்னார் திரு.திருமதி நாகமுத்து- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி பொன்னுத்துரை- கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி, பாலசிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பூரணம்மா, வள்ளியம்மை, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் கனகரட்ணம் (காடி), லீலா, ஜெயந்தினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் விஜயலோஜினி, கீதா, லோஜினி, விண்மணிமுகுந்தன், ராதாகிரிதரன், மாதவலோஜினி, நாகலோஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன், கருணாநிதி, சுதர்ஷன், வசந்தினி, டெனீஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷோன், லியோன், நவீன், சரண், ஜெனிசன், லக்ஷ்மி, அறிவன், விதுண் ஆகியோரின் அன்புப் பேரனும் மற்றும் பெறாமக்களும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2010) திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு சோழங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி[illegible] கொள்ளவும்.

தகவல்:
ராஜு (பேரமகன்)
0774001124

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



25 ஆவது பட்டமளிப்பு விழாவில்
சிறப்புப் பட்டம் பெற்ற

**செல்வி நாகதர்சினி**
**தெய்வேந்திரன்**

(B.Com (Hons) (Accounting special - 1st class)

அவர் மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

835, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (95935) விமலன் சித்தப்பா குடும்பத்தினர்.


## கலைமகள் அழகு நிலா
## அழகுக் கலை பயிற்சி நிலையம்



நான்கு நாள்கள் பயிற்சி இடம் பெற்று பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஓர் அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். பயிலவிரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்

| | |
|---|---|
| Furit Facial | Pedeicure manicure |
| Normal Facial | Hair stariting |
| Gold Facial | Hair perming |
| Silver Facial | Hair Dye |
| Purl Facial | Hair colouring |
| Waxing | Hair Cut |
| Threading | Bridal make up (நான்கு வகை) |
| Hot oil massage | |

Pimple treatment Bleaching கறுப்பு காய்கள்இயந்திரம்மூலம்அகற்றப்படும்

பயிற்சி கட்டணம்: 4000/=
பயிற்சி ஆரம்பம்: 01.04.2010
பயிற்சி நேரம்: காலை 9 மணி - பி.ப 4 மணி

தொடர்புகள்: 0773719071, 0214908151
கலைமகள் அழகு நிலா
இல. 87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(ஓ/566219)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கிருஷ்ணகுமார்



நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணகுமார் 25.03.2010 வியாழக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கற்பகம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், ஜெகதாவின் பாசமிகு தந்தையும், கோகிலகுமார், நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் நாகம்மா தம்பதியினரின் பெறர்மகனும், சிவானந்தன் (கனடா), சச்சிதானந்தன் (கனடா), நடராசா (பிரான்ஸ்), சண்முகதேவி (ஜேர்மனி), தியாகராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரி (கிளி), சந்திரிகா, சோபிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ஆம் வட்டாரம், நயினாதீவு,
தொ.பே: 021320684. (96067) தகவல்: குடும்பத்தினர்.

### யோ.றா.யூலியற் ஏஞ்சலின்

(மாணவி, யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை- தரம் 3A)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோண் றாஜகுமார் யூலியற் ஏஞ்சலின் 26.03. 2010 அன்று அகால மரணமானார்.

அன்னார் யோண் றாஜகுமார்- எல்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், மரியற் கிறிஸ்டலினின் (முன்பள்ளி- YMCA) அன்புச் சகோதரியும், மரியநாயகம்- றோசறிமலர், சூசைப்பிள்ளை (ஓய்வு பெற்ற பெரும்பாக உத்தியோகத்தர்)- மேரி திரேசாபுஸ்பம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலம் சென்றவர்களான அருள்அல்பேட், பிரான்சிஸ் சேவியர் மற்றும் நெல்சி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), நெல்சன் (பிரதேச சபை, ஊர்காவற்றுறை), வின்சன் (கமநல சேவைகள்நிலையம், தொல்புரம்), விமல்சன் (இ.போ.ச, கோண்டாவில்) விமல்சி, நிமல்சி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.03.2010) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இடம் பெற்று பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'றோசறி இல்லம்',
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (96068) ம.யோண் றாஜகுமார்- எல்சி குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுடை-நவாலிப் பகுதிக்கு நாளை முதல் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

## நாளை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம் மார்ச் 29

நவாலி வடக்கு பிரதேசத்திற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திட்டத்தின் கீழ் குழாய் மூலமான குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பொக்கணையூடாக கட்டுடை -நவாலி பகுதிக்கு நூறு வருடங்களுக்கு பின்னர் குடிதண்ணீர் குழாய் மூலம் தருவித்து பொது தாங்கி மூலம் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நவாலி- ஹேமலதா சிறுவர் நிதியத் தலைவர் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் யாழ். மாநகர மேயர் திருமதி யோ.பற்குணராஜா, யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை (வடக்கு) உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி.தி.பாரதிதாசன், வலி. தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நாளை மு.ப. 10 மணிக்கு நவாலி வடக்கு சனசமூக நிலைய முன்றிலில் வைரவர் ஆலய பூசை வழிபாட்டைத் தொடர்ந்து பொதுத் தாங்கி நீர்த்திட்டத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைப்பார்.

இந் நிகழ்வின்போது நவாலி தெற்கு- ஆனைக்கோட்டை பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான மகஜர் கையளிக்கப்படும்.

நன்றியுரையை பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் வழங்குவார். (ஒ- 302)

# கூட்டுறவுச் சங்க பணியாளர்களுடன் அமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். திருநெல்வேலி கூட்டுறவுச் சங்க பணிமனையில் அதன் பணியார்களுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த வெள்ளிக்கழமை கலந்துரையாடினார்.

அமைச்சருக்கு பணிமனை மண்டபத்தில் வைத்து சங்க உப தலைவர் சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

சங்கத்தில் கடந்த கால நிர்வாகங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து வைத்த அமைச்சருக்கு நிர்வாகிகத்தினர் நன்றிகளைத் தெரிவித்ததுடன் தற்போது சங்கம் கண்டிருக்கும் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் அமைச்சரின் பங்கு இன்றியமையாதது என்றும் தெரிவித்தனர்.

அங்கு அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் கடந்த கால அரசியல்வாதிகள் விட்ட தவறுகளினாலேயே எமது மக்கள் உயிர்,உடைமை இழப்புகளை சந்தித்தனர். அதே போன்று இனிமேல் நடைபெறக் கூடாதுஎன்பதற்காகவே நாம் ஜனநாயக வழியில் இன்று பயணித்துக் கொண்டிருக்கின்றோம்- என்றார். (ஒ)

### கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு

# மகளிர் தினப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் விவரம்

நாவற்குழி, மார்ச்29

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கவிதை,கட்டுரை,மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றிருந்தன. அந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றோர் விவரம் வருமாறு,

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-திருமதி சாந்தினி விஜயவரதன்-அச்சுவேலி வடக்கு, 2ஆம் இடம் செல்வி துளர்சிகா பாலகுமார், ஆவரங்கால் மேற்கு, 3ஆம் இடம் திருமதி முரளிதரன்,கோப்பாய் மத்தி.

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம்- செல்வி சுப்பிரமணியம் தமணிகை, அச்சுவேலி தெற்கு, 2ஆம் இடம்- சிங்கரட்ணம் ரேணுகா,நீர்வேலி தெற்கு, 3ஆம் இடம்- ஜீவா சஞ்சிகா, இருபாலை தெற்கு, பாலகுமார் துளர்சிகா, ஆவரங்கால் மேற்கு.

**மாலை கட்டுதல்**

முதலாம் இடம் -வசந்தகுமாரி நடராஜா , ஊரெழு, 2ஆம் இடம்- அகல்யா பாலேஸ்வரன் ஊரெழு, 3ஆம் இடம்- நிறைவாசன் சுகந்தினி,அச்சுவேலி மேற்கு, வாமதேவி சுந்தரராஜஐயர்,ஊரெழு.

**கோலப் போட்டி**

முதலாம் இடம்- கனகலிங்கம் கல்பனா, கோப்பாய் வடக்கு, 2ஆம் இடம்- சிவஞானம் கோமளாதேவி, கோப்பாய் தெற்கு, 3ஆம் இடம்- ஸ்ரீகந்தராசா கலைச்செல்வி, ஊரெழு. (ஒ-14)




# வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் வீடுகள்

## அமைத்துக்கொடுக்கப்படும் என்கின்றார் உதவித்திட்டப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,மார்ச் 29

உலக வங்கி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் நடவடிக்கை துரிதப் படுத்தப்பட்டுள்ளது. பிரதேச சபைத்திட்டத்தை விரைந்து நடத்த முன்வரவேண்டும். இவ்வாறு யாழ்.செயலக நியாப் திட்ட உதவி திட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் கேட்டுள்ளார்.

உலக வங்கி வீடமைப்புத் திட்டம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் வலி.மேற்கு பிரதேச சபையின் பிரதேச சபை செயலாளர் சு.புத்திரசிகாமணி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட நியாப் திட்ட பிரதிதிட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் மேலும் கூறுகையில்-

உலக வங்கித் திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கு பிரதேச செயலரின் சிபார்சின் பெயரில் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் விநியோகத்தில் பெயர் மாற்றம் மற்றும் உறுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் ஊடாகவும் சரியான வழிநடத்தல் ஊடாகவும் பயனாளிகள் விரைந்து திட்டத்தை அடைய முடியும் என்றார்.பிரதேச சபை செயலகத்தில் மேற்படி பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.செயலக நியாப்திட்ட சமுக அபிவிருத்தி அதிகாரி பி.ஜனார்த்தனன், தொழிநுட்ப அலுவர் வி.புலேந்திரன், நிகழ்ச் சித்திட்ட அலுவர் பி.தவேஸ்வரன் முகாமைத்துவ உதவியாளர் எம்.ஜெக ராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-302)


நாடாளுமன்றத் தேர்தல் - 2010
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

நித்தம், நித்தம் செத்துப் பிழைக்கும் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சுதந்திரமான கடற்றொழிலை மேற்கொள்ள வழிசெய்வோம்.





உங்கள் விருப்பு வாக்கை இலக்கம் 6 இற்கு அளித்து என்னை அமோக வெற்றியடையச் செய்யுங்கள்

உதயன் நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



26.03.2010 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற
செல்வி சுஜிதா வரதராசா
B.A. (Hons) அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் மென்மேலும் வளர வாழ்த்தும்
சித்தப்பா- கா.ஸ்ரீரஞ்சன் குடும்பம்.
(சி/566240)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் 27.03.2010 அன்று B.A. (Hons) பட்டம்பெற்ற
செல்வி கஜேந்தினி இராஜேந்திரம்
அவர்களை பல்கலையும் பெற்று மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
திலேஸ்குமார், கௌசலா.
பழைய பொலிஸ் நிலைய வீதி பழம் ரோட், ஆனைக்கோட்டை.
(96003)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 26.03.2010 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் வரலாறு சிறப்புக் கலைமாணி B.A.(Hons) பட்டம்பெற்ற
செல்வன் அன்றூ அஜித் சஞ்ஜீவ்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
புங்கன்குளம் வீதி, அரியாலை.
(95947) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2010 சனிக்கிழமை நடைபெற்ற பட்ட மளிப்பு விழாவில் BBA (FM Spe) பட்டம் பெற்ற
செல்வி தனுஷா நித்தியானந்தன்
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று மேதினியில் உயர் பதவிகள் வகித்து சீரும் சிறப்புமாய் பல்லாண்டு வாழ்க வென நெஞ்சம் நிறைந்த வாழ்த் துக்கள் கூறும் இணைபிரியா நண்பி
வாசுகி நாகமுத்து
இன்னும் வாழ்த்துவோர்:
நாகமுத்து குடும்பம், ஜெயகாந்தன் குடும்பம், இளங்கோவன் குடும்பம்.
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.
(96033)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சுந்தரமூர்த்தி சிவானந்தன்
(BBA Hons, Dip.in Edu., M.Ed.)
27.03.2010 சனிக் கிழமை நடைபெற்ற இருபத்தைந்தாவது பட்டடமளிப்பு விழாவில் (M.Ed.) முதுமாணிப் பட்டம் பெற்ற மையையிட்டு அவரைப் பாராட்டு வதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்படைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
அன்பு அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார், மருமக்கள்: கஜன், சங்கீதா, சுவஸ்திகா, பெறாமக்கள், மனைவி, பிள்ளைகளான அபி, அபிநயா.
39/2, விநாயைவயர் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[96037]

## கைமாறப்பட்டுள்ளது

NSB வங்கிக்கருகாமையில் 27.03.2010 அன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய லுமாலா சைக்கிள் (69582489) கைமாறப் பட்டுள்ளது. பிறிதொரு சைக்கிள் எம்மி டம் உள்ளது.
தொடர்புகளுக்கு: 0771697745

## ஓதுவார்கள் நால்வர் கௌரவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

தென்மராட்சி பிரதேச இந்து ஆலயங் களில் சமயத் தொண்டாற்றும் நான்கு பேர் பொன்னாடை போர்த்து பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விழா எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி சாவகச்சேரி, சக்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் ஆலயத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சுந் தரேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

ஓதுவார்களான க.கனகரத்தினம், எஸ். துரைராசசிங்கம், திருமதி நடராசா ராச மணி, சமயத் தொண்டர் தா.கனகசிங்கம் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழாவில் ஆசியுரையை சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்களும், வாழ்த் துரையை மட்டுவில் மகா வித்தியாலய அதி பர் மு.பாலசுப்பிரமணியமும் நிகழ்த்துவர்.

விசேட சொற்பொழிவுகளை ஆசிரியர் த.நாகேஸ்வரன் ''பெரிய புராணத்தினூ டாக பக்தி'' என்னும் பொருளிலும், ஆசி ரியர் ச.மார்க்கண்டு 'இதிகாசங்களுடனான பக்தி' என்னும் பொருளிலும் ஆசிரியர் கு.சுமுகலிங்கம் 'சைவ வாழ்வியல்' என் னும் பொருளிலும் நிகழ்த்தவுள்ளனர்.

மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி ஆலய பஜனைக் குழுவினரின் நாம பஜ னையும் இடம்பெறும். (ஒ-207)

## கோயில் உண்டியல்கள் உடைத்துத் திருட்டு

சண்டிலிப்பாய், மார்ச் 29

இரவுநேரம் மின் விளக்கை அணைத்து விட்டு ஆலயத்திற்குள் புகுந்து திருட முற்பட்ட திருடர், கதவுப்பூட்டு திறக் கப்படாததினால் வெளியே இருந்த இரு உண்டியல் பெட்டிகளையும் உடைத்து அதற்குள் இருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

சுதுமலைப் பகுதியில் உள்ள ஆலயத் திற்கு இரவு நேரம் சென்ற திருடர் தெற் குப் பக்க வாசலில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்கை அணைத்துவிட்டு, பாது காப்புக் கருதி கதவில் மாட்டப்பட்டிருந்த சங்கிலிப் பூட்டை உடைத்தபின் கதவுப் பூட்டை உடைக்க முயன்றுள்ளனர். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. அதனை அடுத்து உள்ளே செல்லும் முயற்சியைக் கைவிட்ட திருடர் ஆலயத்தின் முன்புறத் திலும், பின்புறத்திலும் இருந்த உண்டி யல் பெட்டிகளை உடைத்து அதற்குள் இருந்த பணத்தை எடுத்துச் சென்றுள் ளனர்.

கடந்த பல மாதங்களுக்கு முன்னரும் இந்த ஆலயத்திற்குள் புகுந்த திருடர் அங்கிருந்த பணத்தையும், ஒலிபெரு க்கிச் சாதனங்களையும் திருடிச் சென்றி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-115)

## வீதி திருத்தம்; மக்கள் மகிழ்ச்சி

கைதடி, மார்ச் 29

உரும்பிராய் சந்தியிலிருந்து புன்னா லைக்கட்டுவன் வரையுள்ள பலாலி வீதி யின் அவலநிலை சம்பந்தமாகக் கடந்த 15 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியின் பயனாக தற்போது அவ்வீதி வீதி அபிவிருத்தி அதிகார சபையி னால் திருத்தப்பட் டுள்ளதாக அப்ப குதி மக்களால் தெரி விக்கப்பட்டுள்ளது.

தாம் பலமுறை உரியவர்களுக்குத் தெரியப்படுத்திய போதும் தற்போது திருத்தப்பட்டது தமக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிப் பதாகவும் அவர் கள் கூறியுள்ளார் கள். (ஒ-288)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சண்முகநாதன் கேதீஸ்வரி
யாழ். பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழா வில் நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை நுண்கலை மாணி (B.F.A) பட்டம் பெற் றதையிட்டு மகிழ்ச்சியடைவ தோடு மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ திருநெல்வேலி பத்திரகாளி அம்பாளை வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
த.உத்தமசீலன் குடும்பத்தினர்.
(96038)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில்B.Sc. (General) பட்டம்பெற்ற
செல்வி குகாயினி சிவயோகநாதன்
அவர்களை மனதாரப் பராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
சித்தப்பா குடும்பத்தினர், சிவசரண்நாதன்,சிவானந்ததேவி, திருமாறன், அதிமாறன், சிவமாறன்- நாகமுத்து.
அம்மம்மா, கைதடி வடக்கு, கைதடி.
(96002)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சிவப்பிரியா வயிரவநாதன்
{B.A. (General), (M.A. பட்டதாரி, south Bank பல்கலைக்கழகம், லண்டன்)
யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவரைப் பாராட்டுவதோடு, மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சிறப்படைய அரச கேசரியான் பாதம் வேண்டி வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,தம்பி(நீர்வேலி), அத்தான்,அக்கா,சகானா (லண்டன்), அத்தான்,அக்கா (கோண்டாவில்), சித்தப்பாமார் (நீர்வேலி), சித்தப்பா, சித்தி, பிள்ளைகள் (ஜேர்மனி).
கரந்தன் சந்தி, நீர்வேலி தெற்கு,நீர்வேலி.
(96015)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் கிட்டினபிள்ளை இராஜதுரை
{B.A(Dip.in Edu.), M.A.(Dev.Stu.) SLTS-1, SLPS.2-11}
யாழ்.பல்கலைக் கழ கத்தின் 25 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் நேற்று முதுகலைமாணி (M.A) பட்டத்தைப் பெற்ற திரு.கிட்டின பிள்ளை இராஜதுரை அவர்களைப் பாராட்டி வாழ்த் துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மாமனார்- வே.நாகேந்திரம்(சீவரத்தினம்), மைத்துனர்கள்: மகாலிங்கம் சுந்தரலிங்கம் (கனடா) ராஜன்(கனடா) மனோகரன்(கனடா) கலைச்செல்வம்(சுவிஸ்).
021-226 3895
நாவலடி, உடுப்பிட்டி.
(96036)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு-அமிர்துலிங்கம் உதயகுமார்
(பரி.யோவான் கல்லூரி ஆசிரியர்)B.F.A



அவர்கள் யாழ்.பல்கலைக்கழத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் B.F.A பட்டத்தினை பெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மனைவி: றொஷாணி, மகன்: ஜோன் ஷிஹான், தாய், சகோதரி, மாமா, மாமி,ஜீன் அக்கா, மோகன் அண்ணா, லொறிங்ரன் அண்ணா, ஸ்றெபாணி, சுரேஷினி அக்கா, வெப்ஸ்ரர் அண்ணா,சிசுபாலன் அண்ணா, சத்தியா, குணா, றெமி, ஷெக்னா, ஷெஹான், ஈதன், அஷாகுட்டி.
'...எபநேசர்' வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளத்தைக் கலக்கி பருந்தின் கையில் கொடுக்கும் நிலை; வன்னித் தேர்தல் களத்தில் சூடு பறக்கிறது பிரசாரம்

கடைசியில் வன்னி மக்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இலங்கைக் குடியரசின் ஏழாவது பொதுத் தேர்தலும் ஆரம்பமாகி அனல் பறக்கிறது. இத்தேர்தலில் போட்டியிட்டு 'சொர்க்காபுரி' செல்லக் கனவு கண்ட பலரும், கட்சித் தலைமைகளால் ஓரங்கட்டப்பட்ட நிலையில் சுயேச்சைக் குழுக்களாகக் களம் இறங்கியுள்ளனர். இவர்களில் முன்னாள் எம்.பிக்கள் எவரும் அரசியல்வாதிகள், வர்த்தக பிரமுகர்கள், வெளிநாட்டில் தஞ்சமடைந்தவர்கள் எனப் பலரும் அடங்குவர். மொத்தத்தில் வன்னித் தேர்தல் சுயம் வரத்தில் வெற்றி மாலை சூடப்போகும் அறுவர் யார்? எதிர்வரும் எட்டாம் திகதி நள்ளிரவு தெரிந்துவிடும். அதன் பின்னர் ஆறு பேர் மட்டும் சிரிப்பார்கள். மிகுதி 246 பேர் அழுவார்கள், ஆத்திரமடைவார்கள், சிலர் தற்கொலை முயற்சியிலும் இறங்குவார்கள். புலம்பெயர்ந்து தேர்தலுக்காக இங்கு வந்து களம் இறங்கிய பலரும் விடிவதற்கு முன்பாக விமானம் ஏறி ஓடித்தப்புவார்கள்.

வன்னித் தேர்தல் களத்தில் சுமார் 6 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 252 வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 40 முஸ்லிம்களும், 41 சிங்களவர்களும் அடங்குவர். மிகுதி அனைவரும் தமிழர்கள். ஒரு காலத்தில் சமானியர்களாகவும், கல்வி மான்களாகவும், சமூக சேவகர்களாகவும், சட்டம்பிகளாகவும் எவ்வித செலவுமின்றி வென்று 'சொர்க்காபுரி' சென்றவர்கள் மக்களுக்குச் சேவை செய்த நிலை மாறி இப்போது பண முதலைகளும், பதுக்கல் பெருச்சாளிகளும், பாதாளக்கோஷ்டிகளும், பகல் வேடதாரிகளும் நாடாளுமன்றம் செல்லும் நிலை உருவாகியுள்ளது. பணம் கோடியாக இருக்கின்றதா? எவ்வித தகுதியுமில்லாமல் இவர்கள் நாடாளுமன்றம் செல்லமுடியும் என்ற நிலை இப்போது உருவாகியுள்ளது. தொகுதிவாரித் தேர்தல் முறையை விடவும் இந்த விகிதாசாரத் தேர்தல் பற்றி சாமானியன் எவனுமே நினைத்துப் பார்க்கமுடியாது.

இந்த நிலையில் இவர்கள் அனேகமானோர் கட்டுக்கட்டாகப் பணத்தை மடியில் வைத்துக் கொண்டு வாக்குகளை விலை பேசுகின்றனர்.

ஆளுயரக் ''கட்டவுட்''டுக்கள், போஸ்டர்கள், விதம்விதமான சிறுநாள்காட்டிகள் , முற்றிலும் வண்ணம் தீட்டப்பட்ட 'டொல்பின்', 'பஜிரோ' வாகனங்கள் மூலம் வன்னியைக் கலக்கித் தள்ளுகின்றனர். ''ஊரார் வீட்டு நெய்யே-என்பெண்டாட்டி கையே'' என்று சொல்லுமளவிற்கு மற்றவர்கள் வீட்டு மதில்களிலும், வளவுகளிலும் குட்டிச் சுவர்களிலும் பொது இடங்களிலும் இடைவெளி விடாமல் சுவரொட்டிகளை ஒட்டி முடிக்கின்றனர். பின்னால் அவை ஆடு,மாடு,கழுதைகளுக்கு நல்ல சுவையான தீனியாகின்றன. சுவர்களில் ஒட்டும் போது வீட்டு உரிமையாளர்கள் ஒளிந்திருந்து பார்க்கின்றனர். இவர்களால் மூச்சுவிடவும் முடியாத நிலை. நியாயம் கேட்டால் தமிழ் . சினிமா பாணியில் கையைஎடு, காலை எடு, ஆளைத் தீர்த்துக்கட்டு என்று அரிவாளை தூக்குகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி வன்னியில் வெற்றி பெறப் போவது யார்? எவர்? இது கருத்துக் கணிப்பில் முதலிடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அடுத்து ஐக்கிய தேசிய முன்னணி,மூன்றாம் இடத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, நான்காம் இடத்தில் சுயேச்சைக்குழு ஒன்றும், ஐந்தாம் இடத்தில் புளொட் இயக்கமும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

**காதர்**

இந்த விவரங்களின்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, சுயேச்சைக் குழு ஆகியன வன்னித் தேர்தல் களத்தில் ஆசனங்களை வெல்லும் என்றே வன்னிக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

மொத்தத்தில் நான்கு அரசியற் கட்சிக்களும், ஒரு சுயேச்சைக் குழுவையும் தவிர மற்றைய 14 அரசியற் கட்சிகளும், 11 சுயேச்சைக் குழுக்களும் தங்கள் கட்டுப்பணங்களை பறிகொடுக்கும் நிலை உள்ளன. ★

## ஆறு ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக வீடு, வீடாகக் காவடி எடுக்கும் வேட்பாளர்கள்

# அந்தோ! அநாதரவாகக் கிடக்கும் வன்னி மக்களின் வாகனங்கள்....!

கொழும்பு, மார்ச் 29

முல்லைத்தீவில் இறுதி யுத்தத்தின் போது பொதுமக்களின் 17 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களும் 150000 சைக்கிள்களும் புதுமாத்தளன் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொறுப் பேற்பார் இன்றி அநாதரவாகக் காணப்படுகின்றது.

அத்துடன் ஆயிரம் நீர் நிரிறைக்கும் இயந்திரங்களும் அப் பகுதியில் கைவிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கடந்த வாரம் அங்கு சென்று கைவிடப்பட்ட நிலையில் உள்ள வாகனங்களைப் பார்வையிட்டார்.

இந்த வாகனங்களை கிளிநொச்சிக்கு எடுத்துச்சென்று அங்கு வைத்துப் பொது மக்களுக்கு கையளிக்க ஏற்பாடு செய்யப் படும் என்றும் அவர் அங்கு வைத்துத் தெரிவித்தார்.

ஆளுநருடன் கிளிநொச்சி அரச அதிபர் இமெல்டா சுகுமார், வன்னிப் படைகளின் தளபதி அத்துல ஜெயவர்த்தனா ஆகியோ ரும் அங்கு சென்றிருந்தனர்.

அநாதரவாக கிடக்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள் களுக்கு படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். (அ-1)



## விண்ணப்பங்களை உடன் கையளிக்கவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 29

யாழ். பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்படாத கழகங்களில், தடகளப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை இதுவரை கையளிக்காத கழகங்கள் அவற் றைப் பூரணப்படுத்தி எதிர் வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிரதேச செயல கத்தில் ஒப்படைக்குமாறு விளை யாட்டு உத்தியோகஸ்தர் எம்.ஆர். மோகனதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

(50-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 29

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரி வில் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப் படாத, கழகங்களில் தடகள போட்டிக் கான விண்ணப்பப் படிவங்களை இது வரை கையளிக்காத கழகங்கள் அவற்றை எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பூர ணப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு விளையாட்டு உத்தி யோகஸ்தர் எஸ்.சதீஸ் கோட்டுள்ளார்.

(50-23)

## மன்னார் நகரில் அங்காடிகளின் அதிகரிப்பால் பொதுமக்கள் சிரமம்

மன்னார், மார்ச் 29

மன்னார் நகரில் கடந்த ஆறு மாதங் களாக அங்காடி வியாபாரிகளின் நடவடிக் கைகள் அதிகரித்துள்ளதால் மன்னார் மக்களும், நிரந்த வர்த்தகர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மன்னாரில் பல நூறு அங்காடி வியா பாரிகள் எவ்வித அனுமதியுமின்றித் தெருக்களின் இருபுறமும் கடைகளை அமைத்துத் தரங்குறைந்த பொருள்க ளையும், சுகாதாரக் கேடான உணவுப் பொருள்களையும் விற்பனை செய்து வருகின்றனர். மன்னார் சுகாதார நிர்வா கமோ சுகாதாரப் பரிசோதகர்களோ கண்டு கொள்வதில்லை.

இவ்விநியோகங்களினால் நடை பாதைகளில் மக்கள் செல்ல முடியாமல் பிரதான பாதைகளில் செல்வதால் சன நெரிசல் ஏற்படுவதுடன், விபத்துக்கு ஆளாகும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-க-80)

## பாஷையூர் அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங் களின் (ஆண்) அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை குரு நகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளை யாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து குரு நகர் விளையாட்டுக்கழக அணி மோதி யது.

இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய குருநகர் விளை யாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(50-23)

## போட்டிகளுக்கான நிரல் தயாரிப்பு

வலி.வடக்கு, மார்ச் 29

வலிகாமம் கல்வி வலயம் பாட சாலை அணிகளுக்கான விளையாட்டு நிகழ்வுகளின் நிரல் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு வலிகாமம் கல்விவலய கேட்போர் கூடத்தில் கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வலய மட்டத்தில் நடைபெறவுள்ள விளையாட் டுப் போட்டிகளை நடத்தும் திகதிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட வுள்ளமையால் விளையாட்டுப் பொறுப் பாளர்களை, விளையாட்டு முதல்வர் களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (50-86)

## நல்லூர் பிரதேச செயலகத்தின் தடகளப் போட்டிகள் இன்று

வலி.வடக்கு,மார்ச் 29

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிர்தேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் தலை மையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல் கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோ வனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எ. எம்.ஜே. ரூபசிங்கமும், கௌரவ விருந் தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவும் கலந்து கொள்வார் கள். (50-86-23)

## தீவக கல்வி வலயத்தின் பெரு விளையாட்டுக்களில்..

யாழ்ப்பாணம்,மார்ச் 29

தீவகக் கல்வி வலயத்தினால் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படும் பெரு விளையாட்டுக்க ளில் இன்று திங்கட்கிழமை 15,17,19 வயதுப்பிரிவினருக்கான கரப்பந்தாட் டப் போட்டி (ஆண்கள்) நடைபெறவுள் ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை உள்ளக விளையாட்டுக்களுக்கான சதுரங் கம், பூப்பந்தாட்டம், கரம் ஆகியன நடை பெறவுள்ளன. (50-61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Affordable and Internationally Recognised

# MBA

Master of Business Administration

JAFFNA

Specialize in
Marketing
Human Resources
Information Systems
Finance



Sikkim

**Manipal University**

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.

The most accepted foreign MBA program in Jaffna

Third Batch Commences on

**25-04-2010** at 10.00 am

For information contact | Kasthoori 021 4900900

Manipal
INSPIRED BY LIFE

Manipal International Study Centre
IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road, Jaffna.
T.P: 021 222 8060
Web: www.iiscitycampus.com

## குடாக்கடலில் திடீர் சூறாவளி

வண்ணை,மார்ச் 29

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குடாக்கடலுக்கு அப்பால் ஆழ்கடல் பிரதேசத்தில் சுழிக்காற்று (மினி சூறாவளி) வீசியதால் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த படகுகள் இடைநடுவில் திரும்பி வந்ததாகக் கூறப்படுகிறது.

முற்பகல் ஆழ்கடல் பிரதேசத்தை நோக்கி குருநகர் இறங்குதுறை ஊடாகக் கடற்றொழிலுக்கு சென்றிருந்த இழுவைப் படகுகள் அனைத்தும் இடையில் தொழிலைக் கைவிட்டு வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டொரு தினங்களாக வானமும் கடலும் வித்தியாசமாக, திருப்திகரமாக இல்லாததால் சுழிக்காற்று வீசியதை அடுத்து பீதியடைந்த றோலர் தொழிலாளர்கள் படகுகளுடன் இரவுக்கு முன்னதாகத் திரும்பி இருந்தனர். (1-160)

## கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 29

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் மாலை நிகழ்வுகளாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

கண்காட்சியின் இறுதி நாளான இன்று திங்கட்கிழமை மாலை நிகழ்வுகளாக மாலை 6.30 மணிக்கு நல்லூர் பாலமுருகன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இரவு 8 மணிக்கு 'உரும்பிராய் கலை[illegible] கோயில் மாணவிகளின் நாட்டியாஞ்சலியும் இரவு 9 மணிக்கு நாச்சிமார் கோயிலடி ஜெயராமன் குழுவினரின் வயிலின் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (1-16)

## கலந்துரையாடல்

வேலணை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் குழுநிலை போட்டிக்கான அட்டவணை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை மு.ப. 11 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-188)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை
தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன்
**அன்ரன் கமிலஸ் (B.A.)**
அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
25 ஆவது பட்டமளிப்பு விழாவில் (26.03.
2010) புவியியல் சிறப்புக் கலைமாணி பட்டம்
பெற்றமையிட்டு மனதார பாராட்டி
வாழ்த்துவதுடன் மென்மேலும் பல பட்டங்கள்
பெற்று வாழ்வில் உயர்வுபெற பங்கின்
காவலராம் புனித
நீக்கிலாரின் அருளும் ஆசிரும் தொடர்ந்தும்
கிடைக்கப்பெற பிரார்த்திக்கின்றோம்.




புகையிரதநிலைய வீதி,
மிருசுவில்.
(96041)
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
பொதுப்பட்டமளிப்பு விழாவில் சிறப்பு பட்டங்களைப் பெற்ற



என்.சத்தியவேந்தன்
முது தத்துவமாணி (M.Phil)



கே.சுதாகரன் (சுதன்)
டிப்ளோமா இன் எடியூகேசன்



கே.எஸ்.ரமணன்
B.A. Hons இந்து நாகரிகம்

ஆகிய எமது ஆசிரியர்களை இன்னும் பல பட்டங்
களைப்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

புகழ் கல்வி நிலைய[illegible]
தாவடி றோட்,
சுதுமலை[illegible]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**அன்னம்மா தியாகராஜா**
(இளைப்பாறிய ஆசிரியை, யா/புத்தூர் ஸ்ரீ
சோமஸ்கந்தக் கல்லூரி)



மண்ணில்
13.11.1931

விண்ணில்
21.03.2008

திதி: 29.03.2010 பூரணை

ஆற்றொணாப் பிரிவில்...
ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ!
அம்மா உம்மைப் பிரிந்து வாடுகின்றோம் நாமே
அன்னத்தின் பெயர் பூண்ட
அன்னம்மா குல விளக்கே
அணைந்து மறைந்தோடி ஆண்டு
இரண்டு சென்றதுவோ?
உம் பிரிவால் வாடிடும் எம் குரல் தான்
கேட்கலையா?
ஆண்டு இரண்டு யுகமொன்று ஆனாலும்
அழியாத ஓவியமாய் நிலைபெறும் எம்மனதில்
நிறுத்திப்போற்றுவோம் துதிப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலிப்பவர்...
அன்புக் கணவர்: வை.தியாகராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்),
சத்தியபாமா ஸ்ரீகரன் குடும்பம்,
சிவானந்தராஜா குடும்பம்,
பாஸ்கரராஜா குடும்பம், சிவசோதிராஜா குடும்பம்,
சிவநேசராஜா குடும்பம், பவீந்திராஜா குடும்பம், பேரப்பிள்ளைகள்.

புத்தூர் மேற்கு,
புத்தூர்.
(95946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகடந்த தமிழீழ அரசு

# என்றால் என்ன?

# அது செய்யப் போவதுதான் என்ன.....!

இன்று தமிழ்மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் செய்திகள் மூன்று. முதலாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பான வாக்குக் கணிப்பு. இரண்டாவது தேசிய அவைக்கான தேர்தல். மூன்று நாடுகடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான வாக்குக் கணிப்பு நோர்வேயில் மே 10 ஆம் திகதி நடைபெற்றது. பிரான்ஸில் டிசெம்பர் 12 - 13ஆம் திகதிகளில் நடைபெற்றது. கனடாவில் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி நடத்தப்பட்டது. நோர்வே, பிரான்ஸ் நாடுகளைப் போலவே கனடாவில் தீர்மானத்துக்கு ஆம் என 98.82 விழுக்காடு மக்கள் (48582 வாக்குகள்) வாக்களித்தார்கள். இந்த ஆண்டின் முற்பகுதியில் நெதர் லாந்து, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் போன்ற புலம்பெயர் நாடுகளில் வட்டுக் கோட்டைத் தீர்மானம் மீதான வாக்குக் கணிப்பு நடைபெற இருக்கிறது.

1976 இல் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட் வட்டுக்கோட்டைத் தீர்மானமே திம்பு பேச்சுக்கும் ஒஸ்லோ அறிவித்தலுக்கும் அடிக்கல்லாக இருந்தது. திம்புவில் தமிழர் தரப்பு பேச்சுக்காக முன்வைத்த தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட கோட்பாடுகளே.

கனடாவில் தேசிய அவைக்கான தேர்தல் மார்ச் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது. வேட்பாளர்களது வேட்பு மனு பெப்ரவரி 28 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. நோர்வேயில் இந்தத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

நாடுகடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. தமிழர் திரு நாளாம் தைப் பொங்கல் நாளன்று நாடு கடந்த தமிழீழ அரசை அமைப்பதற்கான மதியுரைக் குழுவின் அறிக்கை வெளிவரவுள்ளது.

இந்த மூன்று தேர்தல்களுமே புலம்பெயர் நாடுகளில் மக்களாட்சி முறைமைக்கு அமைய நடைபெறும் தேர்தல்கள் ஆகும். அதுமட்டும் அல்லாது மேற்கூறிய மூன்று அரசியல் முன்னெடுப்புக்களில் ஏதாவது ஒன்று குறைவுபடினும் அது எல்லாவற்றையும் பாதிப்பதாக அமையும். இந்த முயற்சிகள் தமிழ்மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளை மக்களாட்சி முறைமையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு தாங்களே தலைமையேற்று நடத்துகின்றவை ஆகும். மேற்குலக நாடுகள் மக்களாட்சி முறைமைக்கு ஏற்ப நடத்தப்படும் தமிழர்களது அரசியல் போராட்டத்தை எளிதில் தட்டிக் கழித்துவிட முடியாது.

கடந்த ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தமிழீழ விடுதலைக்கான முப்பது ஆண்டு கால ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது தெரிந்ததே. இன்று சிறிலங்காவில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் அரசியலில் ஈடுபடக் கூடிய சூழ்நிலை எதிர்க்கட்சிகளுக்கு இல்லை. அதற்கான அரசியல் வெளி அங்கில்லை. சட்டம் ஒழுங்கு முன் எப்போதும் இல்லாதவாறு கெட்டுவிட்டது. அரசே பொலிஸ்துறையையும் குண்டர்களையும் விட்டு தனது அரசியல் எதிரிகளைப் பகிரங்கமாகப் பயமுறுத்துகிறது. சில சமயங்களில் அரசை விமர்ச்சிப்போர் கைது செய்து சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அரசு வளங்கள் அரசு கட்டுப்பாடு ஊடகங்கள் போன்றவற்றை ஆளும் கட்சி தனது தேர்தலுக்குத் தாராளமாகப் பயன்படுத்துகிறது. எனவே தீவிற்கு வெளியிலேயே தமிழர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான முன்னெடுப்பு முயற்சிகளைத் தற்போதைக்குத் தொடர முடியும். இந்த முயற்சியின் ஒரு வடிவமே நாடுகடந்த தமிழீழ அரசின் தோற்றமாகும். இதன் இணைப்பாளராக விசுவநாதன் உருத்திரகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரே செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினராகவும் இருக்கிறார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மீள் உறுதிசெய்வது நாடுகடந்த தமிழீழ அரசின் உருவாக்கத்துக்கு வலு சேர்க்கும். இதனை நாடுகடந்த தமிழீழ அரசின் இணைப்பாளர் விசுவநாதன் உருத்திரகுமாரனும் உறுதி செய்துள்ளார். அவரால் வெளியிடப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான விளக்கக்கோவையில் காணப்படும் கேள்விகளுக்கான விடைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசு என்றால் என்ன?

நாடு கடந்த தமிழீழ அரசு தமிழ் மக்களது அரசியல் வேட்கையை உயிர்ப்போடு பேணித் தமிழர் தேசியம், தாயகம், தன்னாட்சி எனும் அடிப்படை உரிமைக் கோட்பாடுகளின் வழியாக தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கான ஓர் அரசியல் அமைப்பாகும். இது ஒரு புதுமையான எண்ணக் கருவாகும்.

தமது தாயகத்தில் தமிழ் மக்கள் தமது அரசியல் வேட்கைகளையும் உரிமைகளையும் வெளிப்படுத்துவதற்கும் அதற்காகச் செயற்படுவதற்கும் இப்பொழுது எவ்வித வாய்ப்புகளும் இல்லை. ஸ்ரீலங்கா அரசின் சட்ட அடிப்படையான தடைகள், இராணுவ வலவளைபபு, படுகொலை ஆகிவற்றின் ஊடாகத் தமிழ் மக்களது விடுதலை வேட்கையையும் உரிமைகளையும் ஒடுக்கி வருகின்றது.

இந்நிலையில் தமிழீழ நாட்டின் உறுப்பாகிய புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு உள்ள மக்களாட்சி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கு செயலுருவம் கொடுப்பதற்காகப் பாடுபடும் அதியுயர் அரசியல் மையமாக இந்த நாடுகடந்த அரசு அமைக்கப்படுகிறது. தாயகத்தில் வாழும் அரசியல் தலைவர்களும் மக்களும் இந்த அரசிற் பங்கு பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே இந்த அரசில் உறுப்புரிமை வகிக்கும் சார்பாளர்கள் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களிடையே இருந்து மக்களாட்சி முறையில் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த அரசு இலங்கைத் தீவில் இருக்கும் நட்பு சக்திகளுடன் கைகோர்த்துப் பயணிக்கும்.

இன்னொரு கேள்வி நாடு கடந்த அரசு ஏன்? அதற்கான தேவை என்ன? என்பதாகும். அதற்கான விளக்கம் பின்வருமாறு:-

ஈழத் தமிழர்களின் சமூக இருப்பு என்பது அவர்களின் அரசியல், பண்பாடு, பொருண்மியம், வாழ்வியல் ஆகியவற்றின் தனித்துவத்தைத் தக்கவைப்பதிலும் உலகின் ஏனைய சமூகங்களுடன் இணைந்தும் அவற்றிற்கு ஈடாகவும் செயற்படுவதிலுமே தங்கியுள்ளது. இதனை நிலைநாட்டுவதற்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய காரணிகளைக் கட்டுப்படுத்தி வெற்றி கொள்வதற்கும் ஏதுவாக ஓர் உறுதியானதும் தன்னாட்சி உரிமையைக் கொண்டதுமான அரசியல் கட்டமைப்பு தேவையாகும். இத்தேவை 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக வடிவம் பெற்று 1977 ஆம் ஆண்டில் மக்கள் ஆணையாக உறுதிப் படுத்தப்பட்டது. 1985 திம்பு கோட்பாடுகள், 2003 இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவு இதற்கு மேலும் வலுச் சேர்த்தன.

கடந்த 60 ஆண்டுகளாக ஸ்ரீலங்காவின் அரசியல் கட்டமைப்பு தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தப்பட்டு இப்பொழுது மேலும் கூர்மைப் படுத்தப்பட்டுள்ளது. சிங்கள - பௌத்த வல்லாண்மை சமூகத்தால் இயற்றப்பட்ட அரசமைப்பும் சட்டங்களும் ஏனைய தேசிய இனங்களின்; அடிப்படை உரிமைகளை மறுத்துள்ளன. இவை தமிழ் மக்களதும் பௌத்த சிங்களவர் அல்லாத ஏனைய சமூகங்களதும் அரசியல் தனித்துவத்திற்கும் சமூக இருப்புக்கும் மற்றும் சுதந்திரமான பண்பாட்டு வளர்ச்சிக்கும் மிகப்பெரும் தடைக்கற்களாக இருக்கின்றன.

அத்துடன் தமிழ்மக்கள் தங்கள் அரசியல் வேட்கையைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கும் அதற்காகக் குரலெழுப்பிப் போராடுவதற்கும் இலங்கைத் தீவின் உள்ளக நிலைமைகள் மிகப்பெரும் தடையாகவும் பேரச்சுறுத்தலாகவும் உள்ளன.

தீவில் வாழும் ஒட்டுமொத்த தமிழரும் அடிமைகளாகவும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் கைதிகளாகவும் வாழக் கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளனர். அதேவேளை சிங்கள அரசுத் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் அரசதந்திரிகளும் படைத் தளபதிகளும் இலங்கைத்தீவில் தமிழ்மக்களுக்கு எதுவித சிக்கலும் இல்லை என்றும் அரசியல் தீர்வு தேவையற்றது எனவும் உள்நாட்டிலும் அனைத்துலக நாடுகள் மட்டத்திலும் பொய்ப் பரப்புரை செய்து வருகின்றனர்.

இவற்றை எல்லாம் எதிர்கொண்டு தமிழ்மக்களது அரசியல் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பல்வேறுபட்ட அணுகுமுறைகளைக் கையாண்டு முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு புலம்பெயர் தமிழ்மக்களது கைகளில் வீழ்ந்துள்ளது. அதனை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைக்கப்பட்டதும் மக்களின் ஆணையைப் பெற்றதுமான ஒரு மக்களாட்சிக் கட்டமைப்பின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. அதுவே 'நாடுகடந்த தமிழீழ அரசு' என இப்பொழுது முன்மொழியப்பட்டுள்ளது.

பலராலும் கேட்கப்படும் இன்னொரு கேள்வி "நாடு கடந்த அரசுக்கும் புகலிட அரசுக்குமிடையில் உள்ள வேறுபாடுகள் என்ன? அல்லது இரண்டும் ஒன்றா?"

இவ்விரண்டு அரசுகளுக்கும் இடையே பல பொதுப் பண்புகள் இருந்தாலும் கோட்பாட்டு அடிப்படையில் அவை வேறானவை.

புகலிட அரசு என்பது வெளிநாடுகளுக்கு தப்பியோடும் அரசியல் தலைவர்கள் தமக்கு ஆதரவு அளிக்கக்கூடிய நாடு ஒன்றில் தஞ்சம் புகுந்து அங்கு அமைக்கும் ஓர் அரசாகும். சொந்த நாடு விடுதலை பெறும் பொழுது அவர்கள் நாடு திரும்புவர். புகலிட அரசை அமைக்கக் குறைந்தளவு ஒரு நாட்டின் ஒப்புதலும் ஏற்புதலும் தேவை. தலாய் லாமாவின் தலைமையில் இந்திய மண்ணில் இயங்கிக் கொண்டிருக்கும் திபெத்திய புகலிட அரசு இந்த வரைவிலக்கணத்துக்கு நல்ல எடுத்துக் காட்டு ஆகும். புகலிட அரசு செயற்படுவதற்குப் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் இருக்க வேண்டிய தேவையில்லை. நாடு கடந்த அரசுக்கு அது தேவை ஆகும்.

நாடு கடந்த அரசு பற்றிய கோட்பாடு கடந்த இருபது ஆண்டுகளாக சமூக அறிஞர்களது கவனத்தை ஈர்த்து வருகிறது. அது புலம் பெயர்ந்து வாழும் மக்களது நாடு கடந்த வாழ்க்கை முறையோடும் நாடு கடந்த அரசியலோடும் தொடர்புள்ளது.

புலம் பெயர் மக்கள் தாம் வாழும் நாடுகளில் மட்டும் அல்லாது தமது தாயகத்தோடும் வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தம் மக்களோடும் உறவைப் பேணி வருகின்றனர். இவர்களது வாழ்க்கைமுறை தாம் வாழும் நாடுகளின் எல்லைகளுக்குள் சுருங்கி விடுவதில்லை. நாடுகள் கடந்த ஒரு சமுதாயமாக இவர்கள் தமது வாழ்க்கையை அமைத்துள்ளனர். தாம் வாழும் நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட முறையில் தமது வாழ்வை இவர்கள் அமைத்துக் கொண்டபொழுதும் இவர்களது அரசியல், பொருண்மிய, சமூக மற்றும் பண்பாட்டுப் பண்புகளை முடிவுசெய்வதில் நாடு கடந்த சமுதாய வெளி முதன்மையான பங்கை வகிக்கிறது. ஈழத் தமிழரது புலம் பெயர் வாழ்க்கையும் இவ்வாறே உள்ளது.

புலம் பெயர் தமிழ் மக்கள் மட்டுமல்லாது தாயகத்தில் வாழும் தமிழ் மக்களும் நாடுகடந்த தமது தொடர்புகளைப் பேணிய வண்ணம் உள்ளனர். எனவே அம்மக்களும் ஈழத்தமிழரது நாடு கடந்த சமுதாய வெளியின் உறுப்பாகவே உள்ளனர். ஈழத் தமிழரது அரசியல் இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குள் சுருங்கி விடவில்லை. அவர்களது அரசியல் இப்பொழுது நாடு கடந்த அரசியலாகவும் மாற்றம் கண்டுள்ளது.

பன்முகப்பட்டதும் சமுதாய நலன்மிக்கதும் மக்களாட்சி அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டதுமான தேசியமே தமிழ்த் தேசியம் ஆகும்.

அமைக்கப்பட இருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசு நாடு கடந்த சமூக வெளியில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களால் அவர்களது அரசியல் வேட்கைகளை வென்றெடுப்பதற்காக அமைக்கப்படுகிறது. மேலும் தாயகத்திலும் புலத்திலும் வாழும் தமிழீழ மக்களது சமூக, பொருண்மிய, கலை, இலக்கிய, பண்பாட்டு மேம்பாட்டையும் இந்நாடு கடந்த அரசு அதன் ஆளுகைக்குள் கொள்ளும்.

மக்களால் மக்களில் தங்கி நிற்கக்கூடிய முறையில் இவ்வரசு அமைக்கப்படுவதால் இதற்கு நாடுகளின் ஒப்புதல் என்பது ஒரு முன் தேவையாக இருக்காது. தமிழ் மக்களிடையே உள்ள பொது அமைப்புகள் இவ்வரசைத் தாங்கி நிற்கும் தூண்களாக இருக்க வேண்டும். மக்களில் தங்கிநின்றவாறே அனைத்துலக அரங்கில் தமிழர் தேசியம், தாயகம், தன்னாட்சி என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்களின் தேசியச் சிக்கலுக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கு அனைத்துலக நாடுகளினதும் மக்களினதும் ஆதரவை இவ்வரசு திரட்டும். மேலும் இவ்வரசு தமிழீழ நாட்டின் விடுதலைக்காக அரசியல் மற்றும் அரசதந்திர வழிமுறைகள் ஊடாகப் போராடும்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு உலகளாவிய அளவில் 115 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கனடாவுக்கு 25 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக் குழுவே அந்தந்த நாடுகளில் தேர்தலை நடத்தி முடிக்கும். அதற்கு முன்னர் நாடுகளது செயற்பாட்டுக் குழுக்கள் கலைக்கப்படும்.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் வாழும் நாடுகளில் தேர்ந்தெடுக்கப்படும் இருக்கைகளின் முழு விவரம் பின்வருமாறு:-

கனடா - 25, ஐக்கிய அரசு - 20, பிரான்ஸ் - 10, சுவிஸ்ஸர்லாந்து -10, ஜேர்மனி - 10, அமெரிக்கா - 10, ஆஸ்திரேலியா - 10, நோர்வே - 3, டென்மார்க் - 3, இத்தாலி - 3, நெதர்லாந்து - 3, தென்னாபிரிக்கா - 3, பெல்ஜியம் மற்றும் லக்சம்பேர்க் - 3, நியூஸிலாந்து - 2, சுவீடன் - 1, பின்லாந்து - 1, அயர்லாந்து - 1.

இருபது சார்பாளர்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இந்த ஒதுக்கீடுகள் நியாயமான முறையில் அந்தந்த நாடுகளது மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் அமெரிக்காவுக்கு எப்படி 10 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன? அமெரிக்காவுக்கு 10 இருக்கைகள் என்றால் கனடாவுக்கு 25 இருக்கைகள் சரியாக இருக்குமா?

தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் முதலில் ஒரு அரசியல்யாப்பு அவையை உருவாக்கி

நாடு கடந்த அரசுக்கு வேண்டிய யாப்பை வரைவார்கள். அந்த யாப்பு, அரசயாப்பு அவையால் நிறைவேற்றப்படும். அந்த யாப்பின் அடிப்படையில் நாடுகடந்த தமிழீழ அரசு தோற்றம் பெறும்.

புலத்தில் உள்ள மக்களது ஒன்றுபட்ட குரலாக ஒலிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசு நிலத்தில் உள்ள தேசிய அரசியல் சக்திகளோடு சமாந்தரப் பாதையில் நட்போடு பயணிக்கும் என எதிர்பாக்கலாம்.

சிறிலங்கா இனவாத அரசு புலம்பெயர் தமிழர்களையே இன்று தனது முக்கிய "எதிரி" ஆகப் பார்க்கிறது. அவர்களால் உருவாக்கப்பட இருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் தோற்றத்தை முறியடிக்கப் போவதாகவும் சூளுரைத்துள்ளது. ஐ.நாவின் போர்க்குற்றச் சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள சிறிலங்கா அரசினால் அது முடியுமா என்பது எமது ஒற்றுமை, அரசியல் சாணக்கியம், பொருண்மிய வலிமை, நுட்பமான இராஜதந்திரம் ஆகியவற்றில் தங்கியுள்ளது. *

நன்றி - இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

01. கணக்கீட்டு சமன்பாட்டினை விளக்கப் பொருத்தமானக் கூற்று,
   1) கணக்கீட்டின் கூறுகளைப் பற்றிய கணித ரீதியான விவரிப்பு.
   2) சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான கணித ரீதியான விவரிப்பு.
   3) இரட்டை விளைவு விதியினை கணித ரீதியாக அறிமுகப்படுத்தும் விவரிப்பு.
   4) கணக்கீட்டு உள்ளீடுகளின் இரட்டை விளைவு விதியினை விவரிக்கும் கணித ரீதியான விளக்கம்.
   5) வணிகமொன்றின் வளங்களில் ஏற்படும் மாற்றங்களின் கணித ரீதியான விவரிப்பு.

02. நிதிக்கூற்றுக்களில் நேரடியாக உள்ளடக்கப்படாதது பின்வருனவற்றுள் எது?
   1) இலாபநட்டக் கணக்கு. 2) காசுப்பாய்ச்சல் கூற்று.
   3) இயக்குநருடைய அறிக்கை. 4) கணக்கீட்டு விகிதங்கள்.
   5) ஐந்தொகை.

03. பொறுப்பொன்று உரிமையாளரின் சொந்தப் பணத்தில் தீர்க்கும்போது,
   1) பொறுப்பும் சொத்தும் அதிகரிக்கும்.
   2) பொறுப்பும் சொத்தும் குறைவடையும்.
   3) சொத்து அதிகரிக்க பொறுப்பு குறைவடையும்.
   4) பொறுப்பு குறைவடைய பொறுப்பு அதிகரிக்கும்.
   5) சொத்து அதிகரிக்க சொத்து குறைவடையும்.

04. சொத்தின் பயன்படு ஆயுட்காலத்தினை தீர்மானிக்கும்போது கவனத்தில்கொள்ளத் தேவையில்லாதது எது?
   1) சொத்தின் பாவனை. 2) வழக்கொழிப்பு.
   3) சட்டரீதியான வரையறைகள். 4) சொத்தின் இடமாற்றல் கிரயம்.
   5) சொத்தின் கிரயம்.

05. வியாபாரக் கணக்கு தயாரிக்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்படும் பரீட்சைமீதியில் பின் வருவனவற்றுள் தோன்றாத விடயம் எது?
   1) கையிலுள்ள காசு. 2) வங்கிமேலதிகப்பற்று.
   3) மொத்த இலாபம். 4) ஆரம்ப இருப்பு.
   5) இறுதி இருப்பு.

06. சரியானக்கூற்றைத் தெரிவுசெய்க.
   1) குறிப்பிட்ட தினமொன்றில் வியாபாரமொன்றில் சொத்துக்களையும், பொறுப்புக்களையும், உரிமையினையும் காட்டும் ஓர் அட்டவணை ஐந்தொகையாகும்.
   2) வருமானக்கூற்றின் பெறுபேற்றினை மாற்றும் ஓர் அட்டவணை ஐந்தொகை.
   3) ஏதாவதொரு காலப்பகுதிக்குரிய சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையைக் காட்டும் அட்டவணை ஐந்தொகையாகும்.
   4) ஐந்தொகை நிதிக்கூற்றுத் தொகுதியின் ஒரு கணக்காகும்.
   5) ஏதாவது ஒரு தினத்தில் பேரேட்டில் காணப்படும் கணக்குகளில் மீதிகளின் அட்டவணை ஐந்தொகையாகும்.

07. 31.03.2009இல் கணக்கேடுகளை மூடும் நிறுவனம் செலுத்திய காப்புறுதி தொகை ரூபா 10,000. 01.07.2008 தொடக்கம் 30.06.2009 வரையான காலப்பகுதிக்கு உரியதாகும். 31.03.2009 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்திய மொத்தக் காப்புறுதித் தொகை ரூபா 40,000 ஆகும். அவ்வாண்டு இலாபநட்டக் கணக்கில் தாக்கீடு செய்யப்படும் காப்புறுதித் தொகை யாது?
   1) ரூபா 37,500 2) ரூபா 30,000 3) ரூபா 42,500
   4) ரூபா 40,000 5) ரூபா 46,500

08. உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல்வாங்கல்,
   1) செலுத்திய வாடகை 7,000/=
   2) அடுத்த நிதியாண்டுக்கு முற்பணமாக செலுத்திய வாடகை 5,000/=
   3) வங்கிக்கடன் செலுத்தியது ரூபா 6,000/=
   4) தளபாடம் வாங்கியது ரூபா 10,000/=
   5) கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா 15,000/=

09. இயங்கிக்கொண்டிருக்கும் பங்குடைமை ஒன்றில் புதிய பங்காளர் ஒருவர் சேருகின்றபொழுது அவரால் காசாகக் கொண்டுவரப்படும் நன்மதிப்பானது எவ்வடிப்படையில் பதிவுசெய்யப்படும்?
   1) பழைய இலாபநட்ட விகிதம். 2) புதிய இலாபநட்ட விகிதம்.
   3) இழப்பீட்டு விகிதம். 4) மூலதன விகிதம்.
   5) ஏற்பாட்டு விகிதம்.

10. பங்குடைமை ஒன்றில் மறுபடிவிலைமதித்தல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பமாக அமைவது,
   1) பங்காளனின் இலாபநட்ட விகிதாசாரம் மாற்றமடையும்போது.
   2) புதிய பங்காளன் சேரும்போது.
   3) ஏற்கனவே இருக்கும் பங்காளன் ஓய்வுபெறும்போது / இறக்கும்போது.
   4) பங்குடைமையை கம்பனியாக மாற்றும்பொழுது.
   5) மேற்கூறிய அனைத்து சந்தர்ப்பங்களிலும்.

11. கட்டுப்பாட்டுக் கணக்கு செயன்முறையில் எதிர்த்தீர்த்தல் என்பதுடன் தொடர்புடைய பிழையானக்கூற்று,
   1) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எதிர்த்தீர்த்தல் வரவு பக்கத்தில் பதியப்படுகிறது.
   2) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எதிர்த்தீர்த்தல் செலவுப்பக்கத்தில் பதியப்படுகிறது.
   3) எதிர்தீர்த்தல் பதிவிற்கான தொடக்கப்பதிவு நாட்குறிப்பேட்டில் காட்டப்படுதல் வேண்டும்.
   4) எதிர்த்தீர்த்தலானது துணைப்பேரேடுகளிலுள்ள இரு வேறுபட்ட நபர் கணக்குகள் ஒன்றிலிருந்து ஒன்று ஈடுசெய்வதாகும்.
   5) எதிர்த்தீர்த்தல் இரட்டைப்பதிவிற்கு உட்படுத்தப்படுகின்றது.

12. பின்வருவனவற்றுள் பங்குடைமை அமைப்பொன்றாகக் கருதக்கூடியது,
   1) இலாபநோக்கமற்ற நிறுவனம். 2) வங்கித்தொழில் நிறுவனம்.
   3) காப்புறுதித் தொழில் நிறுவனம். 4) நிதிக்குத்தகை நிறுவனம்.
   5) ஒரு கணக்காய்வாளர் நிறுவனம்.

13. கடனைத் தீர்க்க சிவா என்ற கடன்பட்டோன் 10% கழிவுக்கமைய 103,500 ரூபாவினை செலுத்தியதுடன் ஏற்கனவே 20% வியாபாரக் கழிவில் அப்பொருட்களை கொள்வனவு செய்துள்ளான். அத்துடன் அவன் கொள்வனவு செய்த பெறுமதிசேர்வரி பதிவுபெற்ற நிறுவனமாதலால் 15% பெறுமதிசேர்வரி உள்ளடக்கப்பட்டு உள்ளது. குறித்த பண்டத்தின் பட்டியல் விலை யாது?
   1) ரூபா 125,000 2) ரூபா110,000 3) ரூபா140,000/=
   4) ரூபா143,861.50 5) ரூபா112,000/=

14. ரவியும் மதனும் இலாபநட்டங்களை சமனாக பங்கிடும் பங்குதாரர் ஆவர். அவர்கள் ஒவ்வொருவரதும் மூலதன நிலுவைகள் முறையே 90,000 ரூபா, 70,000ரூபா ஆகும். பங்குதாரரது மொத்த மூலதனம் 240,000 ரூபா என்னும் அடிப்படையில் 1/3 பங்கினை உரித்துப்பெறும் வகையில் 96,000 ரூபாவினை புதிய பங்காளரான லால் மூலதனமாகவும், நன்மதிப்பு பங்காகவும் காசாகச் செலுத்தியுள்ளார். எனின், சரியான நாட்குறிப்புப் பதிவு,
   1) காசுக் கணக்கு வரவு ரூ.80,000 லால் மூலதனக் கணக்கு செலவு ரூ.80,000
   2) காசுக் கணக்கு வரவு ரூ.16,000 ரவி மூலதனக் கணக்கு செலவு ரூ.8,000 மதன் மூலதனக் கணக்கு செலவு ரூ.8,000
   3) காசுக் கணக்கு வரவு ரூ.96,000 லால் மூலதனக் கணக்கு செலவு ரூ.96,000
   4) காசுக் கணக்கு வரவு ரூ.96,000 லால் மூலதனக் கணக்கு செலவு ரூ.80,000 ரவி மூலதனக் கணக்கு செலவு ரூ.8,000 மதன் மூலதனக் க்ணக்கு செலவு ரூ.8,000
   5) காசுக் கணக்கு வரவு ரூ.80,000 நன்மதிப்புக் கணக்கு வ்ரவு ரூ.16,000 லால் மூலதனக் கணக்கு செலவு ரூ.80,000 ரவி மூலதனக் கணக்கு செலவு ரூ.8,000 மதன் மூலதனக் கணக்கு செலவு ரூ.8,000

15. நன்மதிப்பை உருவாக்குகின்ற காரணி அல்லாதது,
   1) பங்காளர்களின் நன்மதிப்பு.
   2) முகாமைத்துவ வினைத்திறன்.
   3) வியாபாரக்குறி பிரபல்யமடைதல்.
   4) வியாபார நிலையத்தின் இடவமைப்பு. 5) பாரியளவு மூலதனம்.

16. தயாவும், நிலாவும், சிவாவும் முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யும் பங்குடைமையொன்றின் பங்காளர்கள். இப்பங்குடைமையில் சிவா 31.03.2009 இல் விபத்தொன்றில் அகால்மரணமெய்தினார். பங்குடைமையை தயாவும், நிலாவும் தொடர்ந்து நடத்துவதற்கு தீர்மானம் எடுத்துள்ளனர். இதற்கிணங்க,
   * சிவாவின் மொத்த உரிமையில் 50 சதவீதம் நிலாவினால் நிதியிடப்பட்டதனால் சிவாவின் 50 சதவீத இலாப உரித்து நிலாவினால் பற்றப்பட்டது.
   * சிவாவின் எஞ்சிய இலாபப்பங்கில் தயா பற்றியதிலும் பார்க்க அரைப்பங்கையே நிலா பற்றியுள்ளார். இப்பங்குடைமையின் புதிய இலாபநட்ட விகிதம் யாது?

   தயா, நிலா முறையே,
   1) 1:1 2) 4:3 3) 11:9 4) 3:2 5) 2:3

17. நன்மதிப்பின் பண்பல்லாதது,
   1) அருவச்சொத்து. 2) நீண்டகாலத்தில் உருவாக்கக்கூடியது.
   3) நிதிப் பெறுமானம் உண்டு.
   4) உழைப்பாற்றலுக்கேற்ப வேறுபடக்கூடியது.
   5) நிலையான பெறுமதி உண்டு.

18. பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
   1) பெறுமானத்தேய்வு நிறுவனத்தின் தேறிய இலாபத்தைக் குறைக்கும்.
   2) பெறுமானத்தேய்வை தாக்கீடு செய்யத்தவறினால் மூலதனம் பேணப்பட மாட்டாது.
   3) பெறுமானத்தேய்வு ஏற்பாடு காசு வெளிப்பாய்ச்சலை உருவாக்கும்.
   4) பெறுமானத்தேய்வை தாக்கீடு செய்யத் தவறினால் தேறிய இலாபம் மிகைப்படுத்தப்படும்.
   5) பெறுமானத் தேய்விடல் இணைத்தல் எண்ணக்கருவினை திருப்தி செய்கின்றது.

19. இருப்புக்களின் கிரயத்திலும் தேறத்தகு பெறுமதி குறைவாக இருக்கும் சந்தர்ப்பம்,
   1) விற்பனைச் செலவு அதிகரித்தல். 2) விற்பனை விலை குறைதல்.
   3) இருப்பு பழைமையாதல்.
   4) இருப்பு பகுதியளவில் சேதமடைதல்.
   5) மேற்கூறிய யாவும் சரியானவையாகும்.

20. வரையறுத்த ஸ்டார் கம்பனியில் 31.12.2009 இல் தயாரித்த கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூபா 75,000 ஆகும். இக்காலப்பகுதியில் கடன்கொடுநர் பட்டோலை மீதியைத் தயாரித்தபோது ரூபா 7,000 தவறவிடப்பட்டது. வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 8,000 கூட்டியும் கூட்டப்பட்டது. மேற்கூரிய தகவல்களை கருத்திற்கொண்டு திருத்தமுன் உள்ள கடன் கொடுநர் பட்டோலை மீதி யாது?
   1) ரூபா 70,000 2) ரூபா 74,000 3) ரூபா 68,000
   4) ரூபா 88,000 5) இவை அனைத்துமல்ல.

* **21-30 வரையான வினாக்களுக்கு சரியான விடை தருக.**

21. ஒதுக்கங்கள் ஏற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.

..............................................................................................

..............................................................................................

22. மூலதனச் செலவையும், வருமானச் செலவையும் வேறுபடுத்துக.

..............................................................................................

..............................................................................................

23. கட்டுப்பாட்டுக்கணக்கை தயாரிக்கும்போது வழுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

..............................................................................................

24. பங்காளர் தொடர்பில் பேணப்படுகின்ற நபர் கணக்குகள் மூன்று தருக.

..............................................................................................

..............................................................................................

25. நிலையான மூலதனக்கணக்கையும் தளம்பும், மூலதனக்கணக்கையும் வேறுபடுத்துக.

..............................................................................................

(13ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010 உயர்தர மாணவர்களுக்காக பிரபல ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு**

# கணக்கீடு -01, பகுதி I: தொடர்ச்சி....

26. நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு நிதிக்கூற்றுக்களால் வெளிப்படுத்தப் படும் தகவல்கள் 3 தருக.

..........................................................................................

27. 2009 டிசம்பர் 31 இல் இறுதித்தொக்கின் கிரயப்பெறுமதியானது ரூபா 48,000 ஆக வும் அவற்றின் தேறிய நிகரப் பெறுமதியானது ரூபா 42,000 ஆகவும் உள்ளன. எனின், அவற்றை தேறிய நிகரப் பெறுமதிக்கு குறைத்து எழுதுவதற்கான நாட் குறிப்புப் பதிவைத் தருக.

..........................................................................................

28. கணக்கீட்டுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும்போது முகாமையாளரால் பின்பற்ற வேண்டிய அடிப்படைச் சிந்தனைகள்/எடுகோள்கள் யாவை?

..........................................................................................

29. அண்மைக்கால கணக்கீட்டில் ஏற்பட்டுள்ள நவீன போக்குகள் மூன்றைக் குறிப் பிடுக.

..........................................................................................

30. நிதிக்கூற்றுக்களில் இடம்பெறும் காசல்லாத உருப்படிகள் இரண்டு தருக.

..........................................................................................

* 31-35 வரையான கூற்றுக்கள் ''சரி'' அல்லது''பிழை'' கூறுக.

31. சிறிய பங்குடைமைகள், கம்பனிகள் ஒற்றைப் பதிவு முறையினைப் பேண முடியும். (............)
32. பங்காளர் கடன் வட்டியானது இலாபநட்டப் பகிர் கணக்கின் வரவில் பதியப்படும். (............)
33. இறுதிப் பெறுமதியற்ற சொத்தொன்றின் பெறுமானத்தேய்விடத்தக்க பெறுமதியா னது அதன் கிரயமாகும். (............)
34. ஒரு பங்குடைமையினது உரிமைத்துவம் மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் பங்காளர் களுக்கு எழக்கூடிய நியாயமற்ற நிலையை தடுக்கும் வகையில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வது பொருத்தமானதாகும். (............)
35. பரஸ்பரமான உடன்படிக்கையே பங்குடைமை ஒன்றின் அம்சமாகும். (............)

* 36-40 வரையான கூற்றுக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

36. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கால வேறுபாடுகளாக ......................... , ......................... என்பவற்றைக் குறிப்பிடலாம்.
37. வணிக நிறுவனங்களால் வழங்கப்படும் தகவல்களின் பண்பினை உயர்த்துவதற்கு உதவும் உயர்கணக்கீட்டு நிறுவனங்களாக ................................................ , ................................... காணப்படுகின்றன.
38. கொடுத்த கழிவுக்கும், பெற்றகழிவுக்குமான மூல ஆவணங்களாக ................. , ........................... பயன்படுத்தப்படும்.
39. சொத்துக்களின் விலைமட்ட மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என் பதை ........................ எண்ணக்கரு வலியுறுத்துகின்றது.
40. நிதிக்கூற்றுக்களை உபயோகிப்பதற்கு வசதியளிக்கும் முக்கிய தரக் குணாதிசயங் களில் ................................. இருத்தலே மிகப் பிரதானமாகும்.

# கணக்கீடு - 01 | பகுதி - II

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. சரண்யா, ரம்யா என்பவர்கள் இலாபநட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்கள். அவர்களது உடன்படிக்கை வருமாறு:
   * பங்காளர் மூலதனங்களுக்கு 6% வட்டி அனுமதிக்கப்படும்.
   * நிர்வாகத்தில் பங்குப்பற்றுவதற்காக சரண்யா, ரம்யாவிற்கு முறையே 2,000 ரூபா, 1,500 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
   * பங்காளர் எடுப்பனவுகளுக்கு 4% வட்டி வழங்கப்படும்.

   31.12.2009 இல் பரீட்சை மீதி வருமாறு:-

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணிக்கட்டடம் | 400,000 | |
| மோட்டார் வாகனம் - கிரயம் | 240,000 | |
| பொறி - கிரயம் | 180,000 | |
| தளபாடம் - கிரயம் | 60,000 | |
| பெறுமானத்தேய்வு எற்பாடு | | 100,000 |
| - காணிக்கட்டடம் | | 80,000 |
| - மோட்டார் வாகனம் | | 40,000 |
| - பொறி | | 25,000 |
| - தளபாடம் | | |
| கொள்வனவுகள் | 280,000 | |
| விற்பனைகள் | | 515,000 |
| கடன்பட்டோர் | 66,000 | |
| கடன்கொடுத்தோர் | | 80,000 |
| ஐயக்கடன் எற்பாடு 01.01.2009 இல் | | 3,000 |
| சம்பளம் | 48,000 | |
| சரக்கிருப்பு 01.01.2009 | 40,000 | |
| பற்றுக்கணக்கு - சரண்யா | 9,000 | |
| - ரம்யா | 6,000 | |
| - கார்த்தி | 12,000 | |
| நிர்வாகக்கிரயம் | 12,000 | |
| விநியோகக் கிரயம் | 24,000 | |
| வங்கியும் காசும் | 201,000 | |
| நன்மதிப்பு | 30,000 | |
| மூலதனக் கணக்கு - சரண்யா | | 300,000 |
| - ரம்யா | | 240,000 |
| கார்த்தி கொண்டு வந்த பணம் | | 200,000 |
| நடப்புக் கணக்கு - சரண்யா | | 16,000 |
| - ரம்யா | | 9,000 |
| | 1,608,000 | 1,608,0000 |

மேலதிக தகவல்கள் பின்வருமாறு:

01) 30 ஆகஸ்ட் 2009 இல், முகாமையாளராக இருந்த கார்த்தி 200,000 மூல தனத்துடன் பங்காளராக சேர்க்கப்பட்டார்.
புதிய உடன்படிக்கை வருமாறு:
இலாபநட்டங்கள் சமமாக பகிரப்படும்
02) பங்காளர் சம்பளம் சரண்யா வருடாந்தம் 30,000 ரூபா, ரம்யா வருடாந்தம் 24,000 ரூபாவை பெற்றார்.
03) ஏனைய விடயங்களுக்கு பழைய ஒப்பந்தம் பின்பற்றப்படும்.
04) சரண்யா, ரம்யா அகிய இருவரும் கார்த்திக்கு குறைந்த வருடாந்த தேறிய வருமானம் ரூபா 45,420 கிடைப்பதற்க உத்தரவாதமளித்துள்ளனர்.
05) ஆகஸ்ட் 2009 இல் சொதத்துக்கள் பின்வருமாறு விலைமதிக்கப்படுவ துடன் இப்புதிய பெறுமதிகள் கணக்குகளில் காட்டப்படுதல் வேண்டும்.
காணிகட்டடம் 360,000 ரூபா பொறி 90,000 ரூபா
மோட்டார் வாகனம் 120,000 ரூபா தளபாடம் 30,000 ரூபா
06) பங்குடைமையின் நன்மதிப்பு 60,000 ரூபா என மதிப்பிட்டு கணக்குகளில் பதிந்து 30,000 ரூபாவை கணக்குகளில் தொடர்ந்து பேணுவதென தீர் மானிக்கப்பட்டது.
07) நிலையான சொத்துக்களுக்கு கிரயத்தில் பின்வருமாறு:
காணிகட்டடம் 3% பொறி 10%
மோட்டார் வாகனம் 10% தளபாடம் 5%
நிலையான சொத்துக்கள் மறுபடி விலைமதித்த பின்பு சொத்துக்களுக்கு மறுமதிப்பீட்டுப் பெறுமதியில் 10% பெறுமானத் தேய்விடப்பட வேண்டும்.
08) குறிப்பிட்ட காலத்துக்கென இனம்காணக்கூடிய செலவுகள் தவிர்ந்த மொத்த இலாபம், ஏனைய சேலவுகள் யாவும் கால அடிப்படையில் பகிரப் படுதல் வேண்டும்.
09) 31 டிசம்பர் 2009இல் சரக்கிருப்பு 45,000 ரூபா.
10) 30 ஆகஸ்ட் 2009 இல் கடன்பட்டோர் 61,000 ரூபா. கடன்பட்டோரில் 10% ஐயக் கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்.
11) சம்பளம் என்பதில் கார்த்தியின் முகாமையாளர் சம்பளம் உள்ளடக்கப் பட்டுள்ளது.

**வேண்டப்படுபவை:**
1) 31 டிசம்பர் 2009 இல் முடிவடைந்த ஆண்டுக்கரன வியாபார இலாப நட்டக் கணக்கு.
2) 31 டிசம்பர் 2009 இல் ஐந்தொகை.
3) மறுபடிவிலைமதித்தல் கணக்கு.
4) பங்காளர் மூலதனக் கணக்குகளும், பங்காளர் நடைமுறைக் கணக்கு களும்.

02. அ. ஸ்ரீதரன் வணிகத்தில் 2010 ஜனவரியில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றன.
1) மூலதனமாக 76,000ரூபா காசும், 24,000 பெறுமதியான மோட்டார் களும் கொண்டுவரப்பட்டன. மோட்டார்களின் பயனுள்ள வாழ்காலம் ஐந்து வருடங்கள் ஆகும்.
2) 40,000 ரூபா காசிற்கு பண்டங்கள் வாங்கப்பட்டன. இவற்றில் அரை வாசிப் பண்டங்கள் கொள்விலையின் 25% இலாபத்துடன் கட னுக்கு வழங்கப்பட்டன.
3) வணிகத்தினது தேவைகளுக்கு உபயோகிக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி 2,000 ரூபா ஆகும்.
4) ஜனவரி 01 இல் 40,000ரூபா வங்கிக்கடன் ஒன்று 9% ஆண்டு வட்டியில் பெறப்பட்டது. வட்டிகள் காலாண்டுக்கு ஒரு முறை செலுத் தப்படும்.
5) கடனுக்கு விற்றபண்டங்களின் 20% திரும்பி வந்துள்ளன.
6) கொடுபடாதுள்ள மின்கட்டணம் 21,000 ரூபா.

**வேண்டப்படுவது:**
மாத இறுதிச் சீராக்கங்கள் உட்பட கொடுக்கல்வாங்கல்களின் விளைவு களைப் பின்வரும் சமன்பாட்டில் குறித்துக் காட்டுக.
நடைமுறையல்லாச் சொத்து + நடைமுறைச்சொத்து =
நடைமுறையல்லாப்பொறுப்பு + நடைமுறைப்பொறுப்பு +
மூலதனம் + (வருமானம் - செலவுகள்)

ஆ. பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் மீறப்பட்ட அல்லது பிரயோகிக் கப்பட்ட எண்ணக்கருக்களை எழுதுக.
1) மோட்டார் திருத்த நிலையமொன்றில் தொழில்நுட்பவியலாளரின் திறமைகள் கணக்குகளில் காட்டப்படவில்லை.
2) வாடிக்கையாளர் ஒருவரால் அனுப்பப்பட்ட விலை விசாரணைக் கடி தம் விற்பனையாகப் பதியப்பட்டது.
3) வணிகம் உபயோகிக்கும் இறப்பர் முத்திரைகள் சில ஆண்டுகளுக்கு பயன்படுத்தமுடியும் எனினும், அதன் பெறுமதி செலவினமாகக் காட் டப்பட்டது.
4) ஐயக்கடன் ஏற்பாடு ஏடுகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

03. ஸ்டார் நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து 01.01.2010இல் எடுக்கப்பட்ட கடன்பட்டோர் விவரம் வருமாறு:

| கடன்பட்டோர் | கடன்தொகை | கடன் வெளிநிற்கும் காலம் |
|---|---|---|
| தயாநிதி | 20,000 | 15 நாட்கள் |
| குமதா | 12,000 | 31 நாட்கள் |
| விநாயகம் | 8,000 | 45 நாட்கள் |
| மாறன் | 10,000 | 45 நாட்களுக்கு மேல் |

ஜனவரி 2009 இல் கடன்விற்பனைகள்.
- 03 ஜனவரி ராகவன் பட்டியல் இல.156 - 18,000/=
- 06 ஜனவரி தாமரை பட்டியல் இல.157 - 120,000/= வியாபாரக்கழிவு 10%
- 16 ஜனவரி சில்வா பட்டியல் இல.158 - 10,000/=
- 20 ஜனவரி முகுந்தன் பட்டியல் இல. 159 - 80,000/= வியாபாரக்கழிவு 10%

ஜனவரி 2009 விற்பனைத் திரும்பல்கள்
- 18 ஜனவரி சில்வாவிடமிருந்து திரும்பல் செலவுத்தாள் இல.65 இன்படி 1,500/=
- 24 ஜனவரி முகுந்தனிடமிருந்து திரும்பல் செலவுத்தாள் இல.66 இன்படி 500/=

கடன்பட்டோரிடமிருந்து பெற்றகாசு
- 2 ஜனவரி தயாநிதியிடம் பணம் பெறப்பட்டது.
- 10 ஜனவரி செல்வனிடம் பணம் பெறப்பட்டது.
- 28 ஜனவரி தாமரையிடம் பணம் பெறப்பட்டது.
- கடன்பட்டோர் 20 நாட்களுக்குள் பணம் செலுத்துவார்களாயின் 10% கழி வாக விடப்படும். மாதத்தில் இருவாரங்களுக்கு ஒருமுறை (நடுப்பகுதி, மாத இறுதியில்) கடன்பட்டோரிடம் பெற்றகாசு வங்கியில் இடப்படும்.
- 28 மாறனின் கடன் அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்பட்டது.

**வேண்டப்படுபவை:**
1) விற்பனை ஏடு, காசேட்டுப் பதிவுகள், விற்பனைத்திரும்பல் நாளேடு.
2) ஜனவரி மாத்ததிற்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.
3) 1 ஜனவரி ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு மீதி 4,500/=
ஐயக்கடன் எற்பாடு பின்வருமாறு காலப்பகுப்பாய்வுக்கமைய ஏற்பாடு செய் யப்படும்.

| கடன் வெளிநிற்கும் காலம் | ஐயக்கடன் எற்பாட்டு வீதம். |
|---|---|
| 0-15 நாட்கள் | 2% |
| 15-31 நாட்கள் | 5% |
| 31-45 நாட்கள் | 8% |
| 45 நாட்கள் | 10% |

அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கினூடாகப் பதிவழிக்கப்படு கிறது எனக்கொண்டு அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குக.

(தொடர்ச்சி நாளை வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரசறிவியல், தமிழ் பாடத்தின்
எமது ஆசான் ஆகிய
**குலசிங்கம் றஜீபன்** (M.A)
(கலாசார உத்தியோகத்தர்)
அவர்கள் யாழ்.பல்கலைக் கழகத்தின்
25ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி பட்டம்
பெற்றதையிட்டு அவரை அகம்
மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
யாழ்./பேராதனை பட்டம் பெற்ற
இறுதியாண்டு மாணவர்கள்
மற்றும் யாழ்.பேராதனை
G.A.Q Part I, Final
பிரத்தியேக வகுப்பு மாணவர்கள்,
யாழ்ப்பாணம்.

(96008)



## பாராளுமன்றத் தேர்தல் 2010 யாழ் மாவட்டம்

—நான் உங்கள் வீட்டுப் பிள்ளை இது ஊரறிந்த உண்மை

நான் பதவியேற்று மூன்று மாதங்களில் மாண்பு மிகு ஜனாதிபதியின் ஆதரவுடன் பாதுகாப்பு வலயத்தை கட்டம் கட்டமாக அகற்றுவேன்




அங்கஜன் இராமநாதன்
Angajan Ramanathan B.ENG(HON) MBA
இளமை-துடிப்பு-செயற்றிறன்



## மணமகள் தேவை

R.C யாழ்ப்பாணம், கௌரவ குடும்பம், UK பிரசாவுரிமையுடைய 30வயது மகனுக்கு படித்த அழகான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு: 0718381119 (96012)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973ஆம் ஆண்டு, பரணி, 4ஆம் பாதத்தில் (21.08.1973) பிறந்த, அரச திணைக்களத்தில் பணிபுரியும் (பட்டதாரி) விவாகரத்துப் பெற்ற மணமகளிற்கு தகுதியான மணமகனைத் தேடுகிறார்கள். ஜாதகக் குறிப்பு, தொலைபேசி, விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். குறிப்பு: திருமணத் தரகர்கள் தேவையில்லை. விள.இல: 4002, உதயன் பணிமனை.

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

45நாளில் பூரண நிறைவைக்கக் கூடிய தரமான புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு திங்கட் கிழமையும் விநியோகிக்கப்படும்.

தொடர்பு: கிருஸ்ணா பாம், பொன்னாலை வீதி, மானிப்பாய். தொ.பே.0772338084 (95835)


## காவலூரில் மின்தடையால் அலுவலகங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஊர்காவற்றுறைப் பகுதியில் பகல் வேளைகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதனால் அங்குள்ள அலுவலகங்களில் சேவைபுரியும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது வெயிலின் கடுமை அதிகமாக இருப்பதனால் மின் தடை காரணமாக அலுவலகப் பணிகளிலும் தடைகளும் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-300)

## மோட்டார் திணைக்கள பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமையுடன் பொதுமக்கள் சேவையை நிறுத்திக்கொண்டுள்ளது.

ஏப்ரல் 15ஆம் திகதி மீளவும் சேவைகள் ஆரம்பிக்கப்படுமென உதவி ஆணையாளர் பி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.(1-121)

## உளவள சமூகப்பணி: பயிற்சி பெற்றோருக்கு இன்று சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

உளவள சமூகப்பணியில் பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள (அச்சக வீதியில்) பாதுகாவலன் மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் உளவள சமூகப் பணியில் ஆறு மாதப்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இதில் சமூகப்பணி பாடசாலையின் பணிப்பாளர் ஓ.ரணவீர கலந்து கொள்வார். (ஒ-க)


# நினைவஞ்சலி



மண் மகிழ 06 ✦ 02 ✦ 1951
மனம் நெகிழ 29 ✦ 03 ✦ 2007

**திரு. எஸ்.கே. செல்லத்துரை**
(முன்னாள் கிராமசேவை அலுவலர் விசேடதரம் யாழ்ப்பாண பிரதேச செயலகம்)

கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ
கண்களெல்லாம் கடலாய் பொங்க
எம்மை கலங்க விட்டு சென்று
ஆண்டுகள் மூன்றாச்சு
ஆனாலும் உம் நினைவுகள் எம் மனதில்
ரீங்காரமாய் ஒலித்துக் கொண்டே இருக்கிறது

45, நக்கர் லேன்
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1177 சிவப்பு

26-03-2010



03 11 13 33

விருச்சிகம்

ஜக்போட் பரிசு ரூபா. 2,963,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 211,532 | 20/- | 4,230,640/- |
| 2 இலக்கங்கள் | 19,388 | 40/- | 775,520/- |
| 1 இல. + லக்கினம் | 19,193 | 60/- | 1,151,580/- |
| 2 இல. + லக்கினம் | 1,814 | 200/- | 362,800/- |
| 3 இலக்கங்கள் | 519 | 1000/- | 519,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,963,400/- | 2,963,400/- |
| மொத்தம் | | | 10,812,940/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 252,495 | | 11,312,940/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர்: பி.எம்.அபேரத்ன, ஆனமடுவ

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஜீ.சுமித் காமினி, திஸ்ஸபட்டிய

2010 மார்ச் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிலை நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் சேர்க்கப்படமாட்டாது. வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 501111311-4-46 |
| புத்தளம் | 501107766-5-48 |
| திருகோணமலை | 501102355-6-40 |
| கம்பஹா | 501109789-0-46 |
| கம்பஹா | 501118066-2-22 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



## மஹஜன ஸம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

26.03.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2221

வெற்றி எழுத்து: O  வெற்றி எண்கள்: 8 9 2 2 7 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 8 9 2 2 7 1 | ரூபா.12,539,388/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 8 9 2 2 7 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 9 2 2 7 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 2 2 7 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 126 |
| 4 பரிசுகள் | 2 7 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1287 |
| 5 பரிசுகள் | 7 1 | ரூபா. 100/= | பரிசுகள் 13091 |
| 6 பரிசுகள் | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 129346 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 8 9 2 2 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | 8 9 2 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 127 |
| 9 பரிசுகள் | 8 9 2 | ரூபா. 100/= | பரிசுகள் 1300 |
| 10 பரிசுகள் | 8 9 | ரூபா. 50/= | பரிசுகள் 13005 |
| 11 பரிசுகள் | O | ரூபா. 20/= | பரிசுகள் 51720 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,834,670.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி சிறப்புப் (B.Sc Hons, Mathematics) பட்டம் பெறும்

**துரைசிங்கம் சுபோதன்**

அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல நீர்வேலி வடக்கு காளி அம்பாளின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

இவரின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கிய பின்வரும் பாடசாலைகளின் கல்விச் சமூகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


யா/ உடுவில் அ.மி.த.க. பாடசாலை
யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை
யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி
யா/ ஸ்ரீசோமஸ்கந்தாக்கல்லூரி, புத்தூர்

"சிவகிரி",
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

வாழ்த்துவோர்:
அப்பா - துரைசிங்கம், அம்மா - அருந்தவமணி
தங்கை - து.காயத்திரி (அவுஸ்ரேலியா),
மைத்துனர் - [illegible]
தம்பிமார் - சுரேஸ்காந்தன் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் காருண்யத்தை நாமும் அறிவோம்...






நிதித்துறையில் புதிய அத்தியாயம் படைக்கும் CDB யைச் சேர்ந்த நாம், எமது வாடிக்கையாளர்களை அன்பர்கள், நண்பர்கள், உறவுகளாக மதிக்கிறோம். இதனால் உங்கள் காருண்யத்தை நன்கு அறிந்து உங்கள் அருகில் வந்தே எமது நிதிச்சேவையை புரிவதில் பெருமை கொள்கிறோம்.

- குத்தகை வசதி
- நிலையான வைப்பு
- அடகுச்சேவை
- வெளிநாட்டு நாணய மாற்றுச்சேவை

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ்
தலைமையகம்: இல.18, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொ.பே. 0117 388388 www.cdb.lk

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலமும் எமது ஆன்மீக வாழ்வும்




பாவப் பரப்பில் - இயேசுவிற்கு
சிலுவை மரணம் திணித்து
என் முன்னோர் சொன்ன - செய்தி
தேவ துரோகி
நியாயமாகியும் போனது இக்கூற்று
தன் வாழ்வினை சிதைத்து
பாவ தேசத்தைக்காத்த
ஆன்மீக வீரன் இயேசு
அறிந்திடு மாநிலமே விட்டழுத கண்ணீருக்கு
கிடைத்த விலையிது - மீட்பு
விதைத்த விதையும் - இயேசு
அறுவடையின் தொடக்கமும் - இயேசு

இத்தவக்காலம் ''ஒரு கிறிஸ்தவனை கிறிஸ்துவாக உருமாற்றும் காலம்'' இது மனமாற்றத்தின் காலம். இறைபிரசன்னத்தை உணர்த்துவதும் அப்பிரசன்னத்தில் நிலைத்து நிற்பதற்குமே இக்காலம் நம்மை அழைத்து நிற்கின்றது. நம் வாழ்வையும், மனநிலையையும் கிறிஸ்துவின் மனநிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். ''இயேசு தம் இரத்தத்தினால் இந்த மனுக்குலத்தை மீட்டார்.'' எனவே நாம் ஒவ்வொருவரும் நம் உடலினால் அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும். எமது உணர்வுகள், சிந்தனைகள், உடலின் வேட்கைகள் இவற்றை ஆன்மீக ரீதியில் முன்னெடுக்கும் பொழுது இவை நம்மை முழுமனித ஆன்மீக விடுதலைக்கு இட்டுச் செல்கின்றது. நாம் இக்காலத்தில் அவர் விருப்பத்தை தேர்ந்து தெளிந்து அதை எம் வாழ்வில் நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் இக்காலத்தில் அவர் கேட்கும் கேள்விக்கு பதில் மொழி கூறுபவர்களாக மாறுவோம். இந்நாள்களில் ஆன்மீக ரீதியாக முழுமனித விடுதலை அடைய வேண்டும் என்கின்ற தாகம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் எழ வேண்டும். வாழ்க்கையின் சவால்கள் மத்தியிலும் தான் தேர்ந்தெடுத்த திருத்தூதர்கள் கைவிட்ட நிலையிலும் மரணத்தைச் சந்திக்கத் துணிகின்றார் இயேசு. தந்தையின் திரு வுளத்தை தேர்ந்து தெளிகின்றார். தேர்ந்து தெளிவதற்கு செயல் வடிவம் கொடுக்கின்றார். அச்செயலினால் தன்னை ஆன்மீகமாகவே பலியாக்கினார்.

நாமும் இயேசுவின் ஆன்மீக வாழ்வோடு இத்தவக்காலத்தில் பயணிப்பவர்களாக மாறுவோம். வாய்ப்பு, வசதிகள் எம்முடைய வாழ்க்கைக் கதவுகளை ஒரு முறை அல்லது இருமுறை தான் தட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால் சோதனைகள் எம்முடைய மனக்கதவை ஆயிரக்கணக்கில் வருடா வருடம் தட்டிக் கொண் டிருக்கின்றது. இந்தச் சோதனையை விருந்தாளி என்று ஒரு முறை மனவீட்டில் வரவேற்றால் அது பல விருந் தாளிகளை அழைத்து வந்து நம்மை அழித்துவிடும்.

எனவே அழிந்து போகும் உலக மாயைகளில் இருந்து விடுபட்டு இறைவனின் அரவணைப்பிலும் ஆன் மீக வாழ்விலும் இத்தவக்காலத்தில் இயேசுவோடு சேர்ந்து பயணிப்போம்.

நாவாந்துறை.

மேரி நீருஜா வின்சன்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




க.சுகிர்தா (B.B.A.) க.தர்சித் (B.Com.)

26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற சகோதர, சகோதரிகளை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தங்கராசா (சித்தப்பா), செல்வமணி (சித்தி),
பிள்ளைகள் (கதிர்ச்செல்வன், யசீந்தன், வபிதா),
நல்லூர். (96051)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.த.பிருந்தாகரன் திரு.ந.நவகிஸ்ணராசா

எமது காரைநகர் பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமையாற்றும் சக உத்தியோகத்தர்களான திரு.தங்கவேலாயுதம் பிருந்தாகரன், திரு.நவரத்தினம் நவகிஸ்ணராசா ஆகிய இருவரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2010ஆம் திகதி வியாபார தொழில் நிர்வாகமாணி (B.B.A.) பட்டம் பெறுவதையிட்டு மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

செயலாளர்,
உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்,
காரைநகர் பிரதேச சபை. (96042)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி யாழினி கணேசராஜசர்மா

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை நுண்கலைமாணி (இசைத்துறை) பட்டம் பெற்ற எம் செல்வத்தைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் பட்டங்கள் பல பெற்றுச் சீருடனும்,சிறப்புடனும் இனிது வாழ எல்லா வல்ல இறைபதம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்.
தாத்தா,அம்மம்மா,அம்மா,
கணவர்,மகள்,மாமாமார்,
மாமிமார், சித்தப்பா,சித்தி, அத்திம்பேர்,
மச்சான்மார்,மச்சாள்மார்.

தகவல்:
சித்தப்பா, சித்தி
கொழும்பு. (96028)

---

## படகுச் சேவைக்கான வரி குறைப்பு

புங்குடுதீவு, மார்ச் 29

குறிகாட்டுவான் - நயினாதீவு படகு சேவையில் ஈடுபட்டு வரும் படகு உரிமையாளர்களிடம் இருந்து பிரதேச சபையினரால் அறவிடப்பட்டு வந்த வரி தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டணம் தொடர்பாக பல கோரிக்கைகள், பிரதேச செயலர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே இக்கட்டணம் குறைக்கப்பட்டதாக படகு உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-188)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கி.விசாகரூபன் அவர்களின் நெறிப்படுத்தலில் ஆய்வினை மேற்கொண்டு நேற்று (28.03.2010) இல் பொதுப் பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்துறையில் முதுதத்துவமாணி M.Phil. பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட எமது அன்புக்குரிய

**திரு.நவரட்ணம் சத்தியவேந்தன்**
B.A.(HONS), M.Phil.

அவர்களைப் பாராட்டி மேலும் பட்டங்களைப் பெற்று உயர்வு பெற இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்தும்:
செ.குலசேகரம் (மாமா), கு.தனலட்சுமி (அத்தை),
கு.லோஜினி, கு.உஷாந்தன் - சுகன்ஜா,
சு.சுரேசினி, சு.சுஜீவன்.

பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய். (95939)

---

உ
ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமக

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் (01-04-2010) வியாழக்கிழமை முற்பகல் 10-57 முதல்12-33 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **கஜீபன்** அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **ஹெளசிகா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மீனாட்சி அம்மன் கோயில் (கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி) மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் வருகை தருக.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.கா.மாணிக்கம் குடும்பம்
இல.320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(95757)

திருமதி அ.கந்தசாமி குடும்பம்
மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொடர்பு - கோமதன்
(0773049893)

---

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010
## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



நாகலிங்கம் குழந்தைவேலு
(தமிழ்க் குழந்தை)
முன்னைநாள் உதவி ஆணையாளர்
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
முல்லைத்தீவு மாவட்டம்
4




கொள்கை வழியே
உறுதியாய் பயணிக்கும்
இவர்களே
எமது
தெரிவு!

10 சின்னத்துரை வரதராஜன் (முதன்மை வேட்பாளர்)

2 கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

X

-மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டிக்குப் போட்டியாகப் பகையை வளர்க்கும் வரை இன முரண்களுக்குத் தீர்வை எட்ட முடியாது



**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமாகிய மு.சந்திரகுமார் (அசோக்) உதயனுக்கு வழங்கிய செவ்வி இது.**

**கேள்வி:** முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நீங்கள் மீண்டும் களமிறங்கியதன் காரணம் என்ன?

**பதில்:** என்னுடைய அரசியல் பணி அல்லது மக்களுக்கான பணி என்பது தொடர்ந்து கொண்டே இருக் கிறது. நாடாளு மன்ற பதவிக்கு முன்னரும் - 1980களின் முற்பகுதிகளிலிருந்தே அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. எமது கட்சியின் தீர்மானப்படி இப்போது மீண்டும் நான் தேர்தலில் போட்டியிடுகிறேன். அவ்வளவுதான்.

30 ஆண்டு கால முடிவில்லாத போருக்குள் சிக்கியிருந்த மக்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை தேவை. இழந்துபோனவற்றை மக்கள் மீளப்பெறவும் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை உரிமையுடன் கூடியதாக அமையவும் வேண்டும். இதற்கு நாம் புதிய முறையிலான - பகை மறப்பு அரசியலை முன்னிலைப்படுத்துகின்றோம். இன்றைய உலகத்திற்குப் பொருத்தமான அணுகுமுறையே இப்போதைய தேவை. இல்லையென்றால் எத்தகைய வலிமையுடன் நாம் இருந்தாலும் அது ஒரு நாளில் எந்தப் பயனுமில்லாமல் போகும் என்பது கடந்த கால அனுபவமாகும்.

எனவே தான், பகைமறப்பு அரசியலை - இணக்க அரசியலை நாம் முன்னெடுக்கின்றோம். இதுவே இன்றைய உலகின் அரசியலாகும். மீண்டும் மக்கள் ஒரு அவல வாழ்வுக்குள் சிக்கக் கூடாது என்பதற்காகவே நானும் இந்தப் பணியில் இறங்கியுள்ளேன். இந்தப் பொறுப்பைச் செய்வதில், மக்களுடன் இணைந்து நிற்பதில் எப்போதும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.




**கேள்வி:** நீங்கள் எம்.பி.யானால் என்ன திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள்? குடாநாட்டின் அபிவிருத்திக்கு என்ன திட்டங்களை வைத்துள்ளீர்கள்?

**பதில்:** இந்தத் தேர்தலில் எமது கட்சி பெரு வெற்றி ஈட்டும் என்ற நம்பிக்கை எமக்கும் மக்களுக்கும் உண்டு. மக்களுடைய தேவைகள் நிறையவுள்ளன. அவற்றை நிறைவேற்றுவதற்காக மக்கள் எம்முடன் பேராதரவாக ஒன்றிணைந்து நிற்கின்றார்கள். நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதாலும் பிரதேசம் என்பதாலும் இழந்தவற்றை மீளுருவாக்கம் செய்ய வேண்டும். யாழ். தேர்தல் மாவட்டம் என்பது கிளிநொச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கியது. எனவே அபிவிருத்தியிலும் புனரமைப்பிலும் நாம் கிளி நொச்சியை உள்ளடக்கியே ஆகவேண்டும்.

அதேவேளை, எதிர்காலத்திற்கான அபிவிருத்தி, சூழல் மேம்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரமைய உருவாக்கம், பண்பாட்டுக்கான சிறப்பு நடவடிக்கைகள் எனப் பலவற்றைச் செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

எமது கட்சியின் திட்டப்படியே அபிவிருத்தி மற்றும் மீளுருவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்படும். இதற்காக தமிழ் பேசும் மக்கள் - குறிப்பாக புலம் பெயர்ந்த மக்களின் பங்களிப்பு உட்பட - சகலருடைய கூட்டு ஆலோசனை, அபிப்பிராயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிகள் அமையும். இந்த அபிவிருத்தியிலும் மீளுருவாக்க நடவடிக்கைகளிலும் மக்களின் மனதில் உள்ள அபிலாசைகளை முன்னிலைப்படுத்துவோம்.

விவசாயம், கடற்றொழில், பனை மற்றும் தென்னை சார்ந்த தொழில்துறை உள்ளிட்ட சகல பாரம்பரிய, நவீன தொழில் துறைகளையும் மேம்படுத்துவோம். எதையும் சொல்வதற்குப் பதிலாக செய்யும் ஒரு பாரம்பரியத்தை மக்களுக்கு கடந்த காலத்தில் நாம் நிருபித்துள்ளோம். இதற்காகவே கடந்த மாநகர சபைத் தேர்தலிலும் மக்கள் எம்மை வெற்றியடையச் செய்தனர். மக்களுக்காக உழைப்பதில் எமது செயலாளர் நாயகம் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா எப்போதுமே முன்நிற்பவர் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆகவே, இலங் கைத் தீவில் மீண்டும் யாழ்ப்பாணம் தலை நிமிர்த்து நிற்கக்கூடிய வகையில் எங்கள் திட்டங்களும் செயற்பாடுகளும் அமையும்.

ஏற்கனவே, வீதி அபிவிருத்திகள், யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடம் மற்றும் நீண்ட காலமாக தடைப்பட்டிருந்த கடல் உணவு, விவசாயப் பொருள்கள் ஏற்றுமதி உள்ளிட்ட பல அபிவிருத்தி நடவடிக்கைகளை எமது அமைச்சர் தலைமையில் ஆரம்பித்து விட்டோம்.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதே முதலாவது சிறப்பு அபிவிருத்தி அல்லவா. இனி இதிலிருந்து தான் எல்லாவற்றையும் எவரும் கட்டியெழுப்ப முடியும். இந்த இயல்பு வாழ்க்கைக்காக நாம் கடுமையாக உழைத்திருக்கின்றோம் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இன்னும் இது தொடருமென உறுதியளிக்கின்றோம். செய்து முடிக்கவேண்டிய காரியங்களுக்காகவே நானும் தேர்தலில் இறங்கியுள்ளேன்.

**கேள்வி:** இப்பிரச்சினைக்கு எந்த வகை யான தீர்வுகாணப்படவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள்?

**பதில்:** தமிழ் மக்களின் அபிலாசை கவனத்தில் எடுக்கப்படும் தீர்வு முக்கியமானது. தங்கள் உரிமைகளுக்காக சக்திக்கு மீறிய அளவில் மக்கள் போராடியிருக்கிறார்கள். எல்லா வடிவங்களிலும் போராடியிருக்கிறார்கள். உச்சமான தியா கங்களைச் செய்திருக்கிறார்கள். இவை எல்லாம் நிச்சயம் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

அதேவேளை, மக்களின் அபிலாசைகளுக்குத் தக்கமாதிரியும் இதுவரையான போராட்ட அனுபவங்களைக் கவனத்தில் கொண்டும் நாம் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும். மக்களுக்கு எத்தகைய வாக்குறுதிகளையும் அள்ளிவழங்கலாம். அது முக்கியமல்ல. அது இலகுவானது. ஆனால், கொடுத்த வாக்குறுதிகளின்படி உரிய இலக்கை எட்டுவதே முக்கியமானது.

கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்ப இலக்குகள் எட்டப்பட்டனவா? பதிலாக மக்களே அவல வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர்.

மக்களின் அவல வாழ்க்கையை வைத்தே அரசியல் நடத்துகின்ற ஒரு கேவலமான சூழல் தமிழ் அரசியலில் உருவாகிவிட்டது. பகைவளர்ப்பு அரசியலை வைத்து இவர்கள் மக்கள் உணர்வுகளைத் தூண்டி மக்களையே பலியாக்கி வருகின்றனர். ஏட்டிக்குப்போட்டியாகப் பகையை வளர்க்கும் வரை இன முரண்பாடு தீரப்போவதில்லை. அதனால், தமிழ் மக்களுக்குத்தான் அழிவு ஏற்படும். ஆகவே பகைமறப்பு அரசியலினூடாக - இணக்கப்பாடினூடாக தொடரமுடியாத புள்ளிகள் என்று கருதப்பட்டவற்றைத் தொடரலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. உதாரணமாக ஏ-9 வீதி திறப்பதற்காக எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக எவ்வளவோ உயிர்கள் இரண்டு தரப்பிலும் பலியிடப்பட்டன. பேச்சுவார்த்தைகள்கூட இந்த வீதிப் பிரச்சினையால் முடிவுக்கு வந்தன. சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் ஏ-32 வீதி (பூநகரி - கேரதீவு) திறப்புப் பிரச்சினையே பேச்சுவார்த்தையை முறித்தது. ஆனால், இந்த வீதி இன்னும் சில நாள்களில் சாதாரணமாகவே திறந்து வைக்கப் படவுள்ளது. ஒரு காலத்தில் சர்ச்சைக்குரியவை, பிரச்சினையாக இருப்பவை இன்னொரு காலத்தில் இது மிகச் சாதாரணமாகவே தீர்வைக்கண்டுவிடும். பகைமறப்பின் அடிப்படையே இது தான். எனவே, எங்கள் மக்களின் அபிலாசைகள் நிச்சயம் எட்டப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**கேள்வி:** மகிந்த ராஜபக்ஷ அடுத்த தவணைக்கும் ஜனாதிபதியாக இருக்கப்போகின்றார். அவருடைய பதவிக் காலத்தில் தீர்வுஒன்றைக் காண்பார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**பதில்:** இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இலங்கை அரசாங்கம், எதிர்க் கட்சிகள், தமிழ்த் தரப்பு எனப் பல தரப்பினர் சம்பந்தப்பட்ட விசயம். இதில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் செல் வாக்கும் கணிசமான அளவு உண்டு. குறிப்பாக, தமிழ்த் தரப்பின் அணுகு முறை தீர்வை நோக்கி அரசாங்கத்தை அழைப்பதற்கு முக்கிய பங்களிக்க வேண்டும். இரண்டு தரப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இழுபறி நிலை ஒரு போதும் தீர்வைத் தராது. அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுப்பது, ஒத்துழைப்பது போன்ற அணுகு முறைகள் தேவை பொறுத்து அமையும் போது இது சாத்தியப்படுத்தலாம். இதற்கு மக்களுடைய பேராதரவு எமக்குக் கிடைக்கவேண்டும். நாம் நிச்சயமாக அரசியல் தீர்வு நோக்கி அரசாங்கத்தை கொண்டுவருவோம் என நம் புகின்றோம். மக்களிடம் இது பற்றிய தெளிவு இப்பொழுது அதிகரித்துள்ளது.

**கேள்வி:** இடம்பெயர்ந்த மக்களின் அவலங்கள் தொடர்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்ய என்ன ஏற்பாடு செய்வீர்கள்?

**பதில்:** ஏற்கனவே வன்னி மக்கள் உள்ளிட்ட சகல இடம்பெயர்ந்த மக்கள் தொடர் பாகவும் சிறப்புக் கவனமெடுத்து உரிய பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். குடாநாட்டிற்குள் இடம் பெயர்ந்த மக்கள் கணிசமானவர்கள் மீள்குடியேறி வருகிறார்கள். வலி.வடக்கு மக்களும் அடுத்த சில வாரங்களில் குடியேறக் கூடிய சூழல் உருவாகிவிடும். வன்னி மக்களை முகாம்களுக்குச் சென்றே சந்தித்து அவர்களுக்கான பணிகளைச் செய்து வருகின்றோம். மீள்குடியேறிய பிரதேசங்களில் (கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்கள், வவுனியா வடக்கு, மன்னார் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில்) நேரில் சென்று அந்த மக்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருகின்றோம். சுமார் 500 பேருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், கடற்றொழிலாளர் சங்கம், பனை, தென்னை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல அமைப்புக்களுக்கும் இத்தகைய உதவிகள் வழங்கப்படுவதற்காக இனம்காணப்பட்டுள்ளன. அங்குள்ள மக்களை இணைத்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் ஆலோசித்துள்ளோம். இது அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும். அத்துடன் அங்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகின்றோம். அந்த மக்களின் துயர வாழ்க்கையை எல்லோருமாக இணைந்து முடிவுக்குக் கொண்டு வரவேண்டியுள்ளது. அப்போதுதான் அவர்கள் கடந்த கால அவலத்திலிருந்து மீட்கப்படுவர். இதற்காக சகல தரப்பினரையும் இணைக்கும் மறுவாழ்வுத் திட்டமொன்றை ஏற்பாடு செய்யவுள்ளோம்.

**கேள்வி:** நீங்கள் லண்டனில் இருந்து வந்துள்ளீர்கள். அங்குள்ள புலம்பெயர் மக்கள் எமது பிரச்சினைகளை எப்படிப் பார்க்கிறார்கள்?

**பதில்:** நீங்கள் சொல்வது தவறானது. தேவைகளைப் பொறுத்து லண்டன் உள்ளிட்ட புலம்பெயர் மக்கள் வாழும் நாடுகளுக்கு சென்று வருகிறேன். கட்சிப் பணி சார்பில் புலம்பெயர் நாடுகளிலும் அதேவேளை தாயகத்திலுமாக எனது செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதை நீங்களும் நன்றாக அறிவீர்கள். வன்னி மக்கள் இடம் பெயர்ந்து வந்தவேளை முகாம்களில் அவர்களுக்கான பணிகளை மேற்கொள்வது தொடக்கம் சகல பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றேன் என்பதை உங்கள் பத்திரிகையே தெரிவித்து வந்துள்ளது. தேர்தலுக்காக வரும் விருந்தாளியாக அல்லாமல் புலம்பெயர் மக்களின் பங்களிப்புகளையும் தாயக மக்களின் தேவைகளையும் ஒன்றிணைக்கும் பணியை செய்துவருகின்றேன.

புலம்பெயர் மக்களில் ஒரு தொகுதியினர் நிலைமைகளைச் சரியாகப் புரிந்துள்ளனர். மற்றொரு தொகுதியினர் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதில் ஆர்வமாகவும் நிலைமைகளை மதிப்பீடுவதில் அக்கறையாகவும் உள்ளனர். இன்னொரு தொகுதியினர் யதார்த்தத்திற்கு அப்பால் விடாப்பிடியான பழைய போக்கிலேயே தொடர்ந்தும் உள்ளனர். இதற்குக் காரணம் தாயக மக்களின் நிலைமை, இலங்கை அரசியல் சூழல் போன்றவை பற்றி சரியான தகவல் பரிமாற்றத்திற்கு சில தரப்பினரும் சில ஊடகங்களும் தடையாக இருப்பதே காரணமாகும். ஆனால், ஒப்பிட்டளவில் இன்னும் சில காலம் செல்ல தாயக மக்களின் பிரச்சினைகளுடனும் மனநிலையோடும் ஒத்தவர்களாக இருப்பர் என நம்புகிறேன். அது வரை சில குழப்பங்கள் நீடிக்கவே செய்யும். எந்தக் கற்பனையையும்விட நிஜத்திற்கு வலிமை அதிகம். என்பதால் இந்த யதார்த்தம் நிச்சயம் எல்லோராலும் உணரப்பட்டாலே தீரும்.

## கடந்த காலப் போராட்டங்கள் எமக்கு ஒரு படிப்பினை; அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் சந்திரகுமார்

**செவ்வி: லக்ஸ்மன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான குடாநாட்டு மக்களே!



பத்திரிகைத்துறையில் பலராலும் அறியப்பட்ட நான் அரசியலுக்கும் புதியவனல்லன். கடந்த 15 ஆண்டுகளாக பத்திரிகைத் துறையில் நான் பணியாற்றியுள்ளேன். வீரகேசரி பத்திரிகையில் ஒரு செய்தியாளனாகப் பணியைத் தொடங்கிய நான் கடந்த 06 வருடங்களாக செய்தி ஆசிரியராக அங்கு கடமையாற்றியுள்ளேன். கடந்த 2000ஆம் ஆண்டு எனது அருமை நண்பன் தி.மகேஸ்வரன் முதன் முதலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டபோது நானும் அவருடன் இணைந்து களமிறங்கியிருந்தேன். நண்பன் மகேஸ்வரனுக்கு அடுத்தபடியான வாக்குகளை நான் பெற்றிருந்தேன். குடக்கர் பொன்னுத்துரை. கந்தர் விசுவநாதர் (முருகர்)ஆகியோரின் பேரனான நான் தற்போது முழுமையாக அரசியலில் களமிறங்கியுள்ளேன்.

## ஏன் களமிறங்கினேன்?

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட எனக்கு வாய்ப்பு இருந்த போதிலும் சொந்த மண்ணில். சொந்த மக்கள் மத்தியில் போட்டியிட்டு வென்று இந்த மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் நான் இங்கு உங்கள் மத்தியில் மீண்டும் வந்துள்ளேன். குடாநாட்டு மக்களான நீங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றீர்கள். வர்த்தகர்கள். விவசாயிகள். மீனவர் சமூகம். சிறு கைத்தொழிலாளர்கள். பல்கலைக்கழக மாணவர்கள். தனியார் துறை ஊழியர்கள். அரசாங்கத்துறை ஊழியர்கள். ஓய்வூதியர்கள் என பல தரப்பினரும் பல்வேறு நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இப்போது யுத்தம் மௌனித்துள்ளது: இந்த யுத்தத்தின்போது எமது மக்கள் பட்ட இழப்புக்களும் கஷ்டங்களும் துன்பங்களும் வேதனைகளும் சொல்லில் அடங்காதவை. அதிலிருந்து மக்களை மீட்க வேண்டும். உடனடியாக அவர்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது மிக மிக அவசியமானது. இந்தப் பிரச்சினைகள் யுத்தம் மௌனித்து 10 மாதங்கள் கடந்தும் இன்னும் தீர்க்கப்படவில்லை: இத்தகைய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய தேசிய பெரிய கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியே திகழ்கின்றது. இதனால்தான் நான் மீண்டும் நண்பன் மகேஸ்வரனின் அணியில் களமிறங்கியுள்ளேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனான எனக்கு கல்லூரி சமூகமும் பெரும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது. குடாநாட்டு மக்களின் ஆதரவானது எனது வெற்றிக்கு நிச்சயம் வழி வகுக்கும்.

## சுயாதீனமாக செயற்படுவோம்

நண்பன் மகேஸ்வரன் படுகொலை செய்யப்படும்வரை அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். ஐ.தே.கவில் அவர் அங்கம் வகித்த போதிலும் சுயாதீனமாகவே செயற்பட்டார். அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தபோதிலும் எதிரணியில் எம்.பி.யாக இருந்த போதிலும் அவர் அவசரகாலச் சட்டத்திற்கு எதிராகவே வாக்களித்தார். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட போதெல்லாம் தட்டிக்கேட்டார். நண்பன் மகேஸ்வரனின் பாதையில் தேர்தலில் வெற்றி பெற்றதும் நானும் எனது அணியினரும் சுயாதீனமாகவே செயற்படுவோம். நண்பன் மகேஸ்வரன் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வதற்காக திருமதி விஜயகலா மகேஸ்வரன் தேர்தலில் களமிறங்கியுள்ளார். அவருடன் இணைந்து எமது அரசியல் பயணம் தொடரும்.

## பத்திரிகைத்துறை மூலம் சேவை

குடாநாட்டு மக்கள் எமது அணிக்கு உரிய ஆணையைத் தந்தால் தென்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பது நிச்சயம். எனவே இம்முறை குடா நாட்டு மக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும். யுத்தகாலத்தில் நீங்கள் துன்ப துயரங்களை அனுபவித்த போது. வெளிநாடுகளுக்கு தப்பி ஓடாமல் பத்திரிகைத்துறையின் மூலம் பல அச்சுறுத்தல்களை சந்தித்த போதும் நான் சேவையாற்றியுள்ளேன். பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும் கடத்தப்பட்ட போதும் தமிழ் மக்களுக்காக. அதாவது என்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று நான் செயற்பட்டேன். மாற்றுக்கட்சி எம்.பிக்களைப் போல் நான் வெளிநாடுகளுக்கு சென்று தங்கிவிட்டு தற்போது வரவில்லை. பத்திரிகைத்துறையில் நான் சேவையாற்றிய சமயம் 03 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டேன். இருந்த போதிலும் தமிழ் மக்களுக்கான சேவையை நான் தொடர்ந்தேன். தமிழ் மக்கள் துன்பப்பட்ட போதும் துயரப்பட்டபோதும் எனது பேனா எழுத மறுக்கவில்லை. உங்களோடு இருந்தே உங்களின் பிரச்சினைகளை பத்திரிகை மூலம் வெளிக்கொணர்ந்தேன். இதனை யாரும் மறுக்க முடியாது. பத்திரிகைத்துறையில் பேனா மூலம் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை உலகம் அறிய நான் செய்த சேவையை இனி வருங்காலங்களில் பாராளுமன்றத்தின் மூலம் ஆற்றுவதற்கான ஆணையை எனக்கு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.


## வாக்குகளை வீணாக்காதீர்கள்

தமிழ் தேசியம் பேசியவர்கள் இன்று பல பிரிவுகளாக பிரிந்து வாக்குகளை சிதறடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எனவே இத்தகையவர்களுக்கு வாக்களித்து வாக்குகளை வீணாக்காது எனது அணியையும் என்னையும் வெற்றிபெறச் செய்வதன் மூலம் வளமான எதிர்காலத்தை தமிழ் மக்களுக்கு உருவாக்க முடியும்.

நன்றி
உங்களில் ஒருவன்

**எஸ்.ஸ்ரீகஜன்**

வேட்பாளர்
ஐக்கிய தேசியக் கட்சி



X

10

---

**காணி விற்பனைக்கு**

கச்சேரி, நல்லூர்றோட், பாரதி வீதியில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியுடன் பங்குக் கிணறும் விற்பனைக்கு உண்டு. விலை விவரம் காணியைப் பற்றி அறிவதற்கு 111, கச்சேரி - நல்லூர் றோட் V.ஜெகசோதிநாதன் என்பவருடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 021 222 9065 (96060)

---

**பற்சிகிச்சை நிலையத்திற்கு பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்திற்கு பணிபுரிய பெண் உதவியாளர்கள் தேவை.31ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சமுகம் தரவும்.

462/1,ஆஸ்பத்திரிவீதி,யாழ்ப்பாணம்.
(ஜெகன் பாமசி அருகாமை)

நிர்வாகி.

(96027)

---

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**உயர் கலைக் கல்லூரி மீசாலை**

எமது கல்லூரியின் ஆசான்களான





**கந்தையா தர்மராசா**
SP.TRD.,B.A.,PGDE, MEd., M.A. (TAMIL)
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரிய கல்வியியலாளர்)

**கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்**
B.A.(Hons), PGDE, M.A. - (Saivasiddhanta)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணியில் அதிசிறப்புப் பட்டங்களைப் பெற்றதையிட்டு அவர்களை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர் கல்வி சேவையும் சிறப்படைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அல்லாரை வீதி, மீசாலை. (சி/566224) உயர் கலைக் கல்லூரிச் சமூகம்.

---

## எண்கோண அமைப்புடன் வசந்த மண்டபம்

சுழிபுரம்,மார்ச் 29

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் எண்கோண அமைப்புக் கொண்ட புதிய வசந்தமண்டப கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வசந்த மண் டப முன்பாக புதியவாசல் அமைக்கப்பட்டு வெளி வீதியில் நின்று வழிபடுவோர் பூசையை பார்க்கக் கூடிய வகையில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ஓ-28)

## மாணவர்களின் கல்விச் சுற்றுலா

நாவற்குழி,மார்ச் 29

நாவற்குழி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அண்மையில் ஒரு வார கால கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நாட்டின் அநேக மாகாணங்களுக்கும் சென்று வந்துள்ளனர்.

தமது கல்வி தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், தாவரவியல் பூங்காக்கள், தொல்லியல் சான்றுகள், பலவகை நிலத்தோற்ற இடங்கள் ஆகியவற்றை அவர்கள் நேரில் பார்த்துள்ளனர்.

தரைவழிப்பாதை திறந்து விடப்பட்ட பின்னர் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் இத்தகைய கல்விச் சுற்றுலாவை மேற்கொள் [illegible] காண முடிகின்றது. (ஓ-121)

---

**S.R.S Farm**
**எஸ்- ஆர் - எஸ் பாம்**

பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு (பஸ் டிப்போ முன்பாக)
தொ.பே. 0770890444, 0775049058

கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களின் நலன் கருதி நாம்

**நியூ பேர்ணாட் இன்**

கோழித் தீவனங்கள், கால்நடை உணவுத் தீவனங்கள், ஒரு நாள் கோழிக்குஞ்சுகள்

என்பவற்றைத் தரமானதாகவும், குறைந்த விலையிலும் வழங்கி வருகின்றோம். இவற்றைக் கொள்வனவு செய்வதன்மூலம் உங்கள் செலவினைக் குறைத்து இலாபத்தை அதிகப்படுத்துங்கள்

* ஒரு நாள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் (புறோயிலர்)
* ஒரு நாள் முட்டைக் கோழிக்குஞ்சுகள் (லேயர்)
* இறைச்சிக்கோழி (புறோயிலர்) உணவுவகைகள்
* முட்டைக்கோழி(லேயர்) உணவு வகைகள்
* கோழிகளின் நோய்களுக்கான மருந்து வகைகள் (Antibiotic)
* கோழிகளுக்கான விற்றமின் வகைகள்
* கோழிகளுக்கான தடுப்பு மருந்துகள் (Vaccine)
* கோழிகளுக்கான குளுக்கோஸ்
* பண்ணை உபகரணங்கள்
* சிறிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
* பெரிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
* நாய்களுக்கான சம்போ,சவர்க்காரம்,விற்றமின்கள்

கால்நடைகளுக்கான அனைத்து மருந்து வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே நாடுங்கள்

விற்பனை முகவர்: நியூ பேர்ணாட் மிருக உணவுகளும் கோழிக்குஞ்சுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பலத்தை சிதைப்பதற்காகப் பல கட்சிகள் தேர்தல் களத்தில்

## மட்டுவில் பிரசாரக்கூட்டத்தில் அருந்தவபாலன்

சாவகச்சேரி,மார்ச்.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கும் தமிழ் மக்களின் பலத்தைச் சிதைக்க



பல கட்சிகள் முன்நிற்கின்றன. எனவே தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் எதிர்வரும் பொதுத் தேர்தல் மிகவும் முக்கியத்துவமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பலத்தைப் பெருக்க இந்தத் தேர்தலில் முன்நிற்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சிப் பகுதி வேட்பாளர் க.அருந்தவபாலன்.

அண்மையில் மட்டுவில் கிழக்கு வின்சன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரசாரக் கூட்டம் வின்சன் சனசமூக நிலையத்தின் தலைவர் வ.சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அருந்தவபாலன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் பலத்தைப் பெருக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அரசியல் அபிலாசைகள் போன்றவற்றை நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை எமக்குள்ளது. மிகவும் நீண்ட காலமாக எமது உரிமைகளை பெற்றுக்கொள்ள சாத்வீக போராட்டங்கள் நடைபெற்றன. அவை பயனளிக்கவில்லை. இதனால் மீண்டும் எமது உரிமைகளை பெறுவதற்கு அரசியல் ரீதியான முன்னெடுப்புக்களைச் செய்தல் வேண்டும். அதற்கு எமக்கென்ற அரசியல் பலம் தேவை. அதற்கு நாடாளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையினூடாகத்தான் நிர்ணயிக்க முடியும். நாங்கள் இலங்கை அரசுடன் சர்வதேசத்தின் உதவியுடன் தன்னாட்சியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த அரசுடன் இணைந்து நிற்பவர்கள் மக்களுக்கு சலுகைகள் காட்டுவார்கள். இவற்றிற்கு மக்கள் ஏமாற்றமடையக் கூடாது. இந்தத் தேர்தலில் எமது இன ஒற்றுமையை காட்டுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

நாங்கள் சம காலத்தில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க இருக்கிறோம். குறிப்பாக வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தி அவர்களை மேம்படுத்துதல், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்கவும் நாம் முயற்சி எடுப்போம்- என்றார். (50-131)

# மக்கள் தத்தளித்தபோது திரும்பியும் பார்த்திராதவர்கள் தேர்தல் வந்தவுடன் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றார்கள்

## கிளிநொச்சி மக்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 29

எமது மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இடர்களுக்கு மத்தியில் தத்தளித்துக் கொண்டிருந்த போது அம்மக்களைத் திரும்பியும் பார்த்திராதவர்கள் இன்று பொதுத்தேர்தலொன்று நெருங்கியுள்ள சந்தர்ப்பம் பார்த்து மீளக்குடியமர்ந்துள்ள அம்மக்களை நாடி வந்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றனர் எனத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு இவர்கள் கடுகளவேனும் உதவிகளைச் செய்துள்ளார்களா? எனக் கேள்வி எழுப்பினார்.

பூநகரியில் பொதுமக்களைச் சந்தித்து உரையாடிய அவர் மேலும் தெரிவித்ததாவது, அழகழகான கோஷங்களை முன் வைத்தால் மட்டுமே போதாது, எமது மக்களின் துயர்துடைப்பதற்கேற்ற வழிமுறையில் நடைமுறைச் சாத்தியமாக சிந்தித்து செயற்படக்கூடிய அரசியல் தலைமைத்துவமே எமது மக்களின் இன்றைய தேவையாகும். எதிர்ப்பு அர சியல் என்ற போர்வையில் எமது மக்களின் நியாயமான உரிமைகளுக்கு தடைபோடும் சுயலாப அரசியல் தலைமைகள் எமது மக்களுக்கு தொடர்ந் தும்அழிவுகளை மாத்திரமே கொண்டு தருகின்றன-என்றார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளைத் தான் தற்போது மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெகு விரைவில் இப்பகுதி மக்களது பிரச்சினைகளில் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் எனவும் கூறினார். (50-6)

# வன்முறைகள், அடாவடித்தனங்களைக் கைவிட்டு வன்னியில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவ முன்வருக!

## அமைச்சர் டக்ளஸுக்கு ஐ.தே.க வேட்பாளர் துவாரகேஸ்வரன் அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 29

"தேர்தல் வன்முறைகள், அடாவடித்தனங்கள் போன்றவற்றில் தனது தோழர்களை ஈடுபடுத்துகின்றமையை நிறுத்திவிட்டு, வன்னியில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வரவேண்டும்.

-இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முதலாம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளர் தியாகராஜா துவாரகேஸ்வரன்.

முன்னாள் அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின் சகோதரரான இவர் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி, உதயபுரத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உரையாற்றுகை யிலேயே இவ்வாறு கூறினார்.




அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த எமது மக்களின் வாகனங்கள், உடைமைகள், சொத்துகள் போன்றவை பரந்தன் முதல் கறையான் முள்ளிவாய்க்கால் வரை சிதறிக்கிடக்கின்றன. அவற்றை மீட்டெடுத்து எமது மக்களிடம்- உரியவர்களிடம் - ஒப்படைக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. படையினரின் ஒத்துழைப்பைப் பெற்று அந்தப் பணியை முன்னெடுக்க பெரும் ஆளணி தேவைப்படுகின்றது.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது பற்றிச் சிந்திக்கிறார் இல்லை.

தீவுப்பகுதிக்குப் பிரசாரத்திற்குச் செல்லும் பிற அரசியல்வாதிகளை ஆள்வைத்து மிரட்டும் வேலையைத்தான் அவர் செய்கிறார்.

அப்படி இல்லை என்றால், குடாநாட்டில் எந்தெந்த வேட்பாளர்களின் பிரசாரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளனவோ, இருபத்தினான்கு மணித்தியாலத்துக்குள் அவற்றைத் தேடிப்பிடித்து அவற்றின் மீதெல்லாம் -அவற்றை மறைத்து- தமது சுவரொட்டிகளை ஒட்டப்பண்ணுகின்றார். இதற்காகப் பல நூற்றுக்கணக்கானோரைப் பணிக்கு அமர்த்தி ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் அவர்.

இந்த அடாவடித்தனங்கள், வன்முறைகளைக் கைவிட்டு விட்டு, இந்த ஆளணியை நமது மக்களுக்கு- குறிப்பாக வன்னியில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களுக்கு -உதவும் விதத்தில் பயன்படுத்த முன்வருமாறு நான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அழைப்பு விடுகிறேன்.

முக்கியமாக வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் எமது மக்களின் பல்லாயிரக் கணக்கான வாகனங்கள், பெறுமதிமிக்க உடைமைகள், சொத்துகள் சிதறுண்டு கிடக்கின்றன. உரியவர்கள் அவற்றைத் தேடிப்பெற அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

அரசியல் தலைவர்களே மக்களைக் கூட்டிணைத்து, பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்புடன் இந்தப் பணியை முன்னெடுக்க முடியும்; முன்னெடுக்க வேண்டும். என அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தச் சந்தர்ப்பத்திலாவது தமது ஆளணியினரின் அடாவடித்தனங்கள், தேர்தல் வன்முறைகள் போன்றவற்றைக் கைவிடச் செய்து, வன்னி மக்களின் மீட்சிக்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த முன்வர வேண்டும் என நான் விரும்புகிறேன்.

இந்தகைய போக்கில் அவர் இதயசுத்தியுடன் ஈடுபட முன்வருவாரானால்,வன்னி மக்களின் உடைமைகளை மீட்கும் நல்ல முயற்சிக்கு நாமும் முழு ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றார் அவர். (50)

# முகாமிலுள்ளோர் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குகள் செய்க!

## தேர்தல் ஆணையருக்கு சிவசக்தி ஆனந்தன் கடிதம்

கொழும்பு, மார்ச் 29

வவுனியா நலன்புரி நிலையங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் உள்ள மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை - என்று வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ந.சிவசக்தி ஆனந்தன் பிரதம தேர்தல் ஆணையாளருக்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வவுனியா நலன்புரி நிலையங்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் உள்ள மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லையோ என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

அங்குவாழும் மக்கள் ஒரு அசாதாரண சூழ்நிலையில் வாழ்கின்றனர். இவர்கள் தமது அன்றாடத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலையில் உள்ளனர். எனவே, இந்த மக்கள் எவ்வித அலைக்கழிப்பும் இன்றி வாக்களிக்க வழி செய்ய வேண்டியது இன்றியமையாதனவாகும்.

முகாம்களில் தற்போது உள்ள மக்கள் எத்தனைபேர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றாகத் தெரியும். எனவே இந்த மக்களின் தொகையைக் கருத்தில் கொண்டும், அவர்களின் மனோ நிலையைக் கருத்தில் கொண்டும் அவர்கள் எப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்களை முகாம்களுக்கு அருகாமையில் நடந்து செல்லும் தூரத்தில் உள்ள இடங்களில் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் செய்துதருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அனைத்து வேட்பாளர்களுக்கும் அறியத்தருமாறும் மக்களும் தங் களது சந்தேகங்களைப் போக்கி நிம்மதியாக இருப்பதற்கு வழிசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

# திலீபனின் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்

## இது தமிழரின் சுயமரியாதைக்கு விடுக்கப்பட்ட சவால் என்கின்றார் ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம்,மார்ச் 29

தமிழ் மக்களின் அன்பையும் அபிமானத்தையும் போற்றுதலையும் பெற்றிருந்த



திலீபனின் நினைவுத்தூபி உடைப்புக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா.

நாவாந்துறை புனித நிக்கலஸ் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ் மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற திலீபனின் நினைவுத்தூபி ஊர் உறங்கும் வேளையில் நள்ளிரவு நேரத்தில் உடைத்து சிதைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரசாரங்கள் மும்முரமடைந்திருக்கும் ஓர் அரைகுறை ஜனநாயகச் சூழ்நிலையில் இந்த அநியாயம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும். இன்று திலீபனின் நினைவுத் தூபி என்றால் நாளை தந்தை செல்வாவின் நினைவுத் தூபியா? என்று கேள்வி எழுப்பினார்.

திலீபனின் நினைவுத்தூபி உடைத் தெறியப்பட்டது ஓர் அபாய எச்சரிக்கை. இதனை தமிழ் மக்களின் சுயமரியாதைக்கு விடுக்கப்பட்ட சவாலாகவே கருதமுடியும். பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் எந்தத் தடை வந்தாலும் அதனை எதிர் கொண்டு மீண்டும் அதே இடத்தில் தூபியை நிறுவுவோம் -என்றார்.

எமது பிரச்சினையில் ஆறுகோடி தமிழ் நாட்டு தமிழர்களின் உணர்வுகளையே சோனியா காந்தியின் அரசு மதிக்கவில்லை. இலங்கை அரசு எமது மக்களைப் போரில் கொன்று குவித்த போது அதற்கு சகல உதவிகளையும் வழங்கியது. அந்த அரசை எவ்வாறு நம்பமுடியும். கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது. அது இந்திய அரசின் நிழலில் அரசியல் நடத்துகின்றது. அவர்களின் ஆதரவு இல்லையேல் இவர்களால் அரசியலில் நின்று பிடிக்கமுடியாது. போரை நிறுத்தக் கூடிய அருமையான சந்தர்ப்பத்தை கூட்டமைப்புத் தலைமை வேண்டுமென்றே தவறு விட்டுவிட்டது.

இந்திய அரசின் வசதிக்காக இந்த வரலாற்றுத் தவறு இழைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவால் பல்லாயிரக்கணக் கான மக்கள் கொல்லப்பட்டனர். தமிழ்த்தேசிய எழுச்சி அடக்கி ஒடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் தக்க பதிலை எமது மக்கள் எதிர்வரும் தேர்தலில் வழங்க வேண்டும்- என்றார். (6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நுண்கலைமானி B.F.A

## செல்வி கிஷாந்தி பாலகிருஸ்ணன்

(B.F.A)

நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் நுண்கலை மாணிப் பட்டம் பெற்ற செல்வி கிஷாந்தியை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
செல்வி யசோதரன் அபிரா,
செல்வன் யசோதரன் நவரூபன்.
(இசைக்கலைமாணி)

64, A.V.றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
WWW.KANDEEPAN.COM
(96039)

## ப.நோ.கூ.சங்கத்துக்கு புதிய படகு

நெடுந்தீவு, மார்ச் 29

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்திற்கென யாழ்.அரச அதிபர் கணேசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நீர்கொழும்பில் கட்டப்பட்ட புதிய படகுதற்சமயம் அங்கிருந்து புறப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட படகுஇன்று நெடுந்தீவுக்குவந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(1-111)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## திரு. நடராஜா பஞ்சசீலன்

நேற்று (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.A. Diploma Education பட்டம் பெற்றதையிட்டு மேலும் பல பட்டங்களை பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சின்னக்கா- கிருபா
சின்னத்தான்- கண்ணன்
(96057)

# உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 542
திகதி 2010/03/27

சுப்பர் இலக்கம்: 18
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 10 14 24 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 24,163,428.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 207 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 434 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 10,451 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 50.00 விகிதம் | 6,144 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 152,333 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 விகிதம் | 24,425 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,579,710.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 24,277,932.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

# ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 08
திகதி - 27.03.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: X
அதிர்ஷ்ட இலக்கம்: 8
வெற்றி இலக்கம்: 2 3 9 0 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X 8 2 3 9 0 4 | ரூ. 20,128,921.00 | - |
| 1 பரிசு | 8 2 3 9 0 4 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 2 3 9 0 4 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 3 9 0 4 | ரூ. 10,000.00 | 28 |
| 4 பரிசு | 9 0 4 | ரூ. 1,000.00 | 289 |
| 5 பரிசு | 0 4 | ரூ. 50.00 | 2729 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | 25996 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 2 3 9 0 | ரூ. 1,000.00 | 28 |
| 8 பரிசு | 2 3 9 | ரூ. 100.00 | 270 |
| 9 பரிசு | 2 3 | ரூ. 50.00 | 2717 |
| 10 பரிசு | X | ரூ. 20.00 | 10932 |
| 11 பரிசு | X 8 | ரூ. 100.00 | 1224 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,057,260.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.20,594,154.00

## பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சாவகச்சேரி நவீன சந்தையின் விறாந்தையில் வர்த்தக நிலையங்களால் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் நேற்று முன்தினம் பொலிஸாரால் அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வர்த்தகர்களின் வேண்டுகோளின் பிரகாரம் பொதுமக்கள் பாவனைக்குரிய விறாந்தையில் வருங்காலங்களில் பொருள்கள் வைக்கக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டது.

நவீன சந்தை விறாந்தைகளில் விற்பனைப் பொருள்களோ மிதிவண்டி, மோட்டார் சைக்கிள்களோ வைக்க வேண்டாமென நகரசபையினர் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளனர்.

(1-207)

# 10 ஆம் ஆண்டு நினைவில்



## மத்தியாஸ் யோசேப்

(இராஜேந்திரம்)

மலர்வு 08✱04✱1925 உதிர்வு 29✱03✱2000

ஆண்டுகள் பத்து ஆயினும்
ஆறிடுமோ உம் நினைவு
பப்பா என ஒரு தரம் அழைத்திட
காட்டீரோ உம் பூமுகம்

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

யோ.யேசுதாசன்
(மகன்)
தாளையடி.
(95857)

## மேற்கூரையின்றி இயங்கும் பாடசாலை

ஒட்டிசுட்டான், மார்ச் 29

வவுனியா பெரியகுளம் பாடசாலையின் கூரை வேலைகள் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதைக் காண முடிகிறது.

ஒரு தரப்பாளின்கீழ் இருந்து படிக்க முடியாத நிலையில் ஆசிரியர் உட்பட மாணவர்கள் தற்போது நிலவும் கடுமையான வெய்யில் காலத்தில் வெளியில்தான் காண முடிகிறது. அத்துடன் அவர்களுக்கான தளபாடங்களும் வழங்கப்படவில்லை. இப்பாடசாலைக்கான கட்டடங்களில் ஒன்றுக்காவது மேற்கூரை போடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை உடன் கவனத்தில் கொள்ளுமாறு கல்விசார் துறையினரை மக்கள் கேட்டுள்ளனர்.

(க-341)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் நா.வ.சிவபாதம்

(முன்னாள் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க வடபிராந்திய செயலாளர், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க பண்டத்தரிப்பு கிளைத் தலைவர்)

கொண்ட கொள்கையில் பற்றுறுதியும்
பணியாளர் நலனில் அக்கறையும்
கடமை உணர்வும் கண்ணியச் செயற்பாடும் மிக்க
சிறந்த பணியாளனாகச் சேவையாற்றி
அகவை அறுபதைப் பூர்த்தி செய்து
சிவபதமடைந்த எம் சிவபாதத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன்
குடும்பத்தினருக்கும் எம் அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கக் கிளை, பண்டத்தரிப்பு,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.

## சென்றல் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு அமைச்சர் டக்ளஸ் உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 29

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ். தேவானந்தா யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கினார்.

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின்போது கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளிடம் அங்கு கல்வி பயிலும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்த நிதி உதவியை அமைச்சர் வழங்கினார். வறிய மாணவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாது இடைநடுவில் கல்லூரிகளை விட்டு வெளியேறுவதைக் கவனத்தில் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அத்தகைய வறிய மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவும் பொருட்டு இத்தொகையை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். (1)

# மரண அறிவித்தல்கள்



## முருகேசு திலகநாதன் (திலக்)

(முன்னாள் உரிமையாளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், அச்சுவேலி)

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தின் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திலகநாதன் 26.03.2010 அன்று நல்லூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- நல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், திரேஸ்குமார், காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் சசிகுமார், தீபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், வள்ளிநாயகி, தவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கசிவம், அட்சயகுமார், சோதிமணி, தங்கேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், அனுஷா, கல்பனா, சுவர்ணா, அஜந்தா, திருமால், அபிராமி, ராதிகா, சுபாசினி ஆகியோரின் மாமனாரும், பிரவீன், நிஷா, லக்சன், லோகசூரியன், ஆயிஷா, சானுகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.03.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.தங்கசிவம்
(மைத்துனர்).

61/1, குறுக்கு வீதி,
நல்லூர்.
(96047)

## அருட்சகோதரி மேரி பேட்றண்ட் நடராசா (தி.கு)

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி பேட்றண்ட் நடராசா 27.03.2010 சனிக்கிழமை இளவாலை கன்னியர் மடத்தில் இறைபதம் இணைந்து விட்டார்.

அவரது இறுதி நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (29.03. 2010) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இளவாலை திருக் குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் நடைபெறும். பின்னர் பூதவுடல் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ்
மாகாணத்தலைவி.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(96070)

# மரண அறிவித்தல்

## நாகமுத்து விஜயசிங்கம் (செந்தி)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

கரணவாய் மேற்கு, சோளங்கனைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து விஜயசிங்கம் 25.03.2010 வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சரோஜினியின் அன்புக் கணவரும் திரு.திருமதி பொன்னுத்துரை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், விஜயலோஜினி, கீதாலோஜினி, விண்மணி முகுந்தன், ராதா கிரிதரன், மாதவலோஜினி, நாகலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணாகரன், கருணாநிதி, வசந்தினி, ஜெனிசா, சுதர்சன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பூரணம்மா, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்ற நடராஜா மற்றும் தங்கச்சியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் கரணவாய் மேற்கு, சோளங்கனில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோளங்கன்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.
T.P:- 0213737939

தகவல்:
குடும்பத்தினர்.
(96062)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NPGJ xxxx தொடரிலக்கமுடைய சுப்பர் கப் 90 ஹொண்டா (SUPER CUB 90 HONDA) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
021 3218775, 077 6048906
(96071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பின்னடைவுக்குக் காரணம் தமிழகத் தமிழர்களே; சீமான் ஆவேசம்

மேலூர், மார்ச் 29

இலங்கையில் நடந்த போரில் புலிகளின் பின்னடைவுக்குக் காரணம் தமிழகத்திலுள்ள தமிழர்கள்தான். கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிவும் பிரபாகரனைப் பிடிக்காது. தமிழனையே தமிழன் ஆதரிக்க மறுக்கிறான்.

ஆனால், தமிழ் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழன் மனதிலும் தமிழீழத் தாகம் தணியாது. ஈழத் தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும்வரை நாம் ஓயமாட்டோம்.' நாங்கள் யாருக்கும் அடிபணிந்து வாழ மாட்டோம். தமிழை வாழவைப்போம், தமிழனை ஆளவைப்போம்.

- இவ்வாறு 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவரும், திரைப்பட இயக்குநருமான சீமான் ஆவேசமாக முழக்கமிட்டார்.

மேலூரில் நடந்த கக்கன் நூற்றாண்டு விழாவில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

இலங்கையில் நடந்த போரில் புலிகளின் பின்னடைவுக்குக் காரணம் இங்குள்ள தமிழர்கள்தான். தமிழனை தமிழனே ஆதரிக்க மறுக்கிறான். கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் பிரபாகரனைப் பிடிக்காது.

தமிழ் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழன் மனதிலும் தமிழீழத் தாகம் தணியாது. ஈழத் தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும்வரை நாம் ஓயமாட்டோம். நாங்கள் யாருக்கும் அடிபணிந்து வாழ மாட்டோம். தமிழை வாழவைப்போம், தமிழனை ஆளவைப்போம். கடத்தல்காரனாக இருந்தாலும் வீரப்பன் கண்ணியமாக பெண்களிடம் நடந்து கொண்டான். விசாரணை என்ற பெயரில் அதிரடிப்படைதான் பெண்களின் கற்பைச் சூறையாடியது.

வரும் மே 18 ஆம் திகதி 'நாம் தமிழர்' இயக்கத்தை அரசியல் இயக்கமாக அறிவிக்க இருக்கிறேன். எங்கள் இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் மக்கள் பணியே. அதை நிறைவுடன் செய்வோம்.

கருணாநிதி, கோவையில் செம்மொழி மாநாடு நடத்துவது தமிழ் மீது உள்ள பற்றின் காரணமாக அல்ல. மாறாக ஈழத் தமிழர்களுக்கு செய்த துரோகத்தை தமிழர்கள் மத்தியில் மறைப்பதற்காகவே.

வரும் மே 18 இல் மதுரையில் 'நாம் தமிழர்' இயக்கத்தின் அரசியல் மாநாடு நடைபெற உள்ளது. இதில் தமிழ் உணர்வுள்ள அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் - என்றார்.

கூட்டம் நடத்த பொலிஸார் தடை விதித்திருந்தமையால், உயர்நீதிமன்றில் மனுச் செய்து இக்கூட்டத்தை நடத்தினார்.

மதியம் 1.30 மணிக்குள் கூட்டத்தை முடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் பொலிஸாரின் எச்சரிக்கைக்கு பிறகு 2.20 மணியளவில் கூட்டம் முடிக்கப்பட்டது.

## இந்தியச் செய்திகள்

# அகதிப் பெண் மீதான வல்லுறவு குறித்து பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்குக!

## தமிழகப் பா.ஜ.க. வலியுறுத்து

சென்னை, மார்ச் 29

முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளில் ஒருவரான பத்மா, பொலிஸாரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது.

இந்தக் கடுமையான தவறை இழைத்த பொலிஸார் மீது சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கரூர், ராயனூர் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளில் ஒருவரான பத்மா, அவரது கணவர் மீதான கொலை வழக்குத் தொடர்பாக விசாரிப்பதற்காகக் கடந்த 7 ஆம் திகதி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு பொலிஸாரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்.

இதன் காரணமாக அன்றைய தினமே அவர் தீக்குளித்திருக்கிறார். தமிழக பொலிஸாரின் இத்தகைய அத்துமீறல் அதிர்ச்சியளிக் கிறது. பொலிஸ் நிலையத்திற்குள் நடந்திருக்கும் இக்கொடிய சம்பவம், பொலிஸ்துறை மீதான நம்பகத்தன்மையை மீண் டும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

கடுமையான தவறை இழைத்ததோடு மட்டுமல்லாது, அதை மூடி மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் பொலிஸ் துறையினர் மீது சட்ட ரீதியாகவும், துறை ரீதியாகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் - என்றுள்ளது.

# "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வாக்கை விளக்குகிறது இராமாயணம்

## கவிஞர் அப்துல் ரஹ்மான் விவரிக்கிறார்



காரைக்குடி, மார்ச் 29

கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற வரியை விளக்குவதாக அமைந்துள்ளது கம்பனின் ராமகாவியம் - என்று கவிஞரும், தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவருமான அப்துல் ரஹ்மான் கூறினார்.

காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் கம்பன் கழகம் சார்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 72 ஆவது ஆண்டு கம்பன் திருநாள் விழாவில் அவர் பேசியபோதே இதனைக் கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

ரஷியாவில் ஒரு பல்கலைக்கழக நுழைவாயில் அமைக்கும்போது அதற்கு என்ன பெயர் சூட்டுவது என்ற பேச்சு எழுந்தது. அப்போது எல்லா மொழி அறிஞர்களிடமும் கருத்துக் கேட்கப்பட்டது.

ஆனால், அங்கு இடம்பெற்ற சொற்றொடர் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பதுதான்.

அந்தக் காலத்தில் நாட்டுப் பற்று, மொழிப் பற்று இருந்தது. அதன் பிறகு இவை ஊர்ப் பற்று, இனப் பற்று என மாறி குறுகிய மனப்பான்மை கொண்டதாகிவிட்டது.

இத்தகைய குறுகிய மனப்பான்மையை நாம் நீக்கி விட வேண்டும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதில் கேளிர் என்றால், நட்பு என்று பொருள் உண்டு.

பொதுவாக நட்பு,' உறவு என்பது இரு வகைப்படும். ரத்தவகை உறவு, மற்றொன்று திருமண உறவு. இவை தவிர நாம் வேறு இடங்களில் சென்று வாழும்போது அங்குள்ளோரிடம் புது உறவைத் தேடிச் செல்வதாகும்.

எவனொருவன் எல்லாவற்றையும், ஒன்றாகக் கருதுகிறானோ, அவன்தான் ஞானி. இராமாயணத்தில் குகன், சுக்ரீவன், விபீஷணன் ஆகியோரை ராமன் தனது சகோதரர்களாகக் கருதி நட்பு பாராட்டுகிறார்.

காவியம் படித்தால் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பதன் அர்த்தம் நமக்கு முழுமையாகப் புரியும் - என்றார்.

# தேர்வுக்குத் தோற்றும் மாணவர் நீண்டநேரம் துயில்வது நல்லது

## பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் தகவல்



லண்டன், மார்ச் 29

தேர்வுக்காக இரவு நீண்ட நேரம் கண் விழித்துப் படிக்கும் மாணவர்கள் காலையில் நீண்ட நேரம் தூங்கினால் நல்லது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்வில் அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காக இரவில் நீண்ட நேரம் படிக்கும் மாணவர்கள், பெற்றோரின் கட்டாயத்தின் காரணமாக சீக்கிரம் எழுந்து விடுகின்றனர்.

இதனால், அவர்களுக்கு பகல் முழுவதும் அசதி ஏற்பட்டு சரியான முறையில் தேர்வு எழுத முடிவதில்லை. எனவே, இரவில் அதிக நேரம் விழித்திருந்து படிக்கும் மாணவர்கள் காலையில் கூடுதலாக ஒரு மணி நேரம் அதிகம் தூங்குவதில் தவறில்லை என்கின்றனர் பிரிட்டிஷ் ஆராய்ச் சியாளர்கள்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் நரம்பியல்துறைப் பேராசிரியர் ரசல் போஸ்டர் தலைமையில் மூன்று ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து ஆராய்ந்தனர். இவர்கள் தமது ஆய்வின் முடிவில், "டீன் ஏஜ் பருவத்தில் உள்ளவர்கள் காலையில் அதிகநேரம் தூங்குவதை விரும்புகின்றனர். வயதானவர்களை விட இளம் பருவத்தினர் காலை 10 மணிக்கு மேல் தான் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பிக்கின்றனர். இதனால் தான் மாணவர்களுக்கு கடினமான பாடத்தை மதிய நேரத்தில் போதிக்கும்படி கூறுகிறோம்" எனத் தெரிவிக்கின்றனர்.

"இதன் மூலம் அவர்கள் கடின பாடத்தையும் எளிதாகக் கிரகிக்க முடியும். 21 வயது வரை காலையில் தாமதமாக எழுவதைதான் விரும்புகின்றனர். எனவே, பரீட்சைக்காக இரவு முழுவதும் படிக்கும் மாணவர்களை மீண்டும் அதிகாலையில் எழுந்து படிக்கும்படி வற்புறுத்த வேண்டாம்" என்றும் இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.




# தேனீக் கடி சிகிச்சை; சீனாவில் திடீர் மவுசு

பீஜிங், மார்ச் 29

தேனீ 'சுருக்'கென கொட்டினால், அலறி அடித்துக்கொண்டு வைத்தியசாலைக்கு போவதை பார்த்திருக்கிறீர்கள். ஆனால், வைத்தியசாலையில் தேனீயை கடிக்க வைத்து சிகிச்சை அளிக்கும் முறை, சீனாவில் பிரபலமாகி உள்ளது.

சீனாவின் இந்த மருத்துவ சிகிச்சைக்குப் பெயர், 'தேனீக் கடி தெரபி. பீஜிங் உட்பட சில நகரங்களில் இந்த சிகிச்சை முறை மிகவும் பிரபலம்.' அக்குபங்சர் சிகிச்சை போன்றது இது. அக்குபங்சர் சிகிச்சையில் நோயாளியின், உடலில் சில குறிப்பிட்ட பகுதியில் மெல்லிய ஊசிகளைக் குத்தி சிகிச்சை அளிக்கப்படும். தேனீ தெரபியில், தேனீயை உடலின் சில பகுதிகளில் கொட்ட வைக்கின்றனர் டாக்டர்கள்.

இதுகுறித்து, சீனாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பின்பற்றும் காங் தாய் பீ கிளினிக்கை சேர்ந்த வாங் ஜிங் குறிப்பிடுகையில், "சீனாவின் பாரம்பரிய



மருத்துவ முறைதான் இது. 2007 இல்தான் சட்டப்படி இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எலும்பு மற்றும் மூட்டு நோய்கள் உடையவர்களுக்கு, தேனீ கொட்டும் சிகிச்சை சிறந்த பலனைத் தருகிறது. தேனீ கொட்டுவதன் மூலம் அதன் விஷத்தன்மை இரத்த ஓட்டத்தில் கலந்து, அதன் மூலம் வீக்கம் மற்றும் வலி ஏற்படுவது தடுக்கப்படுகிறது" என்றார்.

"இந்தச் சிகிச்சைக்கு இத்தாலி மற்றும் வளைகுடா நாடுகளின் தேனீயை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கலப்பின தேனீ பயன்படுத்தப்படுகிறது. தேனீயின் கொடுக்கில், 0.3 மி.கி., விஷத்தன்மை காணப்படுகிறது. தேனீக்களைப் பிடித்து, அவற்றை நோயாளியின் உடலிலுள்ள குறிப்பிட்ட பகுதியில் டாக்டர்கள் வரிசையாக விடுவர்" என்றும் அவர் கூறினார்.

"பின் தேனீக்கள் அந்தப் பகுதியில் கடித்துவிட்டு இறந்து விடும். அவற்றின் கொடுக்குகள், அந்தப் பகுதியில் எவ்வளவு நேரம் இருக்க வேண்டும் என்பதை, டாக்டர்கள் தீர்மானிப்பர்" என்றும் வாங் ஜிங் கூறினார்.

இந்தச் சிகிச்சை பெறுவதற்காக, சீனாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நோயாளிகள் வந்த வண்ணம் உள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.

# ஒசாமாவின் மிரட்டலுக்கு அமெரிக்கா அடிபணியாது

## ரொபர்ட் கிப்ஸ் சொல்கிறார்

வாஷிங்டன், மார்ச் 29

அல்-குவைதா தலைவர் ஒசாமா பின் லேடனின் மிரட்டலுக்கு ஒருபோதும் அமெரிக்கா அடிபணிந்து விடாது. அல்-குவைதா இயக்கம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்கா சூளுரைத்துள்ளது.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தகர்ப்பு வழக்கின் முக்கிய குற்றவாளியான காலித் ஷேக் முகமதுவுக்கு, தூக்குத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில், அவரை தூக்கிலிட்டால் அமெரிக்கர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்படும் என அண்மையில் அல்-குவைதா தலைவர் பின்லேடன் எச்சரித்திருந்தார்.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறுகையில், "அல்-குவைதா இயக்கத்தை முற்றிலும் அழிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில், பின்லேடனின் இது போன்ற அச்சுறுத்தல்களினால் அமெரிக்கா ஒரு போதும் தன் நிலையிலிருந்து பின் வாங்காது" எனத் தெரிவித்துள்ளார்.

"அல்-குவைதா இயக்கத்தை அடியோடு அழிப்பதில், ஒபாமா தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது" என்றும் கிப்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

# பர்தா அணிவதற்கு கனடாவில் தடை

மான்ட்ரியல், மார் ச் 29

முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடுவதற்காக அணியும் 'பர்தா' உள்ளிட்ட அங்கிகளுக்குத் தடை விதிக்கும் மசோதாவ கனடாவின் க்யூபெக் மாகாண அரசு நிறைவேற்றியுள்ளது.

பாலின பாகுபாட்டுக்கு எதிரான நடவடிக்கையாகவும், இரு பாலாருக்கும் சமநிலையை உறுதிபடுத்தும் நோக்கத்துடனும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது என பிரதமர் ஜீன் கோரஸ்ட் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி அனுஷா ராஜ்குமார்



அவர்கள் 28.03.2010 அன்று நடைபெற்ற யாழ். பல்கலைக் கழக பொது பட்டமளிப்பு விழா வில் நுண்கலைமாணி (B.F.A) பட்டம் பெற்றமையை இட்டு உளமார பாராட்டி வாழ்த்துகின் றோம்.

தடைகள் பல கடந்து
பட்டங்கள் பல வென்று
வளமோடு வாழ்கவே

3/21, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





திருமதி சுபரஞ்சனி ஜீவகன் — செல்வி சிவறோஜினி துரைராசசிங்கம்

28.03.2010இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (Diploma in Education)பட்டம் பெற்ற திருமதி சுபரஞ்சனி ஜீவகன் அவர்களையும், 26.03.2010 அன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பில் அரசறிவியல் சிறப்புக்கலைமாணி பட்டம் B.A (Hons) பெற்ற செல்வி சிவறோஜினி துரைராசசிங்கம் அவர்களையும் மனமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொலிகண்டி தெற்கு, வல்வெட்டித்துறை. (92204) குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணற்றுடன் 5ப.6.6கு. காணி விற்பனைக்குண்டு. தேவையேற்படின் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். தொடர்பு: 0779676128

## வேலையாள்கள் தேவை

டீசல் லொறி மெக்கானிக்கர், ஓட்டுநர், எலெக்ரிக் வயறிங், பெயின்ரர் ஆகிய வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: சிவலிங்கம் மோட்டோர்ஸ், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212223212

## உடன் தேவை

பந்தல் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. பிற்பகல் ஒருமணிக்கும் 4மணிக்கும் இடையில் நேரில் வரவும். யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: சுஜா போட்டோ அன் வீடியோ
36, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212223375, 0774167399 (96076)

## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கச்சேரி நல்லூர் வீதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 1¼பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0778697120 (96077)

# கோவலன் - கண்ணகி பதிகம் ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினர் கோவலன் - கண்ணகி வரலாற்றுப் பதிகத்தை இன்று கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலயத்திலும் எதிர்வரும் ஐந்தாம் திகதி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்திலும் இசைக்கவுள்ளனர்.

இந்த சங்கத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அம்பாள் ஆலயங்களில் கோவலன் - கண்ணகி வரலாற்றுப் பதிகத்தை இசைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் 28.03.2010 அன்று நுண்கலைமாணி (B.F.A) பட்டத்தைப் பெற்ற

திருமதி நித்தியா தவக்குமார்

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

மனம் மகிழ்ந்து வாழ்த்துவோர்
தவலிங்கம் குடும்பம்.
(பெரியப்பா)

## 91 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா - 2010

மாவட்ட ரீதியிலான மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி (10Km)

உள்ளூர் ரீதியான பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி

காலம் : 13.04.2010 காலை 6 மணி
இடம்: அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
★ பதிவுகளை தொலைபேசி மூலமாக மேற்கொள்ளவும்.
தொ.பே: 0776002625, 0777430910
முடிவுத் திகதி: 10.04.2010
(சி/566260) -நிர்வாகம்-

## பங்குனி உத்தர உற்சவம்

### அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

பங்குனி உத்தர - கற்பூரத் திருவிழா (29.03.2010) இன்று திங்கள் பிற்பகல் 4.30 மணியளவில் ஆரம்பமாகும்.

கற்பூரச்சட்டி எடுக்கும் அடியார்கள் உரிய நேரத்துக்கு வருகை தந்து நேர்த்தியை நிறைவேற்றிக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- பரிபாலனசபை -

## மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு 15 ஆவது அகவையில் காலடிபதிக்கும் வேளையில்!







யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டம் பெற்ற எமது உறுப்பினர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணி பட்டம் பெற்ற பட்டிமன்றக்குழுவின் நடுவரும், அமைப்பாளருமான அருட்சொல்வாரி, அருள்நெறித்தமிழருவி, அருள்நெறிச் செல்வர், சொல்லமுதவாரி, அறநெறிக்குரு, இந்துதர்மாசிரியர், சைவசித்தாந்த பண்டிதர், சைவப்புலவர், செ.கந்தசத்தியதாசன் (J.P, B.A (Hons), Dip. in Edu. Sc.Trd., சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்) அவர்களையும், எமது பட்டிமன்றக் குழுவின் பேச்சாளர்களான இளம்சைவப்புலவர், தெய்வத் தமிழ்ச்செம்மல், தமிழ்ச்சொல்லருவி, ச.நவநீதன் (B.F.A ஆசிரியர், கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) அவர்களையும், தமிழில் முதுக்லைமாணி பட்டம் பெறுகின்ற சைவப்புலவர் திருமதி ஜனகா சிவசுப்பிரமணியம் (B.A (Hons)) அவர்களையும் மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு மனதார வாழ்த்துகின்றது.

வாழ்த்துவோர்: மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு (சி/566252)





மனித நேயமுள்ளவரும் இன,மத பேதமின்றி மக்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கெடுக்கின்றவரும், மக்களோடு மக்களாய் அவர்களின் தேவைகளை உடன் நிறைவேற்றி வருபவரும், மக்களின் துயர் துடைக்கின்றவரும், வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒரு உன்னத உத்தமவாளரும், நேரான சிந்தனைகளில் நேரிய வழிகளில் அவர்தம் கருமங்களை முன்னெடுக்கின்ற தலைவருக்கும், அவர் தம் உறவுகளுக்கும் எமது பொன்னான வாக்குகளை எம்மின கரங்களால் அள்ளி வழங்கிடுவீர்கள்.

மாண்புமிகு அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா

சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) யாழ்.மாவட்ட அமைப்பாளர்

உப அஞ்சலகம், காரைநகர் துறைமுகம், காரைநகர்.

அவரின் சேவையில் அரச உத்தியோகராய் பணிபுரியும் திருமதி தவநாதன் ரஞ்சினி, உபஅஞ்சலதிபர், காரைநகர் துறைமுகம் (95992)

## தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி
இல 01

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், வன்னி மக்கள், சிறையிலும் தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண விழைவது தமிழர் விடுதலைக் கூட்டணி



த.தி.சம்பந்தர்JP
ஏழாலை
இல 03

எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து இலக்கம் 1 க்கும் இலக்கம் 3 க்கும் விருப்பு வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்யுங்கள். (95924)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(27.03.2010) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25ஆவது பட்டமளிப்பு விழாவில் B.B.A (H.R.M Special) பட்டம் பெற்ற

வர்ணகுலசிங்கம் பிரதீபன்

அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, அண்ணா திருமால்,
அக்காமார், அத்தான்மார், மருமக்கள்,
மாமாமார், மாமிமார்.

தகவல்:
அத்தான் விஷ்ணு, அக்கா ...
40, யமுனா வீதி, ... (96064)

## நாடாளுமன்றத் தேர்தல் - 2010

இனி ஒரு விதி செய்வோம்
திட்டத்தில் புதுமை, கருத்தில் துணிச்சல்
செயலில் திரமுடன் செயற்பட்டு
மறுமலர்ச்சி காண்போம்

சைக்கிளுக்கு வாக்களிப்போம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)



செல்லத்துரை சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
B.A (Cey) Dip in Edu.SLPS Grade I
(சமூக, ஆன்மீக சேவையாளன்)

வடமராட்சி, தென்மராட்சி கல்விச் சமூகம். (96035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் பஞ்சரதப் பவனியின் போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

(படங்கள்: ரட்ணம்)

# அப்பாவி மாணவன் கபிலநாத் படுகொலை; குடாநாட்டு மக்கள் அதிர்ச்சி, சோகம்!

## அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

சாவகச்சேரியைச் சேர்ந்த அப்பாவி மாணவனான திருச்செல்வம் கபிலநாத் கடத்தப்பட்டு 13 நாள்களுக்குப் பின் படுகொலை செய்யப்பட்ட படுபாதகச் செயலை யாழ். குடாநாட்டில் மிகப்பலரும் கண்டித்துள்ளனர். இந்தச் சம்பவத்தினால் அதிர்ச்சியடைந்துள்ள மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். அவர்களைப் பெரும் பீதி கவ்வியுள்ளது.

அதேசமயம் - இந்தக் கொடூரச் செயலை அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா கடும் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

நேற்று தமிழரசுக் கட்சி வேட்பாளர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், க.அருந்தவபாலன் ஆகியோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வி. ஆனந்தசங்கரி, ஐ.தே. கட்சி வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் வேட்பாளர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

### ஆனந்தசங்கரி

கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் அறிக்கையில் -

பணத்திற்காகப் பதினாறு வயது மாணவனைக் கடத்திச்சென்று படுகொலை செய்கின்ற அளவிற்கு வன்முறை வேரூன்றியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. இப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டுக் கடுமையான தண்டனைக்குட்படுத்தப்படுவதோடு, இவ்வாறான வன்முறைகள் மேலும் வளராத முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்டோர் கடும் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் மேலும் தொடராதபடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். ஆயுததாரிகள் வன்முறையாளர்களைக் கண்டால் உடனடியாகப் பாதுகாப்புத்தரப்பிற்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆயுத, வன்முறைக் கலாசாரத்தை இம்மண்ணில் வேரோடு இல்லாமல் செய்கின்ற போது தான் மக்கள் நிம்மதியாகப் பயமின்றி வாழ முடியும் - என்றுள்ளது.

### க.அருந்தவபாலன்

க. அருந்தவபாலனின் அறிக்கையில் -

எத்தனையோ துன்பங்கள் துயரங்களின் பின் மக்கள் தம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் நடைபெற்றுள்ள இந்தக் கோர நிகழ்வு தமிழ் மக்களுக்கு என்றும் நிம்மதியில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. இப்படியான நிகழ்வுகள் எமது மக்களுக்கு விரக்தியையும் வெறுப்பையுமே ஏற்படுத்தி வருகிறது.

இப்பிள்ளையின் கடத்தலுக்கும் கொலைக்கும் பின்னால் அரசியல் பின்புலம் இருப்பதாகவே சாவகச்சேரி மக்கள் கருதுகிறார்கள். எனவே இக்கொலையின் பின்னணியையும், சூத்திரதாரிகளையும் கண்டறிந்து அம்பலப்படுத்துவது காவல் துறையினரின் தலையாய கடமையாகும்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் இனிவரும் காலத்தில் இடம்பெறாத வகையில் மக்கள் தமது எதிர்ப்பையும் கண்டனங்களையும் அமைதியான முறையில் தெரிவிக்கவேண்டும். இல்லையெனில் ஒவ்வொரு பெற்றோரும் தினமும் ஏங்கிக் கொண்டே வாழநேரிடும் - என்றுள்ளது.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

சாவகச்சேரியைச் சேர்ந்த திருச்செல்வம் கபிலநாத்தின் குரூரக்கொலையானது மக்கள் மத்தியில் மிக மோசமான அச்ச உணர்வை உருவாக்கியுள்ளது.

கபிலநாத் கடத்தப்பட்டு இரண்டு வாரமாகியும் கடத்தியவர்கள் அவரது தந்தையிடம் கப்பமாக 3 கோடி ரூபா பணம் கேட்டும் கடத்தியவர்களைக் கைது செய்ய முயற்சிக்காமல் சிரத்தையற்று காவல்துறையினர் செயற்பட்டதாலேயே இந்த அப்பாவிச் சிறுவன் கொல்லப்பட்டிருக்கிறான்.

இந்தச் சிறுவன் கடத்தப்பட்டுக் கப்பம் கேட்கப்பட்ட உடனேயே இதற்குப் பின்னால் ஓர் அரசியல் இயக்கம் இருப்பதாகவும் அவர்கள்தான் இக்கடத்தலின் சூத்திரதாரிகள் எனவும் செய்திகள் கசியத்தொடங்கின. அப்பொழுது கூட காவல் துறையினர் கண்டு கொள்ளாமலேயே இருந்தனர்.

இப்பொழுது கொலையுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களது விவரங்கள் முழுமையாக வெளியிடப்படாமல் காவல் துறையினர் மறைப்பதாகவே நாம் உணர்கின்றோம். அதேசமயம் தேர்தல் காதலத்தில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளைப் பாதுகாக்க காவல்துறையினர் முற்படுவதாகவும் சந்தேகிக்கின்றோம்.

காவல்துறை அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கினால் அவற்றைச் செயற்படுத்தும் முதிர்ச்சி தமிழ் மக்களுக்கு இல்லை என அரசு கூறுகின்றது. ஆனால் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையினர் கொலைச் சந்தேக நபர்களைப் பாதுகாப்பதும், அரசிற்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் சாதகமாக நடப்பதும், காவல் துறைக்கும் பண்பல்ல ஜனநாயகத்திற்கும் அழகல்ல. இக்கொலைக்குச் சூத்திரதாரிகளாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருந்துள்ளதாகக் கைது செய்யப்பட்ட மாணவர்கள் காவல்துறையினருக்குத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

எனவே, இக்கொலையுடன் சம்பந்தமான அனைவரது விடயங்களும் காவல் துறையினரால் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் யாழ்ப்பாணத்தில் மீண்டும் கடத்தல், கொலை, கப்பம் வசூலித்தலுக்கும் முழுமையான முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கோருகின்றோம் - என்றுள்ளது.

### விஜயகலா

விஜயகலா தனது கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது -

சாவகச்சேரிப் பகுதியில் கடத்தப்பட்ட அப்பாவி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் படுகொலை செய்யப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கதாகும். இந்த மாணவனின் படுகொலை குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் கடத்தப்பட்ட மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குடாநாட்டு மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் கடத்தல், காணாமல் போதல் யுகம் ஆரம்பித்து விட்டதா? என்ற அச்சத்தையும் இந்தச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. ஆயுதக் கலாசார நடவடிக்கைகளை இனியும் குடாநாட்டில் அனுமதிக்க முடியாது.

பிள்ளையை இழந்து நிற்கும் பெற்றோருக்கு ஆறுதல் கூறுவதுடன் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும். குற்றவாளிகள் கண்டறியப்பட்டு உரியதண்டனை வழங்கப்படும் என்பதை உறுதியுடன் தெரிவிக்கிறேன் - என்றுள்ளது.

### ந.ஸ்ரீகாந்தா

த.தே.வி. கூட்டமைப்பின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் -

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் மாணவன் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்ட பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருக்கும் பயங்கரச் சம்பவம் மனச்சாட்சி உள்ள அனைவராலும் கண்டிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கும் இந்த அக்கிரமத்தின் பின்னணியில் செல்வாக்குள்ள நபர்கள் சிலராவது இருந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பூரணமான புலன் விசாரணை நடத்தப்பட்டு, இந்தப் பயங்கரமான குற்றச் செயலில் சம்பந்தப்பட்டுள்ள சகல குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நிறுத்தப்படுவதைப் பொலிஸ் மா அதிபர் உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஒ)

## இலங்கை தொடர்பாக நிபுணர் குழு நியமிப்பதற்காக

# ஐ.நா. செயலாளரை எதிர்த்த போக்கை மாற்றிக் கொண்டது அணி சேரா இயக்கம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர் குழுவை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அமைக்கின்றமையைக் கடுமையாக எதிர்த்த அணிசேரா அமைப்பு தற்போது இது விடயத்தில் இணக்கப்பாட்டுடன் கூடிய நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அணிசேரா அமைப்புக்குத் தலைமை வகிக்கும் எகிப்து, 118 உறுப்பு நாடுகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தின் மூலம் இது புலனாகியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறச் செய்வது என இலங்கை அரசுத் தலைவருடன் சேர்ந்து தாம் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஐ.நா.செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். அந்த உறுதிமொழியை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாத்திரமே மேற்படி குழுவைத் தாம் நியமிக்கவுள்ளார் எனச் செயலாளர் நாயகம் தெளிவுபடுத்தியிருக்கின்றார் என்று எகிப்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குழுவொன்றை அமைப்பதற்கான அதிகாரமும் உரிமையும் தனக்குள்ளது என்பதை பான் கீ - மூன் தெரிவித்துள்ளார் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பான் கீ - மூன் தாம் நியமிக்கும் ஆலோசனைக் குழு எவ்விதத்திலும் விசாரணைக் குழுவோ அல்லது தகவல் திரட்டும் குழுவோ அல்ல என்பதையும் அவர் உறுதிசெய்துள்ளார். மேலும் அந்த நாட்டின் விருப்பமின்றி குறிப்பிட்ட குழுவினர் அங்கு செல்லமாட்டார்கள், அந்த நாட்டின் இறைமை மற்றும் நியாயாதிக்க எல்லையை அக்குழுவினர் மீறமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார் எனவும் எகிப்து தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் நீண்டகால நல்லிணக்கத்திற்கு மிகவும் அவசியமானது என பான் கீ - மூன் கருதும் இந்த விடயம் தொடர்பாக அந்த நாட்டு அரசுடன் அவர் தொடர்ந்தும் ஒத்துழைப்பைப் பேணுவார் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில் இன்று 'சிடிபி' நிதி நிறுவனக் கிளை திறப்பு

## நல்லூரில் 80 அறைகொண்ட ஹோட்டலுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணத்தில் 'சிடிபி' என அழைக்கப்படும் ''சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பி[illegible]னான்ஸ் லிமிட்டெட்' என்னும் நிதிநிறுவனத்தின் கிளை இன்று முற்பகல் 10 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் திறக்கப்படவிருக்கின்றது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இந்தக் கிளையை வைபவ ரீதியாகத் திறந்து வைக்க விருக்கிறார்.

இந்தக் கிளையில் குத்தகை வசதி, நிலையான வைப்பு, அடகுச் சேவை, வெளிநாட்டு நாணய மாற்றுச்சேவை ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நிகழ்ச்சியை அடுத்து, மேர்சன்ட் வங்கியின் நிதி உதவியுடன் நல்லூரில் நிர்மாணிக்கப்படவுள்ள 80 அறைகள் கொண்ட நகர ஹோட்டலுக்கான அடிக் கல்லை ஆளுநர் நடுவார். நல்லூர் முத்திரைச் சந்திக்குச் சமீபமாக இந்தக் ஹோட்டல் அமையவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை கறுப்புப்பட்டி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளுக்குச் செல்லுமாறு கோரப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேச வேட்பாளர் க. அருந்தவபாலன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கபிலநாத்தின் ஆத்மா சாந்திபெற மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பிரார்த்திக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ஒ-1)

## கடத்தப்பட்ட மாணவன் படுகொலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவன் என்பவர் கடந்த எட்டு வருடங்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நுணாவில் முகாமில் செயற்பட்டு வந்தவர் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை ஆறுபேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அளித்த வாக்குமூலத்தின் படி இந்தக் கடத்தல், படுகொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிகளாக பிரதானமாக இருவர் இருந்துள்ளனர் என்பது தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 14 ஆம் திகதி மேற்படி கபில்நாத்தை, அவரது பாடசாலையில் உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவரும், ஜீவன் என்பவரும் மேற்படி உயர்தர வகுப்பு மாணவனின் வீட்டுக்குக் கூட்டிவந்திருக்கின்றார்கள். அச்சமயம் அந்த வீட்டில் அந்த மாணவனின் உறவினர்கள் எவரும் இருக்கவில்லை. அங்கு வைத்து கபில்நாத்தைத் தாக்கிய அவர்கள் இருவரும், பின்னர் அன்றிரவே கழுத்தை நெரித்து அவரைக் கொலை செய்து, வீட்டின் பின்வளவில் உள்ள வாழைத் தோட்டத்தில் புதைத்திருக்கின்றனர்.

அந்த உயர்தர வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டமையை அடுத்து அவர் எல்லா விவரங்களையும் விசாரணையாளர்களிடம் ஒப்புக்கொண்டு விட்டார் என்றும் - அதனையடுத்தே கபில்நாத்தின் சடலம் மீட்கப்பட்டது என்றும் - கூறப்பட்டது.

கொலையின் பின்னணி பற்றிய முழு விவரங்களையும் சம்பந்தப்பட்ட உயர்வகுப்பு மாணவர் வெளியிட்டமையை அடுத்து, இந்தக் கொலையில் அவரது சகாவாக செயற்பட்டவரும், ஈ.பி.டி.பியின் நுணாவில் முகாமைச் சேர்ந்தவருமான ஜீவன் என்பவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தை சாவகச்சேரி நீதிவான் பிறப்பித்தார்.

படுகொலை செய்யப்பட்ட மாணவனின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து உறவினர்களிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனைகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.

இதனையடுத்து சடலம் சாவகச்சேரி பெரியரசடியிலுள்ள அவரது வீட்டுக்கு நண்பகல் 12.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டது.

பெற்றோர், உறவினர்கள், கொலையுண்டவரின் சக மாணவர்கள் மற்றும் அங்கு கூடியிருந்த அனுதாபிகள் அஞ்சலி செலுத்தினர். கற்பூரம் கொளுத்தி இறுதி மரியாதை செலுத்தப்பட்டு சடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

உற்றார், உடன்பிறப்புகள் கதறியழ எடுத்துச்செல்லப்பட்ட கபிலநாத்தின் சடலம் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நேற்றுப் பிற்பகல் அடக்கம் செய்யப்பட்டது.

மாணவனின் சடலம் வீட்டில் வைக்கப் பட்டிருந்த போதோ, மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைக்கப்பட்ட போதோ பேழை திறக்கப் படவில்லை. வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டவாறே அடக்கம்செய்யப்பட்டது.

நேற்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் மாணவர்களும் அந்த ஊரைச்சேர்ந்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன் உட்பட்டபலர் பங்கேற்றனர்.

சமூகசேவைகள் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.

(அ-1-207)

## பொன்சேகாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது கணவரின் இருதயத்திற்கு மிக அருகில் இரும்புக் குண்டுகள் இருக்கின்றன. அவருக்கு தடிமல், சளி போன்ற நோய்கள் வருவது உகந்ததல்ல. அது ஒரு சாதாரண மனிதருக்கு வரும் நோயாக அமையாது என்று வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறான நோய்கள் அவரைத் தாக்காதிருப்பதற்காகவே சுத்தமான காற்று வசதியுள்ள இடம் அவருக்குத் தேவை என்று நாம் கூறினோம். அதற்கு அரசு ஏதேதோ கதை சொன்னது.

எனது கணவரின் உடல் நிலையைச் சோதித்துப் பார்ப்பதற்கு கணவரின் உடல் நிலை குறித்து நன்கு பரிச்சயமான வைத்தியர்கள் விரும்புகின்றனர். அதற்காக அரசிடம் அனுமதி பெற்றுத்தருமாறு அவர்கள் என்னிடம் கேட்கின்றனர்.

நான் எனது சக்திக்குட்பட்டு அந்த வைத்தியர்களை எனது கணவரிடம் அழைத்துப் போக முயற்சி செய்து வருகிறேன். எனது கணவரின் உடல் நிலைமை வழமைக்குத் திரும்பவேண்டி நாம் திங்கட்கிழமை (இன்று) நாடளாவிய ரீதியில் சமய வழிபாடுகளை நடத்துகின்றோம். - என்றார்.

(அ-சி)

## மாணவன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

யாழ். குடாநாடு இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் தருணம் பார்த்து மிகக் கொடுமையான முறையில் நடத்தப்பட்டிருக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனான திருச்செல்வம் கபிலநாத் படுகொலை யாழ். குடாநாட்டை மறுபடியும் வன்முறைக் கலாசாரத்தை நோக்கித் திசை திருப்பிவிடும் செயலாகும். இப்படுகொலைச் சம்பவம் தேர்தல் கால வன்முறைச் சம்பவங்களோடு தொடர்புபட்ட ஒரு நிகழ்வாகவே தெரிய வந்துள்ளது.

மக்களின் வாழ்நிலையில் மாற்றங்களை உருவாக்குவதற்காக நடத்தப்படும் தேர்தலில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் தீயசக்திகளும் போட்டியிடும் செயலானது சமூக விரோதச் சக்திகளுக்கு வேட்பாளர்கள் என்ற அந்தஸ்தைக் கொடுக்கும் ஆபத்து நிறைந்த செயலாகும்.

கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாணவனின் மீது கொலை வெறியாட்டம் நடத்தியவர்கள் வெளிநாடொன்றிலிருந்து வந்தவர் தலைமையில் யாழ். தேர்தல் களத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளர்களே என்பது விசாரணைகளின்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கடத்தப்பட்டிருந்த மாணவனின் தந்தையாரான வர்த்தகர் திருச்செல்வம் ஏற்கனவே தனது மகனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு தன்னிடம் வந்திருந்தமையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எடுத்துக் கூறியதோடு, இச் சம்பவத்தில் ஈடுபட்ட சமூக விரோதச் சக்திகளை பாரபட்சமின்றி நீதி விசாரணைக்கு டுத்த வேண்டும் எனறும் சட்டம், நீதி, ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இதுபோன்ற கொடூரமான செயல்கள் தொடர்ந்தும் நடவாது பாதுகாப்பதற்காகத் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்றும் பணிப்புரை விடுத்துள்ளார்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)


**தவறிவிட்டது**

சங்கரலிங்கம் புவனேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (305100268 V), விசேட அ.அட்டை, வங்கிப்புத்தகம் என்பன 23.03.2010 அன்று பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

சிற்றிசன் போய்ஸ் செலக்ஷன் அன் ரெயிலறிங்,
இல. 1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776143301

**விசேட சலுகை**

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட மாணவர்கள் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை 10X15அளவுகளில் பிரதியாக்கம் செய்வதற்கு ரூபா 60 மட்டுமே.

மூர்த்தி டிஜிடல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

BIT @ MIS
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
74, Sabapathy Lane, Thalaiyaali, Pirampadi, Jaffna
TPNo:- 0776577359, 0213216083 Director

**யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்
**BIT**
பயிற்சி நெறி இப்போது...
யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...
விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010
ESOFT The Leader in Professional ICT Education
114, Navalar Road,Jaffna.
Call @ 021 222 4142
077 309 9 308

**LAVA HOSPITAL**
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

**Royal Veterinary Clinic (Private)**
றோயல் கால்நடை வைத்தியநிலையம் (தனியார்)
மேற்படி நிலையம் தனது சேவையை பின்வரும் முகவரியில் ஆரம்பித்துள்ளது.
பழைய தபால் நிலையம்,
திருநெல்வேலிச் சந்தி பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
இந் நிலையம் சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்

**பொது வைத்திய சேவைக்கு ஆள்களைத் தெரிவு செய்தல்**

அப்பலோ வைத்திய நிலையத்தின் இணை மருத்துவ நிலையத்திற்கு ( Win West Clinic) கங்காதரன் வைத்திய நிலையம்) பின்வரும் வேலையாள்கள் தேவை:

1] வரவேற்பாளர்
2] மருந்தாளர்
3] தாதிய உத்தியோகத்தர்
4] மகப்பேற்று தாதிய உத்தியோகத்தர்
5] தாதிய பயிலுநர்
6] உதவியாளர்

விரும்புவோர் தங்களது கல்வித்தகைமை தொழில் ரீதியான சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தருமாறு கேட்டுகொள்கின்றோம்.

இடம்: அப்பலோ வைத்தியநிலையம், இல.16, பலாலி றோட், யாழ்ப்பாணம்
காலம்: 30.03.2010 காலை 8 மணிக்கு
குறிப்பு: நிர்வாகம்

Dr.கங்காதரன் வைத்திய நிலையம் ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

**நாடாளுமன்றத் தேர்தல் - 2010**



★போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி மேலதிக மருந்தாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பித்தவர். அனர்த்தங்களின்போது பாதிக்கப்பட்டவர்களுடன் நின்றவர்.
★சுனாமி தாக்கியபோது சுனாமி செயலணியின் இணைப்பாளராக கடமையாற்றி உடனடி நடவடிக்கைகளை இணைத்து முன்னெடுத்தவர்.
★வன்னி இடப்பெயர்வின்போது அரசசார்பற்ற நிறுவனங்களூடாக உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தினூடான உதவிகளிலும் பங்கேற்றவர்.
★தமிழ்த் தேசியத்திற்கான தாயக தன்னாட்சிக்கான விட்டுக்கொடுப்பற்ற பயணிப்பு.

சீ.வி.கே.சிவஞானம்
X
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.